பக்கங்கள்: 28
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 42 மார்கழி 24ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 08 ஜனவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2049

**114கிலோ கேரளா கஞ்சா வடக்கில் மீட்பு**

விரிவு - பக்.10

# வடக்கின் ஆளுநராக சுரேன் ராகவன் நியமனம்

## அரச தலைவர் முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணம், ஜன.8
வடக்கு மாகாணத்துக்கு நேற்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் புதிய ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய 3 மாகாணங்களுக்கும் நேற்று புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.
வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக கலாநிதி சுரேன் ராகவன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்று அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.
வடக்கு மாகாண ஆளுநராகப் பணியாற்றிய குரே கடந்த மாத இறுதியில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அவர் பதவி விலகியிருந் தார். தற்போது புதிய ஆளுநராகச் சுரேன் ராகவன் நியமிக்கப்பட்டுள்ளார்.
இவர் அரச தலைவர் ஊடகப் பிரிவின் முன்னாள் பணிப்பாளராவார். இவர் அரச தலைவரின் ஆலோசகராகவும் செயற்பட்டிருந்தார். 2005ஆம் ஆண்டு கென்ட் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் எம்.ஏ. பட்டம் பெற்றார். 2008ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தை நிறைவு செய்தார். 2008-2011 ஆண்டு காலப் பகுதியில் அவருக்குப் பிரிட்டன் அரசின்

>> 06



# புதிய அரசமைப்புக்கு மகா சங்கம் எதிர்ப்பு!

## மக்களைத் திரட்டிப் போராடுவோம் என்றும் கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஜனவரி 8
புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு மகா சங்கத்தினர் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். புதிய அரசமைப்புக்கு எதிராக மக்கள் போராட வேண்டும் என்றும், அதற்காகத் தாம் மக்களை வழிநடத்துவோம் என்று தெரிவித்துள்ளனர். மகா சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் தேரர்கள் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.
புதிய அரசமைப்பை உருவாக்கி அதன் மூலம்நாட்டைப்பிளவுபடுத்த முயற்சிக்கின்றனர். இவ்வாறு செயற்படும் பிரிவினைவாதிகளால் ஒருபோதும் நல்லிணக்கம் ஏற்படப் போவதில்லை. மீண்டும் போர், கொலை என்பவையே தலைதூக்கும் என்று கொடபொல அமரகீர்த்தி தேரர் தெரிவித்தார்.

>> 06

## வடக்கின் புதிய ஆளுநர் நாளை கடமையேற்பார்

யாழ்ப்பாணம், ஜன. 8
வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி சுரேன் ராகவன் நாளை 9ஆம் திகதி தனதுகடமைகளைப்பொறுப்பேற்கவுள்ளார். இந்தத் தகவலை அவரே உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.
வடக்கு மாகாண ஆளுநராகப் பணியாற்றிய குரே கடந்த மாத இறுதியில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன

>> 06



## இந்திய மீனவர்கள் 4 பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜன.8
நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.
நேற்று மாலை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்த படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் தமிழகத்தின் ஜெகதாசப்

>> 06

## மகிந்தவைச் சிறையிலடைக்க யஸ்மின் சூக்கா தீவிர முயற்சி!

### குற்றஞ்சாட்டுகின்றது பெரமுன

கொழும்பு, ஜன.8
மகிந்த ராஜபக்ச மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரைப் பன்னாட்டு நீதிமன்றில் நிறுத்தி அவர்களைச் சிறையில் அடைப்பதற்கு மனித உரிமைச் செயற்பாட்டாளர் யஸ்மின் சூக்கா திட்டமிட்டுள்ளார்.

>> 06

## போரில் இறந்தவர்களை கணக்கெடுக்க ஏற்பாடு

### ஒத்துழைப்பு வழங்க கோரிக்கை

கொழும்பு, ஜன.8
இலங்கையின் உள்நாட்டு மோதலின் இறுதி தருணங்களில் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கையை உறுதிப்படுத்துவதற்கான

>> 06

## வெள்ள இடரால் தவிக்கும் முகமாலை தெற்கு மக்கள்



கிளிநொச்சி, ஜன.8
வெள்ள இடர் ஏற்பட்டு 15 நாள்கள் கடந்துள்ள போதும் முகமாலையில் இன்னமும் வெள்ள நீர் தேங்கியுள்ளது. மக்கள் வீடுகளுக்கு மீளத் திரும்ப

>> 06

## மைத்திரி செய்ததை பாராட்டினார் ரணில்

கொழும்பு, ஜன.8
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்கச் சபைகளின் தலைவர்களையும், பணிப்பாளர் சபை உறுப்பினர்களையும் நியமிப்பதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ள நடவடிக்கையைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பாராட்டியுள்ளார்.
அலரிமாளிகையில் நேற்று முன்தினம் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துள்ளார். அதன்போதே

>> 06

## விளையாட்டு பயிற்சியாளர் நியமனத்துக்கு அனுமதி

கொழும்பு, ஜன.8
அரச பாடசாலைகளுக்கான விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

>> 06

## வரவு - செலவு திட்ட வரைவுக்கு அமைச்சரவை நேற்று ஒப்புதல்

### நாட்டின் வரலாற்றில் மிகப்பெரும் பாதீடு என்று மங்கள தெரிவிப்பு

கொழும்பு, ஜன.8
2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட வரைவுக்கு நேற்று அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.
இலங்கை வரலாற்றில் முதன்முறையாக மிகப் பெரும் வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி முன்மொழியப்பட்டுள்ளது என்று நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
2019ஆம் ஆண்டில் அரச செலவீனமாக 4 ஆயிரத்து 550 பில்லியன் ரூபா முன்மொழியப்படுகிறது. அரச இறை வருமானமாக 2ஆயிரத்து 390 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. கடன் சேவைக்காக 2 ஆயிரத்து 200 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது என்றும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

>> 06

### வடக்கு - கிழக்கு

## வாழ்வாதார அபிவிருத்திக்கு ரூபா 2 ஆயிரம் மில். ஒதுக்கீடு

### அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 8
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்வாதார அபிவிருத்திகளை முன்னெடுக்க 2 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யக் கோரும் அமைச்சரவைப் பத்திரம், அமைச்சரவைச் செயலகத்துக்குச் சமர்பிக்கப்பட்டுள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இயங்கும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் ஊடாக, அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது என்று தெரியவருகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு கடந்த மாத இறுதியில் இடைக்காலக் கணக்கு அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றியிருந்தது. இதனூடாக 2 ஆயிரம் மில்லியன் ரூபா, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழ்வாதார அபிவிருத்திகளை முன்னெடுக்க நிதி ஒதுக்குமாறு கோரியே அமைச்சரவைப் பத்திரம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் ஒப்பத்துடன் இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்பிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## வடக்கு - கிழக்கு வீடமைப்பு தைப்பொங்கலுடன் ஆரம்பம்

### அமைச்சு வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 8
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 50 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம் 2017ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்டிருந்தது. மிக நீண்ட இழுபறியின் பின்னர் இந்தத் திட்டம் எதிர்வரும் தைப்பொங்கலுடன் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்று தலைமை அமைச்சர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாக வீட்டுத் திட்டப் பணிகளை ஆரம்பிக்குமாறு பணித்துள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

முதல் கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்துக்கும் எத்தனை வீடுகள் ஒதுக்கப்படவுள்ளன என்ற விவரங்கள், மாவட்டச் செயலர்களுக்கு இன்றைய தினம் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொருத்து வீடுகளை அமைக்கும் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்பால் அது இடைநிறுத்தப்பட்டது. கல்வீடுகளை அமைக்கும் யோசனை முன்வைக்கப்பட்டு அதற்குரிய முயற்சிகள் எடுக்கப்பட்டன. கடந்த ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலால் வீடமைப்புத் திட்டம் தாமதமடைந்தது. அதன் பின்னர் இந்தப் பணிகளை எந்த அமைச்சு ஊடாக முன்னெடுப்பது என்ற அரசியல் குழப்பம் காரணமாக இழுபறி நிலை நீடித்தது.

ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி மகிந்த தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட அரசியல் குழப்பம் முடிவுக்கு வந்த பின்னர், இந்தப் பணிகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-5)

## அமைச்சரவை சிக்கலை பேசியே தீர்க்க முடியும்

### சுஜீவ சேனசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 8
அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களை நியமிப்பதில் எழுந்துள்ள சிக்கல் நிலைமைக்குக் கலந்துரையாடல்கள் மூலமே தீர்வைப் பெறலாம். இல்லாவிட்டால் நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் சுஜீவ சேனசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கூட்டு அரசு உருவாக்கப்படுமானால் சட்டரீதியாக அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். தனிக் கட்சி ஆட்சி அமைத்தால் அமைச்சுக்களின் எண்ணிக்கையை 30 ஆக வரையறுக்க வேண்டும்.

பொதுவாகக் கூறுவதானால் அமைச்சரவை நியமனம் சிக்கலுக்குரிய விடயம். அனைவரும் இணைந்து கலந்துரையாடியே இறுதி முடிவை எடுக்க வேண்டும் - என்றார். (எ-31)

# அரசமைப்பை எதிர்க்குமாறு எம்.பிக்களை வலியுறுத்துக

### மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.8**
**அரசமைப்பைத் தோற்கடிக்க வேண்டும் என்று ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீட்டுக்கும் சென்று மக்கள் வலியுறுத்த வேண்டும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

ஆனமடுவ பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாங்கள் கடன் பெற்றோம் என்று கூறுகின்றனர். நாங்கள் எதற்குக் கடன் பெற்றோமென நாட்டு மக்களுக்குத் தெரியும். தற்போதும் கடன் பெறப்பட்டுள்ளது. மத்திய வங்கி சூறையாடப்பட்டுள்ளது. ஆனால் என்ன செய்தனர் என்று எவருக்கும் தெரியாது.

நாம் பெற்ற கடன் தொகையை இவர்கள் வெறும் மூன்று வருடத்தில் பெற்றுள்ளனர். அரச தலைவருக்கும் ஒன்றும் செய்துகொள்ள முடியாதிருந்தது. நாடு பாரதூரமான நிலையை நோக்கி நகர்வதை கண்டுதான் அரச தலைவர் ஆட்சியமையுங்கள் என்று எமக்கு அழைப்பு விடுத்தார். இவ்வளவு காலம் இவர்கள் திறந்து வைத்திருந்த அபிவிருத்திகளும் எமது அரசில் செய்யப்பட்டவைதான்.

அரசமைப்பொன்றை கொண்டுவரவுள்ளனர். அதனை தோற்டிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரினதும் வீடு வீடாகச் சென்று வலியுறுத்தவேண்டும். குறிப்பாக ஐ.தே.கவினருக்கு கூற வேண்டும். தற்போது வரவு - செலவுத் திட்டமொன்று கொண்டுவரப்படவுள்ளது. அதில் மக்களுக்கு மானியம் வழங்க வேண்டும் ஏ்னறு பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றேன். வாழ்க்கைச்



செலவை குறைப்பதுடன் அரச சேவையாளர்களின் சம்பளத்தை அதிகரியுங்கள். அதை செய்யுங்கள். ஆனால் மீண்டும் அவர்கள் என்னதான் செய்தாலும் நாட்டு மக்கள் அதற்கு ஏமாற்றமடைய மாட்டார்கள் - என்றார். (எ-10)

## சிவபூமி என குறிப்பிட்டு மன்னாரில் சுவரொட்டி

மன்னார், ஜன.8
மன்னார் நகர மத்தியில் "சிவபூமி மதம் மாற்றிகள் நுழையாதீர்கள்" என்று குறிப்பிட்டு சிவசேனை என்ற அடிக்குறிப்புடன் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.




மன்னார் நகரின் மத்தியிலும், மன்னார் பொது விளையாட்டரங்கு போன்ற பகுதிகளிலும் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (எ)

## மாகாண சபை தேர்தலுக்கு மகிந்த அணியினரே தடை

### ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது

கொழும்பு, ஜன.8
மாகாண சபைகளுக்கான தேர்தலை எந்த முறையில் நடத்துவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி தயராகவே உள்ளது. மகிந்த அணியினரே கலப்புத் தேர்தல் முறைக்கு எதிர்ப்பு வெளியிடுகின்றனர். இவ்வாறு விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:
அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடி தேர்தல் முறை தொடர்பில் இறுதித் தீர்மானம் பெற்றுக் கொடுக்கப்படுமாயின் அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும்.

கடந்த காலங்களில் மகிந்த தரப்பினரே தேர்தல் முறைமையில் பிரச்சினையை உருவாக்கி மாகாண சபைத் தேர்தலைப் பின்தள்ள முயற்சிக்கின்றனர். புதிய தேர்தல் முறையையும் குறைகூறி அவர்களே எதிர்ப்பை வெளியிடுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபைத் தேர்தலை நடத்தத் தடையாக இல்லை - என்றார். (எ-31)

## மைத்திரியுடைய மனநலம் தொடர்பான மனு தள்ளுபடி

கொழும்பு, ஜன.8
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் மன நலத்தைச் சோதிக்க வேண்டும் என்று கோரும் மனுவொன்றை மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப் பொலிஸ் மா அதிபருக்குக் கட்டளையிடக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனுவை அடிப்படையற்றது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இந்த மனுவை விசாரணை செய்யும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றுக்குக் கிடையாது என்றும் கட்டளையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த மனுவால் பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்கு வழக்குச் செலவாக ஒரு லட்சம் ரூபாவை மனுதாரர் வழங்க வேண்டும் என்றும் மேன்முறையீட்டுநீதிமன்று உத்தரவிட்டது.

மன நலக்கோளாறு கட்டளைச் சட்டத்தின் 2ஆம் அத்தியாயத்துக்கு அமைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் மனநிலை ஆரோக்கியமான நிலையில் உள்ளதா என்பதைக் கண்டறிய மாவட்ட நீதிமன்றில் வழக்கொன்றை ஆரம்பித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பொலிஸ் மா அதிபருக்கு மேற்செல் எனும் நீதிப்பேராணை (மென்டாமுஸ் ரிட்) கட்டளையிட வேண்டும் என்று மனுதாரர் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் த்ாக்கல் செய்யப்பட்டது. சிவில் செயற்பாட்டாளரான தக்சிலா ஜயவர்தனவின் ஆலோசனையின் பேரில், சட்டத்தரணி சிசிர குமார சிறிவர்தனவால் இந்த நீதிப் பேராணை மனு கடந்த டிசெம்பர் 10ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டது.

மாவட்ட நீதிமன்றின் கட்டளைக்கு அமைவாக அங்கோடை மனநல ஆய்வகத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பரிசோதனைக்குட்படுத்தப்படவேண்டும் என்றும் மனுதாரர் கோரப்பட்டது. பொலிஸ் மா அதிபருடன் கோட்டை தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் எதிர் மனுதாரராகக் குறிப்பிடப்பட்டிருந்தனர். இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றால் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதைத் தொடக்க நிலையிலேயே தள்ளுபடி செய்யக் கோரி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர சார்பில் அவரது சட்டத்தரணிகளால் இடைபுகு மனு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் மேற்கண்டவாறு மேன்முறையீட்டு நீதிமன்று நேற்றுக் கட்டளை பிறப்பித்துள்ளது. (எ)

## கிளிநொச்சி மாவட்டத்துக்கு புதிய பொலிஸ் அத்தியட்சகர்

கிளிநொச்சி ஜன 8
கிளிநொச்சி மாவட்டத்தின் புதிய பொலிஸ் அத்தியட்சகராக ஜயந்த ரத்னாயக்க நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பொலிஸ் அத்தியட்சகராக இருந்த சமுத்த ஜீவவுக்கு யாழ்ப்பாணத்துக்கு மாற்றம் வழங்கப்பட்டுள்ள நிலையில் மொனராகலையில் கடமையாற்றிய ஜயந்த ரத்னாயக்க கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-6)

## கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைக்க கூட்டமைப்புக்குஐ.தே.கட்சிஉதவவேண்டும்

### அதன் முன்னாள் பிரதித் தவிசாளர் கோரிக்கை



மட்டக்களப்பு, ஜன. 8

எதிர்வருகின்ற கிழக்கு மாகாண சபையின் ஆட்சியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தக்கவைத்துக் கொள்ளும். அதில்மாற்றுக்கருத்துக்களுக்கும்இடமில்லை. தற்செயலாக அதற்கு ஆசனங்கள் போதாத நிலைவரின் ஐக்கிய தேசியக் கட்சி கைகொடுக்க வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண சபைக்கு 37 ஆசனங்கள். அதில் 20 ஆசனங்கள் இருந்தால்தான் ஆட்சியமைக்கலாம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கடந்தமுறை 11 ஆசனங்களை எடுத்திருந்தது. எதிர்வருகின்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புஅதிகஆசனங்களைப்பெற்றுக் கொள்ளும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலமைச்சர் பதவியை வைத்துக் கொண்டு ஆட்சியமைக்கின்ற சந்தர்ப்பத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டால் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி கூட்டமைப்புக்கு ஆதரவழிக்கவேண்டும். மறுக்குமாக இருந்தால் அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் செய்யும் துரோகமாகத்தான் இருக்கும். 2015 ஆம் ஆண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்று வந்த அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேனகூட கடந்தமாகாணசபை ஆட்சியின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலமைச்சர் பதவியை பெற்றுக்கொள்வதற்குத் தடையாக இருந்தார்.

அவ்வாறு ஐக்கியதேசியக்கட்சியின்தலைவரும்தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க செயற்படுவாராக இருந்தால் அதற்குரிய பொறுப்பை எமது கட்சித் தலைமை தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அவ்வாறே சிறிலங்கா முஸ்லிம் காங்காங்கிரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளிக்கவேண்டும். 2012 ஆம்ஆண்டுகிழக்கில்ஆட்சியமைப்பதற்குஎமதுகூட்டமைப்பின் தலைவர் முஸ்லிம் காங்கிரசுக்கு அழைப்பு விடுத்திருந்தார். எமது 11 உறுப்பினர்களின் ஆதரவையும் தருகின்றோம்என்றார். அதனை ஏற்றுக் கொள்ளாத முஸ்லிம் காங்கிரஸ்அப்போதுசிறிலங்காசுதந்திரக்கட்சியுடன் இணைந்து ஆட்சியமைத்திருந்தார்கள். 2 வருடங்களின் பின்னரும் முஸ்லிம்காங்கிரசும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஆட்சியமைத்தன. அவர்களுக்குநல்லிணக்கத்தின் அடிப்படையில்ஒருசந்தர்ப்பத்தை வழங்கியிருந்தோம். - என்றார். (த-46)

# விலைபோகாத அரசியல்வாதிகள் மூலமாக வீடு வழங்கல் பிரச்சினைகளைச் சீராக்குவேன்

### வீடமைப்பு அமைச்சர் சஜித் மட்டுவில் வாக்குறுதி



**செங்கலடி, ஜன. 8**

**விலை போகாத மட்டக்களப்பு மாவட்ட அரசியல்வாதிகளை வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் காணப்படக்கூடிய வீட்டுத் திட்டப்பிரச்சினைகளைநூறு வீதம் நிவர்த்திசெய்து தருவேன் என்று வீடமைப்பு, கலாசார அமைச்சர் சஜித் பிரமேதாஸ தெரிவித்தார்.**

மட்டக்களப்பு கும்புறுமூலையில் செமட்ட செவன வீடமைப்புத்திட்டத்தில் பழமுதிர்ச்சோலை கிராமத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மாவட்டச் செயலர் மா. உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன்மற்றும் வீடமைப்பு அதிகாரசபை மாவட்ட முகாமையாளர்கே.ஜெகநாதன்உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

அங்குஅமைச்சர்சஜித்மேலும்தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமல் மக்கள் மத்தியில் ஆதரவு இல்லாமல்அரசியல்யாப்பைப்புறந்தள்ளிவிட்டு ஜனநாயகத்தைக் குப்பைக்கூடையில்போட்டுவிட்டுதிருட்டுத்தனமாக ஆட்சியைப்பிடிக்க வந்தவர்களை ஜனநாயக வழியில் நாங்கள் துரத்தியடித்துவிட்டோம்.

கடந்த காலங்களில் இந்த நாட்டைச் சூறையாடியவர்கள் குறுகிய காலத்துக்குள் கள்ள வழியில் தலைமைஅமைச்சர் பதவியைக் கைப்பற்றிக்கொண்டு கள்ளத்தனமான அமைச்சுக்களை உருவாக்கிவிட்டு மீண்டுமொருமுறை நாட்டைச்சூறையாடத்தயாரானார்கள்.

அந்தக் கள்ளர் கூட்டத்தை ஜனநாயக வழியில் மக்களின் செல்வாக்கு மூலம் நாங்கள் துரத்திவிட்டோம்.

எமது அரசு கள்ளத்தனமாக ஒப்பந்தங்களைச்செய்துள்ளதுஎன்றுதிருட்டுத்தனமாக ஆட்சியைக் கைப்பற்ற நினைத்தவர்கள் தற்போது கூறிவருகிறார்கள். நாங்கள் எப்போதும் மக்களின் நலன் சார்ந்து ஒப்பந்தங்களைச் செய்து அவர்களின் நலன் சார்ந்து சிந்திப்பவர்கள். வீதிகளைச்சீரமைப்பது, கடற்றொழிலாளர்களுக்கு வளமான வாழ்க்கையை ஏற்படுத்துவது, விவசாயிகளை மேன்மையடையச் செய்ய வேண்டும் என்பதற்காகமக்கள்மத்தியில்சென்றுஒப்பந்தங்களைச் செய்துள்ளோம்.

கூட்டரசைத்தோற்கடிப்பதற்காகச்சிலர் நிதி மோசடி, பதவி மோசடி, அபிவிருத்தி மோசடிஒப்பந்தங்களைச்செய்தார்கள். அவர்கள் சொந்த குடும்பங்களின் வயிறுகளைவளர்ப்பதற்காகவும்ஒப்ந்தங்களைச்செய்தார்கள். இவர்கள்நாட்டைப் பற்றிச் சிந்திக்கவில்லை. கள்ள ஒப்பந்தங்களைச் செய்தவர்களை நாட்டில் மக்கள் அடையாளம் கண்டார்கள். அவர்களைமக்களின்சக்தியைப்பயன்படுத்தி ஜனநாயக ரீதியில் ஓரம்தள்ளி அவர்களின் கள்ள ஒப்பந்தங்களைக் கிழித்துக் குப்பையில் போட்டுவிட்டோம்.

எனது தந்தை இந்த நாட்டின் வளர்ச்சிக்காக உழைத்து உயிர்த்தியாகம்செய்தவர். அந்தவழியில்நானும்இந்தநாட்டிலுள்ளஅனைவருக்கும்முழுமூச்சாகப் பணியாற்றுவேன் - என்றார்.

ஒவ்வொரு பயனாளிக்கும் 13 பேர்ச் காணியை அரசு இலவசமாக வழங்கியிருந்தது. ஒவ்வொரு வீடும் பயனாளிகளின்மூன்றுலட்சம்ரூபாபங்களிப்புடனும், வீடமைப்பு அமைச்சின் ஐந்து லட்சம் ரூபா மானிய நிதிப் பங்களிப்பிலும் அமைக்கப்பட்டது.

நிகழ்வில் 20 பயனாளிகளுக்கு அபிவிருத்தி செய்யப்பட்ட காணித்துண்டுகள் வழங்கல், ஒருலட்சம்ரூபாவீதம்கடன்களுக்கானபணம்நூறுபேருக்கும், 321 பயனாளிகளுக்கு வீடமைப்பு உதவி ஐந்து இலட்சம் ரூபாவும், 25 பயனாளிகளுக்கு வீடமைப்புக் கடன் ஐந்து இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டன.

பழமுதிர்ச்சோலை நகர் வீடமைப்புத் திட்ட20பயனாளிகளுக்குவீட்டின்ஆவணப் பத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டன. வாழைச்சேனைப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 200 பேருக்கு மூக்குக்கண்ணாடிகள், கலைஞர்கள் மூவருக்கு மருத்துவச் செலவுக்காக 25ஆயிரம் ரூபாவும் கலாசார அலுவல்கள் அமைச்சால் வழங்கப்பட்டன. (த-46)

## புதிய அரசமைப்புக்கான சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றுக்கு வரும்

### அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 8

புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழு மூலமாகத்தற்போது அதற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அது விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இவ்வாறு அமைச்சர் ராஜித தெரிவித்தார்.

பேருவளைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபின்னர்ஊடகங்களுக்குக்கருத்து வெளியிட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டமூலம்தயாரிக்கப்பட்டபின்னர்நாடாளுமன்றில்சமர்ப்பிக்கப்பட்டுவிவாதம்நடத்தப்படும். அனைத்து உறுப்பினர்களுக்கும், கட்சிகளுக்கும் தமது நிலைப்பாடுகளை தெளிவுப்படுத்த முடியும்.

நிறைவேற்று அரச தலைவர் முறையை ஒழித்துப் பெயரளவில் அதிகாரம் உள்ள அரச தலைவர் முறை அறிமுகப்படுத்தப்படும். தலைமைஅமைச்சர்அதிகாரம்மிக்கவராகவும், நாடாளுமன்றத்துக்குப்பொறுப்புக் கூறுபவராகவும் காணப்படுவார். மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும். வடக்கில் இருந்து ஒரு கட்சி ஒற்றையாட்சிமுறையை ஏற்றுக்கொண்டுள்ளது. இது மிகவும் சிறந்த சந்தர்ப்பம். வடக்கின் கட்சியொன்று சனநாயக ரீதியில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. அதனாலுயே இந்தநடவடிக்கையை முன்னெடுக்க முடிந்துள்ளது - என்றார். (த)

# பன்னாட்டு மரபுரிமையாக திரிபீடகத்தை மாற்றுங்கள்

### யுனெஸ்கோவிடம் மைத்திரி கோருவார்



கொழும்பு, ஜன. 8

திரிபீடகத்தை உலக மரபுரிமையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யுனெஸ்கோ அமைப்பின் ஊடாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம் கோரிக்கை முன் வைக்கவுள்ளோம்.

என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

திரிபீடகத்தை தேசிய மரபுரிமையாக அறிவிக்கும்தேசிய நிகழ்வு கொழும்பில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில்அரசதலைவர்மேற்கண்டவாறுகூறினார்என்றுஅவரது ஊடகப்பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கி.மு. 3ஆம்நூற்றாண்டில்மகிந்ததேரரின் இலங்கைப் பயணத்தால் எமக்குக் கிடைக்கப்பெற்ற தேரவாத பௌத்த தர்மத்தை பல நூற்றாண்டுகளாகஇலங்கையில்வாழ்ந்த பிக்குகள்வாய்ப்பாட்டினால்பாதுகாத்துவந்தனர். கி.மு. முதலாம் நூற்றாண்டில் வலகம்பா மன்னனின் ஆட்சிக் காலத்தில் மாத்தளை அலுவிகாரையில் நூலாகத் தொகுக்கப்பட்டது. சுமார் 2000 வருடங்களுக்கு முன்னர் வலகம்பா மன்னனின் ஆட்சிக் காலத்தில் திரிபீடகம் எழுத்து வடிவம் பெற்றது.

மாத்தளை அலுவிகாரையில் திரிபீடகத்தை நூலில் எழுதியதால் பௌத்த மதத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. திரிபீடகத்தைத் தேசிய மரபுரிமையாக அறிவிப்பதன் அர்த்தம் அது சிங்கள மக்களுக்கு மாத்திரம் உரித்தானதல்ல. தேசியம் என்பதின் அர்த்தம் இலங்கையர் என்பதே.

திரிபீடகத்தை தேசிய மரபுரிமையாக மாற்றியமை அதற்குச் சட்டப் பாதுகாப்பையும் வழங்கலாம் என்பதே. சிலர் சுய இலாபத்துக்காகத் திரிபீடகத்தைத் தவறான முறையில்விவரித்துபுத்தகங்கள்வெளியிட்டுள்ளனர். திரிபீடகத்தில் சில பாளி சொற்களுக்கு தவறான அர்த்தங்களைச் சூட்டியுள்ளனர். தற்போது திரிபீடகத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும்தவறானநடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்கே அரசு இந்த விடயத்தில்தலையிட்டது. இனிவரும்காலங்களில் பாளி மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்களுக்கு மாத்திரமே திரிபீடகத்தை திருத்துவதற்கோ மொழி பெயர்ப்பதற்கோ அனுமதி வழங்கப்படும்.

'தர்மநெறியில்வாழ்பவனைதர்மமேகாக்கும்' நாம் அந்த வழியையே பின்பற்றி வருகிறோம் என்றுள்ளது. (த)

## இருதரப்புக் கருத்து மோதல்களை பொதுவெளியில் கதைக்காதீர்கள்

### சரத், ரங்கேபண்டாரவுக்கு ரணில் பணிப்பு



கொழும்பு, ஜன. 8

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தநாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் பொன்சேகா, பாலித ரங்கே பண்டாரஆகிய இருவருக்கும் இடையில் ஏற்பட்டுள்ளகருத்து மோதல்களைப் பொதுவெளியில்பரப்புரைசெய்வதைநிறுத்துமாறுதலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கபணித்துள்ளார்என்றுதெரியவருகிறது.

ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும்சரத்பொன்சேகா, ரங்கேபண்டார இருவரும் தமக்கிடையேயான கருத்து மோதல்களை ஊடகங்கள் வாயிலாகப் பகிரங்கப்படுத்தி வந்தனர். இந்த விவகாரம் ஐ.தே.கவுக்குள்பெரும்குழப்பநிலையைத் தோற்றுவித்துள்ளது. எனவே உடனடியாகக் கருத்து மோதல்களைத்தீர்த்துக் கொள்ளுமாறும், பொதுவெளியில் பகிரங்கக் கருத்து மோதல்களில் ஈடுபட வேண்டாமென்றும் ரணில்நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

# வைராக்கியத்தை ஏற்படுத்தும் அரசமைப்புத் தேவையில்லை!

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த கொந்தளிப்பு

**கொழும்பு, ஜன. 8**

**நாட்டுக்குத் தேவைப்படுவது இனங்களுக்கு இடையில் வைராக்கியத்தை ஏற்படுத்தும் அரசமைப்பு அல்ல, இனங்களுக்கு இடையில் சமத்துவத்தை ஏற்படுத்தும் அரசமைப்பே தேவை என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

அநுராதபுரத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. நாட்டைப் பிளவுப்படுத்தும் அரசமைப்பைக் கொண்டுவருகின்றனர். இனங்களை நாசமாக்கும் அரசமைப்பைக் கொண்டுவருகின்றனர். பலவந்தமாக அரசமைப்பை நிறைவேற்றிக்கொள்ள முடியாது. அனைத்து இனங்களையும் ஒற்றுமைப்படுத்தும் அரசமைப்புக்குப் பதிலாக இனங்களுக்கிடையில் வைராக்கியத்தையும், குரோதத்தையும் ஏற்படுத்தும் அரசமைப்புக் கொண்டுவரப்படுகிறது. அதில் அரசியல் தீர்வை எட்டமுடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் நாட்டைப் பிளவுபடுத்த முற்பட்டபோதும் பெரும் இழப்புகளுடன் நாட்டைக் காப்பாற்றியிருந்தோம். இன்று அதனை அரசமைப்பின் மூலமாகச் சாதிக்கப் பார்க்கின்றனர். அவர்களின் எண்ணங்கள் முட்டாள்தனமானவை. அவ்வாறான செயற்பாட்டுக்கு நாங்கள் அனுமதியளிக்க மாட்டோம் என்று மேலும் தெரிவித்தார். (கு)

---

பன்னாட்டு வர்த்தகத்துறை நிபுணர்களின் உதவியுடன்

## சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மீளாய்வு செய்ய அமைச்சு தீர்மானம்

கொழும்பு. ஜன. 8

உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த நடைமுறைச்சாத்திய ஆய்வுகளை வர்த்தகத் திணைக்களத்தில் உள்ள பன்னாட்டு வர்த்தகத்துறை நிபுணர்களின் உதவியுடன் மீளாய்வு செய்வதற்கு அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சு தீர்மானித்திருக் கிறது.

அமைச்சின் செயலாளர் எஸ்.ரி. கொடிக்கார இது பற்றி தெரிவித்ததாவது:

கடந்த வருடம் கைச்சாத்திடப்பட்ட இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மீது தெரிவிக்கப்பட்ட கடுமையான விமர்சனங்களை அடுத்தே இந்தத் தீர்மானத்துக்கு அமைச்சு வந்திருக்கிறது.

எதிர்காலத்தில் கைச்சாத்திடப்படக்கூடிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மூலமாக உச்சப்பட்ச பயன்களை இலங்கை பெறுவதை உறுதிப்படுத்துகின்ற அதே வேளை, தேசிய பொருளாதாரத்துக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் நோக்கிலேயே இந்த முன்முயற்சி இடம்பெறுகிறது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளில் பிரவேசிப்பதற்கு முன்னதாக நடைமுறைச்சாத்தியப்பாட்டு ஆய்வுகளை மீளாய்வுசெய்யத் தீர்மானித்திருக்கின்றோம்.

வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையை வகுப்பதிலும் ஒருங்கிணைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட சகல விவகாரங்களிலும் நிபுணத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனம் என்ற வகையில் வர்த்தகத் திணைக்களம் எதிர்காலத்தில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்யும்போது கூடுதல் கவனம் செலுத்தும். இந்தியாவுடனான உத்தேசப் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையால் இலங்கைக்குக் கிடைக்கக் கூடிய பயன்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கான பொறுப்பு பன்னாட்டு வர்த்தகத்துறை நிபுணர்கள் பலரிடம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் சாதக பாதகங்களை ஆராய்வதற்கு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் நியமித்த நிபுணர்கள் குழு சமர்ப்பித்திருக்கும் அறிக்கையைப் பரிசீலனை செய்வதற்கு மூன்றுபேரைக் கொண்ட நிபுணர் குழுவை அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம நியமித்திருக்கிறார்.

சிங்கப்பூருடன் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஆராய்ந்த பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஸ்மன் தலைமையிலான 5உறுப்பினர்களைக் கொண்ட குழு டிசெம்பர் 10 இல்அதன் அறிக்கையை மைத்திரியிடம் கையளித்தது. அந்த அறிக்கை தங்களுக்கு இன்னமும்உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை என்றாலும் அதைப் பரிசீலனை செய்வதற்குச் சட்டமா அதிபர் திணைக்களத்தையும் அபிவிருத்தி தந்திரோபாய மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சையும் சேர்ந்த அதிகாரிகளை உள்ளடக்கிய குழுவை அமைச்சர் சமரவிக்கிரம நியமித்திருக்கிறார் என்று கொடிக்கார கூறினார்.

சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மீளாய்வு செய்யவேண்டும் அல்லது முற்றாக ஒழிக்க வேண்டும்என்பதால் அதைத் தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் அமைச்சரவை உறுப்பினர்களிடமும் கேட்டிருப்பதாகவும் கொடிக்கார குறிப்பிட்டிருக்கிறார். (கு-61)

---

## திருகோணமலை பெருநகரத்திட்டம் தமிழர் அடர்த்தியை அழிக்கும் சதி!

### அதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று தமிழ்த் தலைமைகளிடம் கோரிக்கை

மூதூர், ஜன. 8

சிங்கப்பூரின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள திருகோணமலை பெருநகரத்திட்டம் (மெகாசிட்டி) திருகோணமலை நகரில் தமிழ் மக்கள் குடி அடர்த்தியை இல்லாதொழிக்கும் சதித் திட்டம். இந்தப் பெருநகரத்திட்டத்தைத் தடுப்பதற்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இணைந்து குரலெழுப்ப வேண்டும்.

இவ்வாறு திருகோணமலை நகராட்சிமன்ற முன்னாள் உறுப்பினர் சி. நந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

திருக்கோணமலை நகரம் இரண்டு வழிகளில் முக்கியத்துவம் பெறுகிறது. முதலாவது திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் அதிக சனத்தொகையைக் கொண்ட இடம். மற்றையது இலங்கையில் இயற்கை வனப்பும், அழகும் கொண்ட நகராகக் காணப்படுகிறது.

இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்துமிடத்து மேற்கூறிய இரு முக்கியத்துவங்களும் இல்லாதொழிக்கப்படும். இங்கு பாரம்பரியமாக வாழும் தமிழ் மக்கள், தமது பாரம்பரியங்களை, நிலங்களை இழந்து வேறு இடங்களுக்குக் குறிப்பாக புறநகர் கிராமங்களுக்கு இடம்பெயர வேண்டிய இக்கட்டான சூழ்நிலை தோன்றும்.

தற்போது இந்தத்திட்டத்தை விரைவுபடுத்தி நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதாக எனக்குப் பல்வேறு தரப்பினரின் ஊடாக அறிய முடிகிறது.

இந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் ஒரு சிலர் திருகோணமலை மக்களுக்கு நன்மை கிடைக்கவுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். அப்படியானால் பெருநகரத் திட்டம் என்னென்ன அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கியுள்ளது? அந்தச் செயற்றிட்டங்களால் எமது மக்களுக்குக் கிடைக்கப்பெறும் பயன்கள் குறித்து வெளிப்படைத்தன்மையோடு மக்கள் மன்றத்தில் விவாதிக்க முன்வருமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (கு-40)

---

## அரசியல்வாதி வீட்டில் பொருத்தப்பட்டிருந்த மறைகாணிகள் திருட்டு

மட்டக்களப்பு, ஜன. 8

மட்டக்களப்பு கல்லடிப் பகுதியில் உள்ள தனது வீட்டில் பொருத்தப்பட்டிருந்த 2 மறைகாணிகள் (சிசிரிவி) திருடப்பட்டுள்ளன. ஒன்றுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டிருக்கிறது என்று அரசியல்வாதியான பெண்ணொருவர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்று அதிகாலை 3.20அளவில் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சேதமாக்கப்பட்ட மறைகாணியின் பதிவுகளை அவதானித்த பொழுது குற்றச் செயல் புரிந்தவரின் நடமாட்டமும் தோற்றமும் தெரிவதாக அவர் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (கு 46)

---

## அரசியல்கைதிகளை விடுவிக்க பெரும்பான்மையினரும் சம்மதம்

*இனியும் தாமதித்தால் பன்னாடுகள் நோக்கித் தள்ளப்படுவோம் அதன் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 8

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இதுவரை காலமும் தேசிய ரீதியில் வலுவாக வலியுறுத்தி வந்ததுடன், பல்வேறு போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தோம். அதனூடாக தமிழர் பிரச்சினையாக மட்டும் பார்க்கப்பட்ட அரசியல் கைதிகள் விடுதலை விவகாரம் தற்போது பெரும்பான்மை இனத்தவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அரசிடமிருந்து முன்னேற்ற மான எந்தத் தீர்வும் இதுவரை கிடைக்கவில்லை. இந்தநிலை தொடருமானால் அரசியல் கைதிகள் விவகாரத் துக்குத் தீர்வுகோரி நாங்கள் பன்னாட்டை நோக்கித் தள்ளப்படும் நிலை உருவாகும்.

இவ்வாறு அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது உள்நாட்டுப் பிரச்சினை என்று அரசு கருதுமாயின் அரசுதான் உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். எங்களைப் பன்னாடுகளை நோக்கித் தள்ளும் காரணியாக அரசு இருக்கக் கூடாது என்பதே எமது வேண்டுகோள்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய அர்ஜுன அலோசியஸ் பிணை வழங்கி விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு பிணை வழங்குவதற்கான நியாயங்கள் இருப்பதாக நீதிமன்றம் கருதியிருக்கின்றது. ஆனால் பல வருடகாலமாக விசாரணைகள் இன்றி. குற்றம் நிரூபிக்கப்படாமல் அரசியல் கைதிகள் என்ற பெயரில் பலர் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். நீதித்துறையும், சட்டங்களும் அனைவருக்கும் சமமானவை. நீதித்துறை அரசியல் கைதிகள் தொடர்பிலும் சிந்திக்க வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் குரல் எழுப்பியவாறு, அதன் கீழ் அரசியல் கைதிகளை விசாரணைகள் இன்றித் தடுத்து வைப்பதென்பது ஏற்றுக் கொள்ள முடியாதது.

நாடுமுழுவதுமுள்ள பெரும்பான்மையான சிங்கள மக்கள் சிறைகளில் உள்ள அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கருத்தைத் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளனர். அதேபோன்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதை ஆதரித்துள்ளார். அவர் மாத்திரமன்றி நாட்டில் அரசியல் நெருக்கடி நிலை ஏற்பட்ட போது மகிந்த ராஜபக்ச மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோர் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஆணைக்குழு ஒன்றை அமைத்தனர். தமிழர் பிரச்சினையாக மாத்திரம் பார்க்கப்பட்ட விடயம் கடந்த வருடத்தில் இந்தளவுக்கேனும் முன்னேற்றம் கண்டுள்ளது.

உள்நாட்டு விவகாரத்தில் பன்னாடுகளின் தலையீடு இருக்கக்கூடாது என்ற எண்ணத்தின் காரணமாகவே தேசிய ரீதியில் இந்தப் பிரச்சினையைக் கையாண்டு. தீர்வு பெற்றுத் தருமாறு கோரியிருந்தோம். எனினும் அரசு அதற்குச் செவிசாய்க்காமல் தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால் நாங்கள் பன்னாடுகளை நோக்கித் தள்ளப்படும் நிலை ஏற்படும் - என்றார். (கு-31)

---

## தமிழ்ச் சங்க தமிழோடிசை பாடல் கொழும்பில் 3 நாள்கள் இடம்பெறும்

கொழும்பு. ஜன. 8

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நிகழ்த்தும் தமிழோடிசை பாடல், தமிழிசை அளிக்கைகளும், ஆய்வரங்கமும், தலைக்கோள் வழங்கலும் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் எதிர்வரும் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

வரும் 18ஆம் திகதி இசைமாமணி ஊரிக்காடு அ.நடராசா அரங்கில் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா தலைமையில் நிகழ்வு நடைபெறும்.

வரும் 19ஆம் திகதி காலை ஆய்வரங்கு 9.30 மணிக்கு ஆரம்பமாகும். கொழும்புத் தமிழ்ச் சங்க புலமைக்குழுத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயரசா தலைமையில் கலைப் புலவர் க.நவரத்தினம் அரங்கில் "தமிழிசைச் செல்நெறிகள்" என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது.

சனிக்கிழமை மாலை 5மணிக்கு நிகழ்வு சங்கிதபூஷணம் இராசம்மா மரியாம்பிள்ளை அரங்கில் கொழும்புத் தமிழ்ச் சங்க நிதிச் செயலர் திரு.தம்பு சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வரும்20ஆம் திகதி "தமிழிசையில் செந்நெறிகள்" என்ற தலைப்பில் கருத்தரங்கு காலை 9.30 மணிக்கு பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் கலாநிதி ஆனந்த குமாரசாமி அரங்கில் நடைபெறவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை மாலை நிகழ்வு 5மணிக்கு நாதஸ்வர வித்துவான் கோவிந்தசாமி அரங்கில் கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச் செயலர் திரு.க.க.உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது என்று சங்கப் பொதுச் செயலர் க.உதயகுமார் தெரிவித்துள்ளார். (கு)

# இராஜாங்க அமைச்சர் அமீர் அலிக்கு எதிராக செங்கலடி விவசாயிகள் நேற்றுப் போராட்டம்

செங்கலடி, ஜன. 8

இராஜாங்க அமைச்சர் அமீரலிக்கு எதிராக மட்டக்களப்பு செங்கலடி விவசாயிகள் செங்கலடி நகரில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




மட்டக்களப்பு வாகனேரி நீர்ப்பாசன திட்டத்தை உறுகாம நீர்ப்பாசனத் திட்டத்திலிருந்து பிரிப்பதற்கு இராஜாங்க அமைச்சர் அமீரலி எடுத்துவரும் முயற்சியைக் கைவிடுமாறு வலியுறுத்தியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'விவசாயிகள் பிரிவதை எதிர்ப்போம், ஜனநாயகத்தைப் பாதுகாப்போம், சுயநலவாதிகளே எம்மை வாழவிடுங்கள், நீர்ப்பாசனத் திட்டம் பிரிவதைத் தடுப்போம், ஏர்பிடிக்கும் எம்மை ஏமாற்றாதீர்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்திய வாறும் கோசங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மத்திய நீர்ப்பாசன திட்டத்தின் கீழுள்ள வாகனேரி நீர்ப்பாசனத் திட்டம் பல வருடங்களாக உறுகாம நீர்ப்பாசனதிட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்திலிருந்து வாகனேரித் திட்டத்தைபிரிப்பதற்குஎந்தவொருவிவசாயிகளும் விரும்பாத நிலையில் புதிதாக நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சுப் பொறுப்பேற்ற அமீரலி தான்தோன்றித்தனமாக விவசாய அமைப்புகளிடம் எவ்வித ஆலோசனைகளையும் பெறாமல்வாகனேரித்திட்டத்தைப்பிரிப்பதற்குமுயற்சிக்கிறார்என்றுவிவசாயிகள்கருத்துத்தெரிவித்தனர்.

போராட்டமுடிவில்மாவட்டத்தின் (காணி) மேலதிகச் செயலர் நவரூபரஞ்சனி முகுந்தனிடம் கோரிக்கைகள்அடங்கியமனுவைக்கையளித்தனர்.

விவசாயிகள்தொடர்பானதிட்டங்களைகொண்டுவரும்போது சம்பந்தப்பட்டவர்களுடன் முதலில் கலந்து ஆலோசனை செய்ய வேண்டும். திட்ட முகாமைத்துவகுழு, மாவட்ட அபிவிருத்திக்குழு போன்றவற்றில் ஆராயப்பட்டு உரிய இலாகாக்களுக்கு அனுப்பப்பட்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுவழமை. ஆனால் தற்போது அமீர்அலி வாகனேரி திட்டத்தைப் பிரிப்பதற்குமுற்படுகிறார். இதனால்பலவிவசாயக் குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் நிலைஏற்படும். வாகனேரித்திட்டத்தைஉறுகாமத் திட்டத்திலிருந்து எந்தக் காரணம் கொண்டும் பிரிந்துசெல்ல கூடாது என்றும் தெரிவித்தனர்.

வாகனேரிதிட்ட முகாமைத்துவக்குழுவின் ஏற்பாட்டிவல் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழுள்ள 14 அமைப்புக்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ. யோகேஸ்வரன், ஞா. சிறிநேசன், இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் கி. துரைராசசிங்கம், முன்னாள் பிரதியமைச்சர் வி. முரளிதரன் (கருணா அம்மான்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்ததாவது:

மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் எந்தத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் இடமளிக்காது.

வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்தைப் பிரிப்பது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை குறித்து இராஜாங்கஅமைச்சர்அமீர்அலியுடன்கலந்துரையாடினேன். விவசாயிகளுடன் கலந்துரையாடி அவர்களின் விருப்பத்துக்கு ஏற்ப செயற்படுவதாகக் கூறினார்.

மக்களின்பிரச்சினைதொடர்பானஆர்ப்பாட்டத்துக்கு வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கு எதிராகக் கோசமிட முற்பட்டால் காணாமல்ஆக்கப்பட்டவர்களின்உறவுகளை ஒன்றுதிரட்டிஅவர்களுக்குஎதிராகஆர்ப்பாட்டம் செய்யும்நிலை ஏற்படும்.

**கருணாவுக்கு அருகதையில்லை**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யக் கருணாவுக்கு அருகதையில்லை. கருணா பல குற்றச் செயல்களில் ஈடுபட்டவர் என்பதை மறந்து செயற்படுகிறார். மகிந்த ராஜபக்சவின் அரவணைப்பில் இருப்பதால் பாதுகாப்பாக இருக்கிறீர்கள்.

நீதிக்குநீங்கள்பதில்சொல்லவேண்டும். நீங்கள் ஒருபோதும் தப்பிக்க முடியாது. உங்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும். எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத்தீர்க்க வேண்டும்என்ற கோரிக்கையை முன்வைத்தே நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கியுள்ளோம் - என்றார். (த-46)

# கிழக்குமாகாண ஆளுநரை மாற்றுங்கள் வடக்கு அவைத் தலைவர் கோரிக்கை!

யாழ்ப்பாணம், ஜன. 8

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பவர் இனக்குரோதமுடையவர். அதனால் ஐக்கியத்துக்கு வித்தான ஒருவரைஆளுநராக நியமிப்பதே சிறந்தது. அதனை அரசதலைவர் கருத்திற்கொண்டு கிழக்குக்கு வேறொருவரை நியமிக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் துணைத்தலைவருமானசீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஹில்புல்லா வடக்குகிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டால், இரத்த ஆறு ஓடும் என்று கடந்த காலங்களில் கருத்து தெரிவித்திருந்தார். இவ்வாறு கருத்துத் தெரிவித்த ஒருவரை கிழக்கு மாகாண ஆளுநராக நியமித்திருப்பது தொடர்பில் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூவின மக்களும் வாழும் கிழக்கு மாகாணத்தில்இனக்குரோதமுடையவன்என்றுதன்னை அடையாளப்படுத்திய ஒருவரை ஆளுநராக நியமித்திருப்பது ஐக்கியத்துக்கு வித்திடாது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த காலத்தில்சிங்களமொழிபேசும்ஆளுநரேநியமிக்கப்பட்டுள்ளார். தற்போது, தமிழ் பேசும் முஸ்லிம் ஒருவர்ஆளுநராகநியமிக்கப்பட்டுள்ளார். அது வரவேற்கத்தக்கது.

ஆளுநரைநியமிப்பது அரசதலைவரின் அதிகாரம். அது அவரின் உரிமை. கிழக்கு மாகாணத்தில் மூவின மக்களும் வாழ்கின்றனர்.

ஹில்புல்லா நியமிக்கப்பட்டதன் ஊடாக அங்கு இனக் குரோதத்தை வளர்க்கும் செயற்பாடே இருக்கும். ஆகவே, முஸ்லிம்ஒருவரைநியமித்திருப்பதுவரவேற்கத்தக்கது. ஆனால், தற்போது நியமிக்கப்பட்டுள்ளவரை ஐக்கியத்துக்கு வித்தான ஒருவராகப் பார்க்க முடியாது.

19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாணத்தில் அதிகாரங்களை அரசு நிறைவேற்றவில்லை. அதற்கு எதிராகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. மாற்றங்கள்நிகழவேண்டும். அந்த மாற்றம் தற்போது நிகழ்ந்துள்ளது. மேல் மாகாணத்தில் ஆளுநராக முஸ்லிம் நியமிக்கப்பட்டுள்ளார். முஸ்லிம் என்ற வகையில் அது வரவேற்கத்தக்கது.

கிழக்கில் ஏற்பட்ட மாற்றத்தின் அடிப்படையில் பார்த்தால், வடக்கிலும் ஒரு தமிழரை நியமிப்பதும் சிறந்தது. வடக்கிலும் தமிழர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் அரசதலைவர் கருத்திற்கொள்ள வேண்டும்.

**மிகப் பொருத்தமானவரை வடக்குக்கு நியமிக்கவும்**

அதேவேளை, வடக்குமாகாணத்துக்குநியமிக்கும் ஆளுநரை, மாகாணத்தின் நிர்வாகம் தொடர்பாகதெரிந்துகொண்டவராகவும், தமிழ் மக்களோடும், தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனும்ஒத்துழைத்துசெயற்படக்கூடியவராகவும் இருக்க வேண்டும். கூடுதலாக நாடாளுமன்ற உறுப்பினர்களையோ, கடந்துசென்றமாகாண சபை உறுப்பினர்களையோ கொண்டது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு. ஆகவே தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன்ஒத்துப்போகக்கூடிய அறிவாற்றல்நிறைந்த, சட்டம்சம்பிரதாயம்மற்றும் நிர்வாகம் தெரிந்த ஒருவரை தேர்ந்தெடுப்பது பெரிய பிரச்சினை அல்ல.

வடக்கு மாகாணத்துக்கு நியமிக்கப்படுபவர் தமிழ்மக்கள் அதிகாரப் பகிர்வை நோக்கிய அரசியல் நகர்வுக்குள் கூட்டமைப்பு இருக்கின்றதென்பதை உணர்ந்துகொள்ளக் கூடியவராக இருக்கவேண்டும். அதுசிங்களவராகஇருந்தாலும்கூட அவ்வாறான ஒருவரை நியமிப்பதே சிறந்தது -என்றார். (த-106)

## இராணுவப்பொலிஸாரால் நாமல்குமார கைதாவார்!

அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன உள்ளிட்டஉயர்மட்டப்பிரமுகர்களைப் படுகொலை செய்யும் சதிதொடர்பான தகவல்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்திய நாமல் குமார, இராணுவ பொலிஸாரால் கைது செய்யப்படவுள்ளார்.

நாமல் குமார 2009ஆம் ஆண்டு இலங்கை வானூர்திப் படையில் இணைந்து கொண்டு பயிற்சியின் போது தப்பிச் சென்றவர் என்றும், 2011ஆம் ஆண்டில், இராணுவத்தில் இணைந்து பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தபோது, தப்பிச் சென்றார் என்றும், குற்றப்புலனாய்வுப்பிரிவினர்கோட்டே நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்திருந்தனர்.

இராணுவத்தில் இணைந்து கொண்டபோது அவர்சமர்ப்பித்தகல்விச்சான்றிதழ்போலியானதுஎன்றும்அந்தஅறிக்கையில்கூறப்பட்டிருந்தது. இந்தநிலையில், இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள்மீது எடுக்கப்படும்ஒழுக்காற்றுநடவடிக்கைநாமல்குமாரவுக்கு எதிராகவும்மேற்கொள்ளப்படும்என்று இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவருக்கு எதிராக நடத்தி வரும் விசாரணைகள் நிறைவடைந்த பின்னர், அவர் கைது செய்யப்படுவர். (த)

## கூட்டமைப்பினர் எதிர்த்தாலும் தமிழ்மக்கள் ஆதரவளிப்பர்: இன்னும் நம்புகிறார் பஸில்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்காவிட்டாலும், தமிழர்கள் தமக்கான ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில்கடந்தசனிக்கிழமை ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சியில்வெள்ளத்தால்பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவப் பல்வேறு தரப்பினரும் முன்வந்துள்ளனர். நாமும் முன்னணி சார்பில் உட்கட்டமைப்புவசதிகளைமேற்கொள்ளமுன்வந்துள்ளோம். மக்களுக்குப் பயனுள்ள செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும்என்றேநாம்இந்தநடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம். நாம்தான்மீள்குடியமர்வைஅதிகமாக மேற்கொண்டுள்ளோம். 6மாதங்களிலேயே கண்ணி வெடிகளை அகற்றி, மக்களை குடியமர்த்தினோம், அந்தக் காணிகளை விவசாய நிலங்களாக மாற்றினோம். விவசாயம், மீன்பிடித்துறை என்பனவற்றை ஒரு வருடத்திலேயே அபிவிருத்தி செய்தோம்.

யாழ்தேவியை மீண்டும் ஆரம்பித்தோம். மின்சாரம், வீதி, குளங்கள் உள்ளிட்ட வசதிகளை வடக்கின் வசந்தம் செயற்றிட்டத்தின் ஊடாக மேற்கொண்டோம். இதில் எஞ்சியுள்ளவற்றை செய்யத்தான் தற்போதுள்ளவர்களால் முடியாதுள்ளது.

எல்லாவற்றையும் உடனடியாகச் செய்து முடிக்க முடியாது. இந்தக் குறையை நாம் அடுத்தமுறை வரும்போது இல்லாது நிவர்த்தி செய்வோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைக்காவிட்டால்கூட, தமிழர்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். எமது குறைகளை நாம் எதிர்க்காலத்தில் இல்லாது செய்வோம். இதற்கு எமது கட்சி தயாராகவே இருக்கிறது. முன்னணி என்பது புதியக் கட்சி. நாம் அனைவரும் குறைகளை நிவர்த்தி செய்து முன்னோக்கிச் செல்ல வேண்டும் - என்றார். (த)

## அரச பேருந்து சாரதி மீது நேற்று இரவு தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணிகளுடன் பயனித்துக் கொண்டிருந்த அரச பேருந்தை வழிமறித்து அதன் சாரதி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் நேற்று இரவு 7.15 மணியளவில் யாழ்ப்பாணம் ஆலடிச் சந்திப் பகுதியில் நடந்துள்ளது. வசாவிளானில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த அரச பேருந்துச் சாரதியே தாக்குதலுக்கு இலக்கானார்.

அரச பேருந்தின் பின்னால் அதே திசையில் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்தின் நடத்துநரே வழிமறித்து தாக்கியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. போட்டிபோட்டு பயணிகளை ஏற்றியதால் சம்பவம் இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ற-21,26,8)

## வடக்கின்...

புலமைப்பரிசிலும் வழங்கப்பட்டது. கனடா ஒன்டோரியோ பல்கலைக்கழகத்தின் ஓஎஸ் ஏ்பி விருதையும் பெற்றுள்ளார். தற்போது வரையில் ஒட்டாவா சென். போல் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராகவும் உள்ளார். ஒக்ஸ்வேர்ட் பல்கலைக்கழகத்தில் பௌத்த ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்கி அதன் பொறுப்பாளராகவும் இவர் செயற்பட்டுள்ளார். நேரடி அரசியலில் பெரும் அனுபவசாலி என்றும், பௌத்த சிந்தனைவாதி என்றும் கூறப்படுகின்றது.

பௌத்த துறவிகளுக்கும், போருக்குமான இடைத்தொடர்புகள் தொடர்பாக இரண்டு புத்தகங்களையும், வேறு சில புத்தகங்களையும் அவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, சப்ரகமுவ மாகாண ஆளுநராக மூத்த பேராசிரியர் தம்ம திஸாநாயக்கவும், ஊவா மாகாண ஆளுநராக கீர்த்தி தென்னக்கோனும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றுச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். தென் மாகாணத்துக்கு இதுவரை ஆளுநர் நியமிக்கப்படவில்லை. (எ-5)

## வடக்கின் புதிய...

வின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அவர் பதவி விலகியிருந்தார். இந்த நிலையில் புதிய ஆளுநராக கலாநிதி சுரேன் ராகவன் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நேற்று மாலை நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நாளை புதன் கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளேன் என்று கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார். (எ-5)

## இந்திய...

பட்டினத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்களத்தினிடம் ஒப்படைக்கப்பட்டனர். நீரியல் வளத் திணைக்களத்தினரால் அவர்கள் நேற்று இரவு ஊர்காவற்றுறை நீதிவானின் இல்லத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

படகின் இயந்திரம் பழுதடைந்த நிலையில் கடந்த இருநாள்களாகக் கடலில் அவதியுற்ற நிலையிலேயே நேற்று ரோந்து சென்ற கடற்படையினர் அவர்களை நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து கைது செய்துள்ளனர் என்று இந்திய மீனவர்களால் கூறப்படுகின்றது. (எ-21,8,26,105)

## மகிந்தவைச்...

இவ்வாறு குற்றஞ்சாடியுள்ளது சிறிலங்கா பொதுஜன பெரமுன.

பத்திரமுல்லை, நெளும்மாவத்தையில் உள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அந்தக் கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் இணைந்து சட்டத்துக்குப் புறம்பாகப் புதிய அரசமைப்பை நிறைவேற்ற வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரலில் ஐக்கிய தேசியக் கட்சி அரசு உள்ளது.

உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகள் முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான சதித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகச் செயற்படுவதற்கு எதிராக செயற்படுவதற்கு யஸ்மின் சூக்காவுக்கு நாடு கடந்த தமிழீழ அரசும், புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் கோடிக் கணக்கில் நிதி வழங்குகின்றன - என்றார். (எ-10)

## மைத்திரி...

அவர் பாராட்டியுள்ளார்.

அரச தலைவர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையின்படி செயற்பட வேண்டும் என்றும் அவர் பணித்துள்ளார்.

கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்கான தலைவர்களை நியமிக்கும்போது அவர்களுக்குரிய தகுதிகளைக் கண்டறிந்து பரிந்துரை செய்வதற்காக குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று அரச தலைவர் பணிப்புரை வழங்கியிருந்தார். இது தொடர்பான சுற்றறிக்கை அண்மையில் வெளியானது.

அரச தலைவரின் இரண்டு பிரதிநிதிகளும், தலைமை அமைச்சரின் இரண்டு பிரதிநிதிகளும், நிதியமைச்சின் இரண்டு பிரதிநிதிகளும் இந்தக் குழுவில் உள்ளடங்கள வேண்டும் என்று அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பபட்டுள்ளது. (எ-10)

## புதிய...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய அரமைப்புக்கு தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதிக்காகவே ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்கவுள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சிய அமைத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமிழ் மக்கள் மாத்திரமே வாக்களிக்கவில்லை என்பதை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

கூட்டமைப்புக்கு ஆதரவளிப்பதன் ஊடாக நாட்டை ஒன்பதாகப் பிரிக்க ஐக்கிய தேசியக் கட்சி துணைபோகக் கூடாது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பௌத்த குருமார்களைச் சந்தித்து வடக்கு, கிழக்கில் விகாரைகள் அமைப்பதற்கு எந்தத் தடையும் இல்லை என்று கூறியிருந்தார். அது வெறும் வாய் வார்த்தையாகவே உள்ளது. தலைமை அமைச்சர் இவ்வாறு பொய்யாகச் செயற்படுவது கவலைக்குரியதாகும்.

புதிய அரசமைப்புக்கு சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எவராவது ஆதரவளித்தால் அவர்கள் மனச்சாட்சி அற்றவர்களாகவே கருதப்படுவர். தற்போது மக்கள் ஆணை தொடர்ச்சியாக மீறப்பட்டு வருகின்றது. தேர்தலின்போது வாக்களித்த மக்கள் தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்றே கோரினார்கள். இராணுவத்தினர் மீது விசாரணை நடத்த வேண்டும் என்று கோரவில்லை.

புதிய அரசமைப்பு மக்களுக்காக உருவாக்கப்படவில்லை. ஜெனிவாவுக்கும், சம்பந்தனுக்காகவும், விக்னேஸ்வரனுக்காகவுமே உருவாக்கப்படவுள்ளது. மக்கள் இதற்கு எதிராகப் போராட வேண்டும். அதற்காக நாம் மக்களை வழிநடத்துவோம். என்றார்.

நாட்டில் முழுமையான சமவுடமை ஏற்படுத்திய 1978ஆம் ஆண்டு அரசமைப்பு இருக்கும்போது புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதங்கான அவசியம் எதுவுமில்லை. பிரிவினைவாதிகளுக்கு நன்மையைப் பெற்றுக் கொடுப்பதற்கே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று ஹேகொட விபஷி தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின் அரசியல் நெருக்கடி நிலவியபோது நீதித்துறை சுயாதீனமாகச் செயற்பட்டது. புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் வெளிநாட்டுத் தலையீடுகள் காணப்படாது என்று சபாநாயகர் தெரிவித்துள்ளார். அவ்வாறிருக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஐரோப்பியப் பிரநிதிகளுடன் ஏன் கலந்துரையாடினார்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் தினத்துக்கு முன்னர் புதிய அரசமைப்பின் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எண்ணியுள்ளோம் என்று ஐரோப்பியப் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, சபாநாயகர் கரு ஜயசூரிய ஆங்கில நாளிதழுக்குக் கருத்துத் தெரிவித்தபோது நாட்டில் அண்மையில் நிலவிய அரசியல் நெருக்கடிகளின்போது நீதித்துறை சுயாதீனமாகச் செயற்பட்டது. ஜனநாயகத்தை உறுதிப்படுத்தியது. புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போது வெளிநாட்டுத் தலையீடுகள் எவையும் அவசியமற்றவை என்று கூறியிருந்தார்.

நாட்டின் நீதித்துறை செயற்படும் என்றால் இராணுவத்தினர் மீதான போர்க் குற்றச்சாட்டை ஏன் பன்னாட்டு நீதிமன்றில் விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்பதே எமது கேள்வி. சபாநாயகர் குறிப்பிடுவதைப் போன்று இந்த விடயத்தைப் பன்னாட்டுத் தலையீடுகள் இன்றி அணுகுவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும்.

நாட்டில் தற்போது நல்லிணக்கம் ஏற்பட்டுள்ளது என்று கூறுகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சட்ட வரைபு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக சட்ட வரைவு, அரசியல் கைதிகள் தொடர்பான சட்டவரைபு என்பன உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வாறிருக்க இராணுவத்தினர் மீதான போர்க் குற்றச்சாட்டுக்களையும் உள்நாட்டு நீதிமன்றங்களின் ஊடாக முன்னெடுக்க அரசு ஏன் முன்வரவில்லை.

வடக்கு, கிழக்கில் காணப்படுகின்ற நீதிமன்றங்களில் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகள் மாத்திரமே உபயோகிக்க வேண்டும் என்ற ஏற்பாட்டை உருவாக்கியுள்ளனர். ஏனைய எந்தப் பிரதேசங்களிலும் அத்தகைய ஏற்பாடுகள் இல்லை. இவ்வாறு சிறிது சிறிதாகப் பிரிவினைவாதத்தை ஏற்படுத்த முயற்சித்துள்ளனர். அவர்கள் எதிர்பார்த்த எதுவுமே அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதனால்தான் தற்போது அரசமைப்பு ஊடாக நாட்டைப் பிரிக்க முயற்சிக்கின்றனர் - என்றார். (எ-31,61)

## வெள்ள...

முடியாத நிலைமை காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மாதம் 22ஆம் திகதி வெள்ள இடர் ஏற்பட்டது. மக்கள் இடம்பெயர்ந்தனர். தற்போது வெள்ள நீர் வடிந்து வரும் நிலையில் மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பி, அழிவுகளைச் சீர் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி, முகமாலை தெற்கில் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பாதிப்புக்குள்ளாகினர். தற்போதும் வெள்ளம் வற்றாதநிலையில் சுமார் 7 குடும்பங்கள் வீடுகளுக்குத் திரும்ப முடியாத நிலைமை காணப்படுகின்றது. அந்தக் குடும்பங்கள் தற்போது உறவினர்களின் மற்றும் அயலவர்கள் வீடுகளில் தங்கி இருக்கின்றனர்.

போர் இடம்பெற்றபோது அந்தப் பகுதி பள்ளமாக்கப்பட்டுள்ளது. மண் ஏற்றப்பட்டு வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதனாலேயே தற்போது வெள்ளம் தேங்குகின்றது. முன்பு இவ்வாறு வெள்ளம் தேங்குவதில்லை என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் பரமோதயன் ஜெயராணியிடம் கேட்டபோது, இந்தப் பகுதியில் மண் பரவப்பட வேண்டும். அதற்கான திட்டங்கள் வரையப்பட்டு மாவட்டச் செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்ததும் அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும் - என்றார். (ற-6)

## வரவு- செலவு....

இதேவேளை, 2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 2 ஆயிரத்து 903 பில்லியன் ரூபா மாத்திரமே அரச செலவீனத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டுக்கு 4 ஆயிரத்து 550 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

2018ஆம் ஆண்டு அரச இறை வருமானமாக 2 ஆயிரத்து 258 பில்லியன் ரூபாவாக மதிப்பீடு செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு 2 ஆயிரத்து 390 பில்லியன் ரூபாவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டு மூலதனம் மற்றும் தேறிய கடன்களுக்கு 751 பில்லியன் ரூபா மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு 2 ஆயிரத்து 200 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. (எ)

## விளையாட்டு...

புதிய அரசின் இந்த ஆண்டுக்கான இரண்டாவது அமைச்சரவைக் கூட்டம் நேற்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்றது.

அதில் 3 ஆயிரத்து 850 விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (எ)

## போரில்...

முயற்சிகளை ஆரம்பித்துள்ள இரு பன்னாட்டு அரச சார்பற்ற அமைப்புகள் இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளன.

பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பும், மனித உரிமைகள் தரவுகள் ஆய்வுக்குழுவுமே இந்த முயற்சியை ஆரம்பித்துள்ளன. இலங்கையிலும், வெளிநாடுகளிலும் உள்ளவர்கள் தங்களிடமுள்ள விவரங்களை வழங்க வேண்டும் என்று இரு அமைப்புகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஆகக் குறைந்து இறந்தவர்களின் பெயர்களை சேகரிப்பதன் மூலமாவது அவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான அமைப் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இறுதிப்போரில் ஏற்பட்ட உயிரிழப்புகளை கணக்கிடுவதற்கு இந்த எண்ணிக்கை முக்கியமானது எனக் குறிப்பிட்டுள்ள அவர் நினைவு கூருவதற்கும் இது அவசியமானது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.


இலங்கையின் உள் நாட்டுப் போர் முடிவடைந்து ஒரு தசாப்த காலத்தின் பின்னரும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை என்னவென்பது எவருக்கும் தெரியாது என குறிப்பிட்டுள்ள இரு அமைப்புகளும் ஒரு தசாப்தத்துக்கு முன்னர் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையும் தெரியாத நிலை காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளன.

கொல்லப்பட்டவர்களின் இறுதி எண்ணிக்கையை கணிப்பிடுவதற்கு புள்ளி விபர அணுகு முறையைப் பயன்படுத்துவதே இதன் நோக்கம் என்றும், 2009 மே மாதம் 1819 திகதிகளில் சரணடைந்த பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை மதிப்பிடுவதற்கு இந்த முறை பயன்படுத்தப்பட்டது எனவும் இரு சர்வதேச அமைப்புகளும் தெரிவித்துள்ளன.

கொல்லப்பட்டவர்களின் உண்மையான எண்ணிக்கையை உறுதிசெய்வதற்காக உலகம் முழுதுமுள்ள தமிழர்கள் அவர்களது குடும்பத்தவர்கள் உறவினர்கள் அயலவர்களுடன் உரையாட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் எனமனித உரிமைகள் தரவுகள் ஆய்வுக்குழுவின் தலைவர் பட்ரிக் போல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பல அமைப்புகள் ஏற்கனவே இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன, எனவும் குறிப்பிட்டுள்ள அவர் பெயர்களை பதிவு செய்வதன் மூலம் ஏற்கனவே காணப்படுகின்ற தகவல்களை பதிவு செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார். (எ-71)

# “காலந்தாழ்த்தாது செயற்படுவதே சாலச் சிறந்ததாகும்”



யதார்த்தமான பயணத்தின்
புதிய பிரவேசம்

நீதித்துறையின் சுயாதீனத்தன்மை
கருத்து சுதந்திரம்
தகவல் அறியும் உரிமை
அந்தஸ்தினைப் பாராது
இலஞ்ச, ஊழலை வெளிப்படுத்தத்தக்க வெளிப்படைத்தன்மை
கலாசாரத்திற்கும் தேசிய மரபுரிமைகளுக்கும் உகந்த மதிப்பு
நீண்ட கால பயன்தரத்தக்க, பண விரயமற்ற
பேண்தகு அபிவிருத்தி திட்டங்கள்
ஊழல்மிகு அரசியல் கலாசாரத்தை தூய்மைபடுத்தல்
நிறைவேற்று அதிகாரங்களை குறைத்தல்
மக்களுக்காக பணியாற்றும் அமைச்சர்களுக்கு
அப்பணியினை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்பும் சுதந்திரமும்
கட்சி பேதமின்றி ஊழலை எதிர்க்கும் சுதந்திரம்
ஆகியவற்றை

**தனது பதவிக் காலத்தில் யதார்த்தமாக்கிய**
ஜனாதிபதி கௌரவ மைத்ரிபால சிறிசேன அவர்களின்
பதவிப்பிரமாணத்தின் 5வது வருடத்தில்
புதிய பயணத்தின் ஆரம்பம்
நன்னடத்தை
நல்லிணக்கம்
சுபீட்சம்
ஆகியவற்றை நோக்காகக் கொண்ட
அதற்காக அர்ப்பணிக்கும் ஓர் ஆண்டு

தாமதத்தால் மனத்தாங்கலுக்கு ஆளாகாது
சுயநலம், அதிகார மோகம்,
ஊழல்,மோசடி ஆகியவற்றை தோற்கடித்து
மலர்ந்துள்ள புத்தாண்டில் தேசிய குறிக்கோள்களை
அடையும் வகையில்
2019 ஜனவரி 08 ஆம் திகதி ஆரம்பமாகும் வருடத்தில்
ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களுடன்
ஒட்டுமொத்த இலங்கையர்களான நாம் அனைவரும்
கைக்கோர்த்துக் கொள்வோம்.

ஜனாதிபதி செயலகம்

# முதியோர்சங்கத்துக்கு பாத்திரங்கள்வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.8

நவாலி முதியோர் சங்கத்துக்கு சமையல் பாத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இந்த நிகழ்வு இடம்



பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் 2018ஆம் ஆண்டுக்கானபன்முகப்படுத்தப்பட்டநிதியொதுக்கீட்டின்கீழ் இந்தப் பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த பாத்திரங்களை நிகழ்வுகளுக்கு வாடகைக்கு வழங்குவதன் மூலம் வருமானத்தைப்பெற்றுக்கொள்ளும் வகையிலான திட்டத்தின் கீழேயே இவை முதியோர் சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளன

நிகழ்வில் வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு மேற்படி பாத்திரங்களை முதியோர் சங்க நிர்வாகிகளிடம் கையளித்தார்.

வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினருடன், சண்டிலிப்பாய் பிரதேசசெயலாளர் மற்றும் நவாலி முதியோர் சங்க நிர்வாகிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# ஆண் அதிபரைநியமிக்கக்கோரி பாடசாலைமுன்பாகபோராட்டம்



சாவகச்சேரி,ஜன.8

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் வித்தியாலயத்தில் ஆண் அதிபரை நியமிக்கக்கோரி பாடசாலை சமூகத்தினர் நேற்றுக் காலை வித்தியாலயத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர் கா.கணேசபாலேந்திரன் கைதடிமுத்துக்குமாரசாமிவித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இதனையடுத்து கடந்த வருடம் 8 ஆம் மாதம் தொடக்கம் அதிபர் வெற்றிடம் நிரப்பப்படாமல் இருந்தது.

குறித்த பாடசாலைக்கான அதிபரை நியமிப்பது தொடர்பில் விண்ணப்பங்கள்கோரப்பட்டுதெரிவுகள்இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் இந்தப் பாடசாலையில் கடமையாற்றும் 17 ஆசிரியர்களும் பெண்களே உள்ளனர். எனவே ஆண் ஆசிரியர்கள் இல்லாத பாடசாலையில் ஆண் அதிபர்ரை நியமிக்குமாறும் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.



## 35 பேருக்கு மீன்பிடி வலைகள்

கொடிகாமம், ஜன. 8

பருத்தித்துறை பிரதேச எல்லைக்குட்பட்ட கடற்றொழிலாளர்கள் 35 பேருக்கு மீன்பிடி வலைகள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் மூலம் உடுப்பிட்டித் தொகுதியின் கரவெட்டி காரியாலயத்தில் வைத்து இந்த உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

ஆதிகோவிலடி, கற்கோவளம், சக்கோட்டை, நாச்சிமார் கோவில் ஆகிய பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்டகடற்றொழிலாளர்களுக்கே1லட்சத்து50ஆயிரம்ரூபா பெறுமதியான மீன்பிடிவலைகள் வழங்கப்பட்டன. (ஐ159)

## வயலுக்குள் இறங்கியது இ.போ.சபேருந்து

கொடிகாமம், ஜன. 7

யாழ்ப்பாணத்தில்இருந்து சாவகச்சேரி வரை பயணித்த இ.போ.சபேருந்து வளைவில்திரும்பமுற்பட்டவேளை வயலுக்குள் இறங்கியது.

இந்தச்சம்பவம்மறவன்புலவு மணற்காட்டு வீதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

மறவன்புலவு மணற்காட்டு வீதியைச் சீரமைத்துதருமாறுபலவருடங்களாக அப்பகுதியை சேர்ந்த 250 ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மறவன்புலவு மேற்கு கோகிலாக்கண்டிபோன்ற பிரிவுகளில் வசிக்கும் மக்கள் முதன்மை வீதியாக இதனைப்பயன்படுத்துவதால் இந்த வீதியை சீரமைத்து தருமாறு சம்பந்தப்பட்டவர்களைக்கோருகின்றனர். (ஐ159,9)



# தேசியஉற்பத்தித்திறன்போட்டியில் யாழ்.மாவட்டத்துக்கு28விருதுகள்

## யாழ்.மாவட்டச் செயலகம் இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், ஜன. 7

தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் போட்டித் தொடரில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 28 விருதுகள் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணமாவட்டச்செயலகம் தேசிய போட்டியில் இரண்டாம் இடம்பெற்றுள்ளது என்று மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தேசியரீதியில்பாடசாலைத் துறை, அரசதுறை, உற்பத்தி மற்றும் சேவைகள் துறை என்ற வகையில் துறைசார் ரீதியாகநடத்தப்படும் தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டித் தொடரில் 2016/2017 ஆண்டுக்கானபோட்டியில் அரச துறையில்திணைக்களங்களுக்கான பிரிவில் யாழ்ப்பாணமாவட்டச்செயலகம்தேசியரீதியில்இரண்டாம் இடத்தைப்பெற்றுக் கொண்டது.

இந்தவிருதுகள் போட்டித் தொடருக்குப் பாடசாலைத் துறை, அரசதுறை, உற்பத்தி மற்றும் சேவைகள் துறைஉள்ளடங்கலாக73 நிறுவனங்கள்யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்திருந்தன.

41 நிறுவனங்கள் நேரடி மதிப்பீட்டுக்குத்தெரிவுசெய்யப்பட்ட அரச பிரிவில் 15 நிறுவனங்கள் மதிப்பீட்டுக்கு தெரிவுசெய்யப்பட்டு 13 நிறுவனங்கள் விருதுகளைப்பெற்றுள்ளன.

பாடசாலைப்பிரிவில்17பாடசாலைகள்மதிப்பிடப்பட்டு8 பாடசாலைகள் விருதுகள் பெற்றுள்ளன.

உற்பத்தி மற்றும் சேவைகள் பிரிவில் மதிப்பிடப்பட்ட 9நிறுவனங்களில்7நிறுவனங்களும் விருதுகளைப் பெற்றுமொத்தமாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 28 விருதுகள்கிடைக்கப்பெற்றுள்ளன.

விருது வழங்கும் நிகழ்வு தேசிய உற்பத்தித்திறன் செயலத்தால் விரைவில் நடத்தப்படவுள்ளது என்று வேதநாயகன்மேலும்தெரிவித்தார்.

திணைக்களங்களுக்கான பிரிவில் முதலாவது இடத்தை கிளிநொச்சி மாவட்டச் செயலகம் பெற்றுக்கொண்டது.

பிரதேச செயலகங்களுக்கான பிரிவில் தெல்லிப்பழை, பருத்தித்துறை பிரதேச செயலகங்கள் இரண்டாம் இடத்தையும், தென்மராட்சி, மருதங்கேணி, நல்லூர், சண்டிலிப்பாய், கோப்பாய் மற்றும் உடுவில் ஆகிய பிரதேச செயலகங்கள் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன.

யாழ்ப்பாணம், காரைநகர், ஊர்காவற்றுறைஆகியபிரதேச செயலகங்கள் சிறப்பு விருதுகளுக்குத் தெரிவாகியுள்ளன. (ஐ)

## வீதியோரம் கொட்டப்பட்ட குப்பைகளால் இடையூறு

முதன்மைவீதியோரமாகக்கொட்டப்பட்டிருக்கும்மரக்கிளைக்குப்பைகளால் போக்குவரத்து செய்வதில் மக்கள் சிரமத்தை எதிர்நோக்குவதாக தெரிவித்தனர். நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் முன்பக்க வாயிலுக்கு அருகாமையில் பொலிஸாரினால் இந்த மரக்கிளைகளினாலான குப்பைகள்கொட்டப்பட்டுள்ளதாகபொதுமக்கள் தெரிவித்தனர். கடந்த15நாள்களுக்கு மேலாக இவைஅகற்றப்படாமல்காணப்படுவதால்வீதியால் பயணிக்கும் பாதசாரிகள் பொலிசாரின் இந்த அசமந்தப்போக்கை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். (ஐ-26)





## ஒஸ்லோமாநகரபிரதிமேயரும் வடமாகாண மகளிரும் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 8

நோர்வே ஒஸ்லோ மாநகர பிரதி மேயர் கம்சாயினி குணரட்ணம் வடக்கிலுள்ள மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணநகரவிருந்தினர்விடுதிஒன்றில்நேற்றுமுன்தினம் சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கைக் கொள்கைகளுக்கான பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தைச்சேர்ந்த மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி அமைப்புக்களின் பெண்பிரதிநிதிகள், மனித உரிமைச்செயற்பாட்டாளர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

பெண்தலைமைத்துவம், பெண்களின் அரசியல் பிரவேசம், போருக்குப் பின்னர் ஈழத் தமிழர்களின்நிலைப்பாடுபோன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

ஒஸ்லோ மாநகர பிரதி மேயர் கம்சாயினி குணரட்ணம் இலங்கையில் பிறந்து, மூன்று வயதில் நோர்வேநாட்டுக்குப் புலம்பெயர்ந்து சென்றவர். தமிழ் இளைஞர் அமைப்பில் இணைந்து புலம்பெயர் தமிழர்கள் மத்தியில்தமிழர்களின் கலை, கலாசார, பண்பாட்டு வளர்ச்சிக்கான நிகழ்வுகளை நடத்தியிருந்தார்.

இன அடக்குமுறைக்கெதிரான இளையோர் அமைப்பின்உபதலைவராகவும்அவர்செயற்பட்டு வந்தார்.

2015 ஒக்ரோபர் மாதம் ஒஸ்லோவில்நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலில் அவர் வேட்பாளராகப் போட்டியிட்டு உறுப்பினராகத்தெரிவுசெய்யப்பட்டிருந்தார். நோர்வேயில் வயது குறைந்த பிரதி மேயராகத் தெரிவுசெய்யப்பட்டவர் இவர் என்று தெரிவிக்கப்பட்டது. (த105)

# பிறப்பு ஒரு சம்பவமாக இருந்தாலும் இறப்பு சரித்திரமாக இருக்கவேண்டும்

## நமசிவாயத்தின் நினைவுப் பேருரையில் சாவகச்சேரி இந்து அதிபர் தெரிவிப்பு

**சாவகச்சேரி ஜன. 8**

**பிறப்புஒரு சம்பவமாக இருந்தாலும் இறப்பு சரித்திரமாக இருக்க வேண்டுமென்று இந்தியாவின் முன்னாள் அரசதலைவர் அப்துல்கலாமின் கூற்றை ஒவ்வொருவரும் கவனத்தில் எடுத்தால் எவ்வளவோ மாற்றங்களை ஏற்படுத்தலாம். வெற்றிபெறலாம். இவ்வாறு சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் ந. சர்வேஸ்வரன் நினைவுப் பேருரையில் தெரிவித்தார்.**

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவராக இருந்த வேளையில் சாவடைந்த அமரர் சங்கரப்பிள்ளைநமசிவாயத்தின்25ஆவதுஆண்டு நினைவுஅஞ்சலிநேற்றுநடைபெற்றது. சாவகச்சேரி நகர வணிகர்களால் நேற்றுக்கடைப்பிடிக்கப்பட்ட இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்காலச் சந்ததியினரின் வளமான வாழ்வுக்காக அர்ப்பணிப்பான நேர்மையான சிந்தனையும் வழிகாட்டும் எண்ணமும்கொண்ட ஒருவரை நாடு ஒருபோதும் மறப்பதில்லை. அவரது வலிமையான பணிஎதிர்காலத்தில்அந்தப்பதவியை வகிப்பவர்களுக்கு உந்துசக்தியாகவே காணப்படும் - என்றார்.

சாவகச்சேரி வணிகர் மன்ற மண்டபத்தில் மன்றத்தின் உபதலைவர் வ. சிறிபிரகாஸ்தலைமையில்நடைபெற்றநிகழ்வில் தலைவர் ந. சிவபாலன் அமரரின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை சூட்டினார்.

உறுப்பினர்கள் மலர் தூவிஅஞ்சலி செலுத்தினர். நினைவுப் பேருரையை



சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந. சர்வேஸ்வரனும் கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் து. இளங்குமரனும் நிகழ்த்தினர். (ஜ-9)



## பனம் விதைகள் நடுகை

அனலைதீவு. ஜன. 8

அனலைதீவில் மண் அரிப்பைத் தடுக்கவும் பனை வளத்தை பெருக்கும் நோக்கிலும் அருணோதய சனசமூக நிலைய இளைஞர்கள் கடற்கரையினை அண்டிய இரண்டு கிலோ மீற்றர் நீளமான பகுதிகளில் பெருமளவு பனம் விதைகளை நேற்றுமுன்தினம் நடுகைசெய்தனர். ஒருநாட்டின்வளம் அந்தநாட்டின் நீர் வளத்தை வைத்து கணிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் நிலத்தடி நீரினை காக்கும் நீண்ட காலப் பயிராகப் பனைமரம் காணப்படுகிறது. (ஜ-9)

## அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடமுடியும்

யாழ்ப்பாணம், ஜன. 8

2019 ஆம் ஆண்டுக்கான நிறுவை, அளவை உபகரணங்களுக்குமுத்திரையிடும்பணி நேற்றுமாவட்டச் செயலகத்தில் ஆரம்பமானது.

எதிர்வரும் 11ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை நிறுவை, அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படவுள்ளன.

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வர்த்தகர்கள் அனைவரும் தமது வர்த்தக நிலையத்தில் பயன்படுத்தும்தராசுப்படிகள், லீற்றர்அளவைகள், மீற்றர் கோல்கள் ஆகிய கருவிகளை பரிசோதித்து முத்திரை இடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

முத்திரைபதிக்கப்படாத அளவிடும்கருவிகளைபாவிப்பதும், வைத்திருப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவே அனைத்து வர்த்தர்களும் இச்சந்தர்ப்பத்தில் தமது அளவிடும் கருவிகளை முத்திரை இடுமாறு யாழ்ப்பாணவணிகர்கழகத்தின்செயலர் சி. கேசவன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஜ)

## தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணி மாநாடு

யாழ்ப்பாணம், ஜன. 8

தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் அணியின் மாநாடு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணி யாழ்ப்பாண மாவட்டத்தில் தொகுதி வாரியாக சீரமைக்கப்பட்டு தற்போது மாவட்டக்கிளை அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சீரமைக்கப்பட்டு புதிதாக தெரிவான நிர்வாகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட மட்டத்திலான இளைஞரணி மாநாடு இடம்பெறவுள்ளது.

மாவட்ட இளைஞரணித் தலைவர் பிருந்தாபரன் தலைமையில் இடம்பெறும் மாநாட்டில் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜா உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஜ-105)

## தேசிய உற்பத்தித்திறனில் நுணாவில் அ.த.க தெரிவு

சாவகச்சேரி, ஜன. 8

தேசிய உற்பத்தித் திறன் போட்டியில் தேசிய ரீதியில் சான்றிதழ் பெற்ற பாடசாலையாக தென்மராட்சி கல்வி வலயத்தைச்சேர்ந்த கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2016, 2017 ஆம் ஆண்டுகளின் கற்றல், கற்பித்தல் பௌதீக முகாமை இணைப்பாட விதான செயற்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு பொது நிர்வாக அமைச்சின் தேசிய உற்பத்தித்திறன்செயலகத்தால்இந்த விருதுக்கான போட்டியை தேசியரீதியில் அரச திணைக்கள அலுவலகங்கள் பாடசாலைகளைஉள்ளடக்கியதாக நடத்தப்படுகிறது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில்இந்தப்போட்டிக்கு விண்ணப்பித்து முதல் முறையிலேயே தேசிய ரீதியில் சான்றிதழ்பெறும் பாடசாலையாகத்திகழ்கின்றது.

இந்தப்பாடசாலைகடந்த வருடம் சுகாதாரத் திணைக்களத்தினரால் நடத்தப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டுச்செயற்பாடுகளில் தென்மராட்சியில் டெங்குஅற்றபாடசாலையாகத்தெரிவுசெய்யப்பட்டமைஎன்றுதெரிவிக்கப்பட்டது. (ஜ-9)



## வீதிசீரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு

சாவகச்சேரி. ஜன. 8

சாவகச்சேரி கோவில்குடியிருப்பு வீதி சீரமைக்கப்பட்டு கடந்தசனிக்கிழமைபொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இப் பகுதி படையினரின் அதி உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த காலத்தில் படையினரால்தற்காலிகமாகஅமைக்கப்பட்டிருந்த இந்த வீதி படையினர் வெளியேறியதும் பராமரிப்பின்றிகடந்த7வருடங்களாகக் கற்கள்மேலெழுந்த நிலையில் காணப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையினர் மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தற்காலிகமாக கிரவல் பரவியிருந்தனர்.

அண்மையில் பெய்த பெருமழையினால்கோயிற்குடியிருப்புப் பகுதியில் கடற்கரையை அண்டிய பகுதியில் வாழ்ந்த குடும்பங்கள் பாதிக்கப்பட்டு அங்குள்ளபொதுஅமைப்பின் கட்டடத்தில் பிரதேசசெயலகத்தினால்இடைத்தங்கல்முகாம் அமைக்கப்பட்டு பாதிக்கபட்ட மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர்

இடைத்தங்கல் முகாமினைப் பார்வையிடச் சென்ற யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகனிடம் அப் பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தினால்வழங்கப்பட்ட6.8மில்லியன் ரூபா செலவில் சீரமைத்து பொதுமக்கள் பாவனைக்கு வழங்கியுள்ளனர். (ஜ-9)

## உறுப்பினரிடையேவாய்த்தர்க்கம் சபை 5 நிமிடங்கள் ஒத்திவைப்பு

வலி. தென்மேற்கு. ஜன. 8

இரு உறுப்பினர் மத்தியில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கட்டுக்கடங்காமல் தொடர்ந்து சென்றதால் கூட்டத்தை 5 நிமிடங்களுக்கு ஒத்திவைத்த தவிசாளர் சபை மண்டபத்தை விட்டுவெளியேறினார்.

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் இந்த வருடத்துக்கான முதல் கூட்டம் தவிசாளர் அ. ஜெபநேசன் தலைமையில்சபைமண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கடந்த மாதக் கூட்டறிக்கை வாசித்துஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து செயற்பாட்டறிக்கை வாசிக்கப்பட்டது.

ஆளும் கட்சி உறுப்பினர் ஜோன் ஜிப்ரிக்கோ அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டவிடயங்கள்பற்றிஉரையாற்றும்போதுத.வி.கூட்டணியில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்டஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்சுப்பிரமணியம்குறுக்கிட்டு உரையாற்றினார். இதன் போதுஇருஉறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் உச்சக்கட்டத்தை அடைந்தது. அமைதியை நிலைநாட்டத் தவிசாளர்முயன்றபோதும்உறுப்பினர்கள்இருவரும்தொடர்ந்து வாதத்தில் ஈடுபட்டனர்.

இந் நிலையில் அமைதியை நிலைநாட்ட முடியாத தவிசாளர் கூட்டத்தை 5 நிமிடங்களுக்கு ஒத்திவைத்துவிட்டு மண்டபத்தை விட்டு வெளியேறினார்.

இதையடுத்துஅமைதிநிலவியதைத்தொடர்ந்துதவிசாளர் திரும்பவும் கூட்டத்தை நடத்தினார். (ஜ-115)

## குப்பைத்தொட்டிக்குதீவைப்பு

தென்மராட்சி, ஜன. 8

நிறமூட்டப்பட்ட குப்பைத் தொட்டிகள் இனந்தெரியாதோரால் தீயிட்டு எரித்த சம்பவம் ஒன்று மிருசுவில் உசன் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

திண்மக்கழிவுகளைப் போடுவதற்கு என சாவகச்சேரி பிரதேச சபையினால் உசன் பாடசாலைக்கு அருகிலும் உசன் சந்தியிலும் நிறமூட்டப்பட்ட குப்பைத்தொட்டிகள்வைக்கப்பட்டிருந்தன.

இந்தத்தொட்டிக்குள்மக்களால்போடப்படுகின்றகுப்பைகளை பிரதேச சபையினர் கிரமமாக அகற்றாததால் அதற்குள் போடப்படும் குப்பைகளை கால்நடைகளும் பறவைகளும் வெளியே எடுத்து வீசுகின்றன.



இதனால் அப் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு காணப்படுவதாக பொதுமக்களால் பிரதேச சபையிடம் அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்டும் பயன் கிடைக்கவில்லை என்று பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்த குப்பைத் தொட்டிகள் எரிக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் உசன் பாடசாலைக்கு அருகில் உள்ள வர்த்தகநிலையத்துக்கு முன்பாகவைக்கப்பட்டிருந்த பிளாஸ்ரிக்குப்பைத்தொட்டிகளும்இவ்வாறுதீயிட்டு எரிக்கப்பட்டன.

குப்பைஅகற்றவில்லைஎன்பதற்காகத்தொட்டிகளை எரிப்பது சட்டவிரோமான செயல் என்பதால் அரச சொத்துக்களை சேதப்படுத்துவது குறித்து அப் பகுதி மக்கள் கண்டனம் தெரிவித்தனர். (ஜ-9)

## குளத்திலிருந்து முதியவரின் சடலம் மீட்பு

வடமராட்சி.ஜன.8
குளத்தில் இருந்து முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டை நெல்லயன்குளத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. குளத்தில் சடலம் ஒன்று இருப்பதை அவதானித்த பொதுமக்கள் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.
சுழிபுரத்தை சேர்ந்த வெற்றிவேலு ராஜ்குமார் (வயது 65) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார் என இனங்காணப்பட்டுள்ளார்.
நேற்றுமுன்தினம் சகோதரிவீட்டுக்குச் சென்று வருவதாகச் சென்றவர் வீடுதிரும்பாத நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டார் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.
சடலம் பிரேத பரிசோதனைக்காக தெல்லிப்பழை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-26)


# யாழில் ஒரே நாளில் நான்கு கொள்ளைகள்

யாழ்ப்பாணம், ஜன. 8
யாழ்ப்பாணத்தில் ஒரே நாளில் நான்கு இடத்தில் தங்கச் சங்கிலிகள் அறுக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தின் கோப்பாய், சாவகச்சேரி, யாழ் நகரம், கைதடி ஆகிய இடங்களிலேயே நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளன.
ஆள்கள் நடமாட்டம் குறைவான வீதிகளில் பயணித்த பெண்களை குறிவைத்தே இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நான்கு சம்பவங்களையும் ஒரு குழுவே செய்திருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மேலும் யாழ்ப்பாணத்தின் இருவேறு இடங்களில் கடந்த சனிக்கிழமையும் இவ்வாறான தங்கச் சங்கிலி அறுப்பு சம்பவங்கள் இடம்பெற்றிருந்த நிலையில் அதன் தொடர்ச்சியாக இந்த நான்கு இடத்தில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. (ஐ-8)



நீண்ட நாள்களாகப் பழுது காரணமாக நிறுத்தப்பட்டிருந்த ஊர்காவற்றுறை அனலைதீவுக்கான எழுதாரகை படகுச் சேவை கடந்த சனிக்கிழமை தொடக்கம் சேவையில் ஈடுபட்டு வருவதாக அப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஐ- 9)



## 114 கிலோ கேரளா கஞ்சா பருத்தித்துறையில் மீட்பு

வடமராட்சி.ஜன.8
114 கிலோ கேரளக் கஞ்சா பருத்தித்துறை கடற்கரையில் இருந்து நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கஞ்சா கடத்தப்படுவதாக பருத்தித்துறை மற்றும் காங்கேசன்துறைப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பருத்தித்துறைப் பொலிஸாருடன் இணைந்து சம்பவ இடத்துக்கு சென்றுள்ளனர்.
பருத்தித்துறை கடற்கரைப் பகுதியில் வைத்து வாகனத்தில் கஞ்சாவை ஏற்ற முற்பட்டபோது பொலிஸாரையும் கடற்படையினரையும் கண்ட சந்தேக நபர்கள் கஞ்சாப் பொதிகளை விட்டுவிட்டுவாகனத்தில் தப்பிச்சென்றுள்ளனர்.
மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகளை நீதிமன்றில் முற்படுத்த பருத்தித்துறைப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஐ-26)

# சபையின் கொல்களத்தில் கால்நடைகளை வெட்டவும்

### சாவ. நகரசபைத் தவிசாளர் தெரிவிப்பு

சாவகச்சேரி ஜன.8
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாடுகளை இறைச்சிக்காக வெட்டவிரும்புவோர்சபைத் தவிசாளர், பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோரின் அனுமதியுடன் சபையின் கொல்களத்தில் வெட்டுமாறும் சபையின்தவிசாளர் சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.
இவ்வருடத்துக்கான மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சிக் கடைகள் குத்தகைக்கு விடுவது தொடர்பாக மூன்று தடவைகள் கேள்வி அறிவித்தல்கள் விடுத்த போதிலும் எவரும் கேள்விக்கான விண்ணப்பம் பெறாததால் இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு விடப்படவில்லை.
இந்நிலையில் மாட்டிறைச்சி உண்போர் சட்டவிரோதமாக மாடுகளை இறைச்சிக்காக வெட்ட வாய்ப்புகள் உள்ளன என்பதால் மாடு அல்லது ஆடு இறைச்சிக்காக வெட்ட விரும்புவோர் சபையில் அனுமதி பெற்று கொல்களத்தில் வெட்டுமாறும் தவறின் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படலாமெனவும் அறிவித்துள்ளார். (ஐ-9)

## வகுப்பறைக் கட்டடத்தொகுதி திறப்பு

வடமராட்சி.ஜன.8
வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையில் சீரமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத்தொகுதி கடந்த சனிக்கிழமை பாடசாலை அதிபர் த.யோகலிங்கம்தலைமையில் திறந்துவைக்கப்பட்டது.
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மறுவாழ்வு மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் மூலம் கடந்த 2017 ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தே இரண்டு மாடிகளைக் கொண்ட வகுப்பறைக்கட்டடத்தொகுதிதிறந்துவைக்கப்பட்டது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கட்டடத்துக்கான நினைவுக் கல்வெட்டையும் கட்டடத்தின் முதன்மை நுளைவாயிலையும்திறந்து வைத்தார்.
வகுப்பறை கட்டடத்தை சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், வடக்குமாகாண கல்விபண்பாட்டுஅலுவல்கள்அமைச்சின்செயலர் சி.சத்தியசீலன், வடமராட்சி வலயக்கல்விபணிப்பாளர்யோ.இரவீந்திரன், மருதங்கேணி பிரதேசசெயலர் க.கனகேஸ்வரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (ஐ-70)

# வடக்கு மாகாண ஆளுநராக குரேயை மீண்டும் நியமிக்குமாறு போராட்டம்



வடக்கு மாகாண ஆளுநராக மீண்டும் றெயினோல்ட்குரேயை நியமிக்கக்கோரி யாழ்ப்பாணம்மாவட்டச்செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
சிவன் அறக்கட்டளை அமைப்பின் ஏற்பாட்டில் முல்லைத்தீவைச் சேர்ந்த பொதுமக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஆளுநர் றெயினோல்ட் குரே தமிழ் மொழி பேசக் கூடியவராக இருக்கின்ற நிலையில் தமது தேவைகளை உடனடியாகத் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது எனவே அவரை மீண்டும் வடக்குக்கே நியமிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.
கோரிக்கை அடங்கிய மூன்று மனுக்களை யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச்செயலர்திருமதிதெய்வேந்திரம் சுகுணரதியிடம் கையளித்தனர்.
எனினும் சுரேஸ் ராகவன் இன்று அரச தலைவரால் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

## கஞ்சா வைத்திருந்தனர் என்று மணல்காட்டில் இருவர் கைது

வடமராட்சி.ஜன.8
மூன்று கிலோ 12 கிராம் கேரள கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் சிறப்பு அதிரடிப்படையினரால் கைது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் மணற்காடு அம்மன் பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.
தாழையடி மருதங்கேணியைச் சேர்ந்த 24 ,46 வயதுடைய சந்தேகநபர்களே கைது செய்யப்பட்டனர்.
சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் உந்துருளியில் பயணித்த வேளை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
சந்தேகநபர்கள் பருத்தித்துறை பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ-26)

# பொய் கூறிப் பொருள்கள் சேகரித்தவர் மக்களிடம் மீண்டும் மாட்டிக்கொண்டார்

சாவகச்சேரி.ஜன.8
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருள்களைச் சேகரிக்க என்று அரச பிரதிநிதியாக வந்துள்ளேன் என்று பொய் கூறி இரண்டாவது தடவையாகவும் மக்களிடம் வந்தவர் மாட்டிக்கொண்டார்.
இந்தச் சம்பவம் எழுதுமட்டுவாழ் தெற்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.
ஏற்கனவே மட்டுவில் கல்வயல் பகுதியில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவி வழங்குமாறு கோரியமை தொடர்பாக உதயனில் செய்தி வெளியாகி மக்கள் உஷாரடைந்ததால் அன்றிலிருந்து தலைமறைவான நபரே மீண்டும் மாட்டிக் கொண்டுள்ளார்.
வன்னிப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி திரட்டவென அரசினால் அனுப்பப்பட்டதாகக் கூறி அலுவலர் போல உடையணிந்து வந்த ஒருவர் எழுதுமட்டுவாழ் வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில் மக்களிடம் பணம் அறவிட்டுவந்துள்ளார் எனத்தெரிவிக்கப்பட்டது.
இந் நிலையில் எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் பணம் வசூலித்த இவரின் நடத்தையில் சந்தேகம் கொண்ட மக்கள் விசாரித்த போது உண்மை வெளியாகியுள்ளது.
இதனால் பொதுமக்கள் இவரைப்பிடித்து பிரிவுகிராம அலுவலர் மூலம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். சந்தேகநபரிடமிருந்து 11 ஆயிரத்து 120 ரூபா பணமும், 2 அலைபேசியும், 3 அடையாள அட்டைகள் மற்றும் ஒரு சங்கிலி என்பன மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-159)



# செய்மதி மூலம் பெறப்பட்ட காட்சிகள் ஆராயப்பட்டு இழப்பீடுகள் வழங்கப்படும்

## விவசாய அமைச்சர் கிளிநொச்சியில் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன. 8

வெள்ளத்துக்குமுன், வெள்ளம்ஏற்பட்டபோது, மற்றும்வெள்ளத்தின்பின்னர் ஆகிய நிலமைகளை செய்மதி மூலம் பெறப்பட்ட காட்சிகளை ஆராய்ந்து இழப்பீடுகள்வழங்கப்படும்எனவிவசாய அமைச்சர் கிளிநொச்சியில்தெரிவித்தார்.



அமைச்சர்ஹரிசன்நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். கிளிநாச்சி மாவட்டச் செயலகத்துக்கு காலை10.30மணியளவில் வந்த அமைச்சர், அங்கு வெள்ள இடர் காரணமாக விவசாய செய்கைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இழப்பீடுகள் மற்றும் காப்புறுதிகள் தொடர்பாகவும் அவற்றை பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும், அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இரணைமடு கமக்கார அமைப்பின் சம்மேளனசெயலர்சிவமோகன், காப்புறுதிப் பணத்தை அந்த நிறு வனத்திடம்இருந்துபெறுவதுகடவுளிடம்வரம் கேட்பது போன்றது என அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் இங்கு வந்திருப்பவர்கள் கடவுள் போன்றவர்கள்தான் கட்டாயம் இழப்பீடுகளை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

வெள்ளத்துக்குமுன்,வெள்ளம்ஏற்பட்டபோது, வெள்ளம் வற்றிய பின்பு, போன்ற படங்கள் செய்மதிகள் மூலம் பெறப்பட்டுள்ளன. அவைஆராயப்பட்டு இழப்பீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல்கொழும்பில் இருந்து இதனை ஆய்வு செய்ய ஒரு குழுவினர் அனுப்பப்பட்டு, ஆய்வுகள் அதன் மூலம் செய்யப்பட்டு இழப்பீடு வழங்கப்படும் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து அமைச்சர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளான கிளிநொச்சி, பன்னங்கண்டி, ஐயன் கோவிலடிப் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டசிலபகுதிகளைப்பார்வையிட்டார்.

இந்த நிகழ்வில் விவசாய அமைச்சர், அமைச்சின்செயலர்,விவசாயத்திணைக்கள ஆணையாளர், கமநலசேவை அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர்,மாவட்டச்செயலர்,மேலதிகமாவட்டச்செயலர்,பிரதேசசெயலர்கள் எனப்பலரும்கலந்துகொண்டனர். (க-6)



# வறிய மாணவர்களுக்கு ஈருருளி வழங்கி வைப்பு

முல்லைத்தீவு.ஜன.8

கனடாவாழ்சமூகஆர்வலர்களின்நிதிப்பங்களிப்பில்கனடா, வன்னித் தமிழ் சமூக கலாசார அமையத்தினால் ஈருருளி வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுமாவட்டத்தின் சிராட்டிக்குளம் பகுதியிலிருந்து வறுமையின் மத்தியிலும் 7 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள நட்டாங்கண்டல் பாடசாலைக்கு நடந்து சென்று, தங்கள் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் 4 வறிய மாணவர்களுக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி சிறிஸ்காந்தராசாவின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த 4 ஆம் திகதி மாணவர்களின் பாடசாலையில் வைத்து ஈருருளிகள் வழங்கி வைக்கப்பட்டன. (க-222)



# வாழ்வாதாரத்துக்கு ஆடுகள் வழங்கல்

முல்லைத்தீவு.ஜன.8

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு கைவேலியைச் சேர்ந்த போரால் பாதிக்கப்பட்ட , வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட 4 அங்கத்தவர்களைக் கொண்ட திருமதி பரிமளாதேவி குடும்பத்தினருக்கு ஆடுகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

45 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடுகள் மற்றும் கோழிகள் என்பனவழங்கப்பட்டன. வடமாகணசபை முன்னாள் உறுப்பினர் ஆண்டிஐயாபுவனேஸ்வரனின் வேண்டுகோளுக்கு அமைய புலம் பெயர் தேசத்திலிருந்து நிதி உதவி செய்யப்பட்டது. (க-222)



# மாணவர்களுக்கான உதவி

முல்லைத்தீவு.ஜன.8

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வு சுதந்திரபுரம் தமிழ் வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு, இலங்கைப் படையினர், இடர் முகாமைத்துவமத்தியநிலையத்தினர், டயலொக்தொலைத்தொடர்பு நிறுவனத்துடன் இணைந்து "உங்கள் மறுமலர்ச்சிக்குநாம்" என்றதொனிப்பொருளில்வடக்கில்வெள்ளத்தினால்பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றனர். வடக்கில்கடந்தமாதம்ஏற்பட்டவெள்ளஅனர்த்தத்தினால்15 ஆயிரத்து100 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகப் புள்ளிவிபரம் தெரிவித்துள்ளது. (க-ரி3)




# பாடசாலை மாணவர்களுக்கான பாதணிப்பரிசுப்படிவம்விநியோகம்

வவுனியா.ஜன.8

வவுனியா தெற்கு வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பாதணி வழங்குவதற்கான பரிசுப் படிவங்கள் பாடசாலைகள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

இலவசக் கல்வித் திட்டத்தைச் சிறப்பாக முன்னெடுக்கும் பொருட்டுஅரசாங்கத்தால்இலவசபாடநூல், இலவசசீருடை விநியோகம் என்பவற்றைத் தொடர்ந்து இலவசப் பாதணி வழங்குவதற்கானபரிசுப்படிவங்கள்வழங்கப்பட்டுவருகின்றன.

அதற்கமைவாக வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் மாணவர்களுக்கானபாதணிப்பரிசுப்படிவம்தற்போதுவழங்கப்பட்டுவருகின்றது. ஆயிரத்து 400ரூபா மற்றும்ஆயிரத்து 500ரூபா பெறுமதியில் பரிசுப் படிவமும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. (க-110)

# வெள்ளப்பாதிப்புக் கூட்டத்துக்கு அழைப்பு விடுவிக்கப்படவில்லை

## கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர்கள்தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 8

கிளிநொச்சிமாவட்டத்தில்வெள்ள இடர்பாதிப்புத்தொடர்பான கூட்டத்துக்குஅழைப்புவிடுவிக்கப்படவில்லைஎனத்தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

விவசாய, கிராமிய பொருளாதார, கால்நடை அபிவிருத்தி, நீர்பாசனம்மற்றும்மீன்பிடிஅமைச்சர்பி.ஹரிசன்கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு நேற்று முன்தினம் வருகைதந்திருந்தார். மாவட்டச்செயலகத்தில் கூட்டம் நடத்தினார். அந்தக் கூட்டத்திலே இந்தக் கூட்டத்துக்கு தான் அழைப்பு விடுத்தும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர்வரவில்லைஎன்றுகுற்றம் சாட்டியிருந்தார்.

இந்தநிலையில்இதுதொடர்பாககூட்டமைப்புநாடாளுமன்ற உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

வன்னி மாவட்டங்களில் வெள்ள இடர் ஏற்பட்ட நாள்களில் இருந்துஇடம்பெற்றுவரும்அனைத்துக்கூட்டங்களிலும்நாம் கலந்து கொண்டு உள்ளோம். ஆனால் விவசாய அமைச்சர் கிளிநொச்சியில் இவ்வாறான ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளார் என எமக்குத் தெரியாது. அவரிடம் இருந்தோ அதிகாரிகளிடம் இருந்தோ எமக்கு எந்த அழைப்புக்களும் விடுக்கப்படவில்லை என்றனர். இது தொடர்பில் மாவட்ட செயலக அதிகாரிகளை தொடர்பு கொண்டு கேட்டபோது.

இது விவசாய அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் நாம் எமது அலுவலர்களுக்கு மட்டுமே தகவல் வழங்கினோம்.இதுதொடர்பில்மேலதிகதகவல்களைவிவசாய அமைச்சிலேயேபெறவேண்டும்-என்றனர். (க8-105)

# ரவிகரன்உட்பட 7 பேரின் வழக்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவுமாவட்டக்கடற்றொழில்நீரியல்வளத்திணைக்களத்துக்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர்கள் ஒன்றிணைந்து கடந்த 2018ஆம் ஆண்டுஓகஸ்ட்மாதம்2ஆம்திகதிகவனவீர்ப்புப்போராட்டம் ஒன்றினைந்து முன்னெடுத்ததுடன், மாவட்டக்கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகளுக்குதமதுகோரிக்கைகளை முன்வைக்கச் சென்றபோது, நீண்டநேரம் ஆகியும் திணைக்களத்துக்குள் இருந்த அதிகாரிகள் மக்களின் கோரிக்கைகளுக்குசெவிசாய்க்காது இருந்தநிலையில் அலுவலகம் சேதமாக்கப்பட்டது. இந்த விசாரணைகள் எதிர்வரும் மார்ச் மாதம்12 ஆம் திகதிக்குதவணையிடப்பட்டுள்ளது. (க-246)




# கிளி.வெள்ளத்தால்சேதமடைந்த வீடுகளைச்சீர்செய்யும்பணிகள்

கிளிநொச்சி, ஜன. 8

சிறிலங்காபொதுமக்கள்முன்னணியின் பொறியியல்பிரிவினரால்கிளிநாச்சியில்வெள்ளத்தால்சேதமடைந்தவீடுகளை சீர்செய்யும்பணிகள்நேற்றையதினம்முன்னெடுக்கப்பட்டன. கிளிநாச்சி மருதநகர் பகுதியில் வெள்ளத்தால், சேதமாகிய தற்காலிக வீடுகளைச் சீரமைக்கும் பணியில் குறித்த குழுவினர் ஈடுபட்டனர்.

பொறியியலாளர்கள்உள்ளிட்டகுழுவினரே இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது சேதமாகிய வீடுகள் சீரமைக்கப்பட்டதுடன், மின்சாரவசதிகளும்மீளஏற்படுத்திகொடுக்கப்பட்டன. இதேவேளை இந்தப்பணிகள்கண்டாவளைபிரதேச செயலர் பிரிவில் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (க-6)

# தொடருந்து கடவையைத் தகர்த்து உள்நுழைந்த இ.போ.சபை பேருந்து



வவுனியா.ஜன.8
வவுனியா மன்னார் வீதியில் சிங்களப் பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள தொடருந்துக் கடவையை உடைத்துக் கொண்டு இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து உள்நுழைந்த நிலையில், தொடருந்து மற்றும் பேருந்து சாரதிகளின் விரைவான செயற்பாட்டால் 50 வரையிலான பயணிகள் உயிர் தப்பியுள்ளனர்.
குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.
இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:
மன்னாரில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பயணிகள் பேருந்து குறித்த தொடருந்துக் கடவைக்கு அருகாமையில் சென்றுகொண்டிருந்த போது, யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தொடருந்துக்காக அப்பகுதியில் இருந்த புகையிரதக் கடவையின் பாதுகாப்பு கடவை மூடப்பட்டுள்ளது.
கடவை மூடப்பட்டநிலையில் பேருந்து பாதுகாப்பு கேற்றின் ஒரு பகுதியினை உடைத்துக் கொண்டு தொடருந்துப் பாதைக்குள் நுழைந்தது. தொடருந்து வேகம் குறைவாக வந்தமையால் தொடருந்தின் சாரதிவேகத்தைகட்டுக்குள்கொண்டு வந்த அதேவேளை, சுதாகரித்த பேருந்து சாரதி உடனடியாக பேருந்தை பின்பக்கமாக செலுத்தி விபத்தில் இருந்து பேருந்தை காப்பாற்றினார். இதன் போது பேருந்தில் இருந்த 50 வரையிலான பயணிகளும் கூச்சலிட்டு பதறியடித்து பேருந்தில் இருந்து இறங்கி ஓடினர். இதன்பின் குறித்த தொடருந்து தொடர்ந்து பயணித்தது.
இந்தக் குழப்ப நிலை தணிவதற்குள், மற்றொரு தொடருந்து கொழும்பில் இருந்து யாழ் நோக்கி அதே வழித்தடத்தில் வந்துள்ளது. இதன் போது தொடருந்துக் கடவைக் காப்பாளர் பாதுகாப்பு கேற்றை மூடாது இருந்துள்ளார். இதனால் பயணிகள் புகையிரத கடவையை கடந்து சென்று கொண்டிருந்ததுடன், வாகனங்களும் பயணித்துள்ளன.
இந்த நிலையில் அந்த வழித்தடத்தில் வந்த தொடருந்து ஒலிச் சமிஞ்ஞை ஒலித்தபடி வேகத்தை கட்டுப்படுத்தி தொடருந்தை நிறுத்தியமையால் அசௌகரியம் தவிர்க்கப்பட்டது. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சம்பவ இடத்துக்கு வந்த வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் இலங்கை போக்கு வரத்துச் சபை பேருந்தைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். (க-110)

## முள்ளியவளை மக்களின் பிரச்சினைகள் ஆராய்வு

மன்னார்.ஜன.8
முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட முள்ளியவளை கிராம மக்களின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்வதற்கென அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை அந்த பிரதேசத்துக்கு அனுப்பிவைத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக முல்லைத்தீவு மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன் உறுதியளித்துள்ளார்.
வெள்ள உதவியில் முள்ளியவளைப் பிரதேச மக்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளதாக எழுந்துள்ள முறைப்பாடுகளை அடுத்தே அமைச்சர் ரிசாத்பதியுதீனின் பணிப்புரையின் பேரில் அவரது இணைப்புச் செயலர் செயலருடன் தொடர்பு கொண்ட போதே, இந்த அவசர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
"இந்த பிரதேசம் உண்மையில் வெள்ளத்தின் நேரடிப் பாதிப்புக்கு உள்ளாகவில்லை. எனினும், பெருமழையினால் முள்ளியவளையில் கசிந்துவரும் நீரூற்றுக்களின் காரணமாகவே மக்கள் பாதிக்கப்பட்டனர்.
அது தொடர்பில் ஆராய்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்" என மாவட்டச் செயலர் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் இணைப்புச் செயலர் இர்ஷாத் ரஹ்மத்துல்லாஹ்வுக்கு உறுதியளித்தார். (க-56)



## கிளாலி மக்களின்பிரச்சினைகள் நேரடியாகச் சென்று ஆய்வு

கிளிநொச்சி.ஜன.8
கிளாலி மக்களின் பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நேரடியாகச் சென்று ஆய்வுசெய்துள்ளார்.
கிளாலி பொது அமைப்புக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கிளாலிக் கிராமத்துக்குப் பயணம் செய்து மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வுசெய்துள்ளார்.
பயன்பாடற்ற காணிகளை விவசாயத் தேவைகளுக்காக மக்களுக்குப் பகிர்ந்தளித்து விவசாய உற்பத்திகளை ஊக்குவிப்பதுடன் மக்களின் சுயசார்பு பொருளாதாரத்தை எவ்வாறு கட்டமைப்பது என்பது தொடர்பாகவும் ஆராய்தார். (க-6)

# காணி விடுவிப்பை 13 வருடமாக இழுத்தடிக்கும் அரச அதிகாரிகள்

*சட்டத்தரணி ஜெ.பி.ஏ.ரஞ்சித்குமார் தெரிவிப்பு*

மன்னார் மாவட்டத்தின் தேவன்பிட்டி மக்களுக்கு வழங்கப்பட்ட நூறு ஏக்கர் விவசாயக் காணிகள் விடயத்தில் அரச அதிகாரிகள் அக்கறையின்மையின் காரணமாக ஒரு மாதத்தில் தீர்த்து வைக்கவேண்டிய பிரச்சினையை 13 வருடங்களாக இழுத்தடித்தமை இயற்கை நீதிக்கும், மனித உரிமைக்கும் முரணானதாக இருக்கிறது என பாதிப்படைந்துள்ள தேவன்பிட்டி விவசாயிகள் சார்பாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முன்னிலையான சட்டத்தரணி ஜே.பி.ஏ.ரஞ்சித்குமார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் தேவன்பிட்டி பாதிப்படைந்த மக்களால் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து, கடந்த 4 ஆம் திகதி இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மன்னார் உப அலுவலகத்தில் சம்பந்தப்பட்டோருக்கிடையில் விசாரணைகள் நடைபெற்றன.
இந்த வழக்கு விசாரணைக்கு பாதிப்படைந்துள்ள தேவன்பிட்டி விவசாயிகள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி ஜே.பி.ஏ.ரஞ்சித்குமார் செய்தியாளர்களிடம் தொடர்ந்து தெரிவித்ததாவது;
மன்னார் மாவட்டத்திலுள்ள தேவன்பிட்டி மக்களுக்கு வழங்கப்பட்ட நூறு ஏக்கர் காணிகள் வேறு நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால், இந்தக் காணியை பாதிப்படைந்துள்ள மக்கள் மீளப்பெற முடியாமல் உள்ளனர்.
இதற்குக்காரணம் மக்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது போல, அரச திணைக்கங்கள் இதன் அதிகாரிகள் மக்களுக்கு காணிகளை கையளிக்காமையே. காணிக்கானசட்டபூர்வமான ஆவணங்கள் இல்லாமையால் வழங்கப்பட்ட காணியில் முறையாக விவசாயம் செய்ய முடியாமலும், இவர்களின் காணியை ஆக்கிரமித்து இருப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாமலும் தவிக்கின்றனர்.
இதற்கமைய வழங்கப்பட்ட காணிகள் உங்களுக்கு தரப்படும் எனப் பிரதேச செயலர் தெரிவித்து பல வருடங்கள் கடந்த நிலையில், பாதிப்படைந்தவர்கள் இவர்களுக்கு பின்னால் அலைந்து திரிந்தும் பிரச்சினை தீர்க்கப்படவில்லை.
பாதிப்படைந்தமக்கள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தனர். இந்த விடயமாக இறுதியாக கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, இந்த நூறு ஏக்கர் காணியையும் கிராமத்தைச் சார்ந்த 14 நபர்கள் உரிமை கோரியிருக்கின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.
இந்த 14 நபர்களால் வழங்கப்பட்ட ஆவணங்களைப் பிரதேச செயலர்பெற்றிருக்கின்றார். ஆனால் ஆவணங்கள் சட்டபூர்வமான ஆவணமா அல்லது அரசால் முறையாக வழங்கப்பட்டது மாற்றப்பட்ட ஆவணமா என்பதை பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. இந்த 14 நபர்களும் சட்டபூர்வமாக பெறப்பட்ட காணி என முடிவெடுத்த பின்புதான் காணியிலிருந்து வெளியேற்றுவதா என்பதை முடிவெடுக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பின்புதான் இந்த நூறு ஏக்கர் காணியை சட்டபூர்வமாக வழங்குவதற்கு வாக்களிக்கப்பட்ட மக்களுக்கு பிரித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகக் காணிப் பிணக்குகளைத் தீர்க்கும் சபைக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தேவன்பிட்டி மக்களின் முன்னிலையிலே காணி அளக்கப்பட்டது. அப்பொழுது எந்த நபர்களும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. ஆனால் இப்பொழுது இந்த 14 நபர்கள் இந்தக்காணிக்கு உரிமைகோரியிருப்பதாக காணி நில அளவைத் திணைக்களம் தங்கள் நில அளவைப் படத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. அதேநேரத்தில் உரிமைகோரியிருந்த நபர்களின் ஆவணத்திலும் குறிப்பிட்ட காணிக்குமிடையே வித்தியாசம் காணப்படுகிறது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இவற்றை வெளிப்படையாக பார்க்கின்றபொழுது பிரதேச செயலரின் அசமந்த போக்காகவே நான் எனது தொழில் ரீதியான நிலையில் அவதானிக்க கூடியதாக உள்ளது.
உண்மையில் ஒரு மாதத்தில் தீர்த்து வைக்கவேண்டிய பிரச்சினையை 13 வருடங்களாகஇழுத்தடித்தமைஇயற்கை நீதிக்கும் மனித உரிமைக்கும் முரணானதாக உள்ளது.
ஆகவே பிரதேச செயலர், மாகாண காணி ஆணையாளர் நாயகம், நில அளவைத் திணைக்களம் எல்லோரும் ஒன்றிணைந்து இந்தக் காணி அரச காணியென வெளிப்படையாக மிக விரைவாகத் தெளிவுபடுத்தி, மக்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டதுக்கு அமைய மக்கள் காணிக்காகத் தங்கள் உழைப்பை, பணத்தை மூலதனமாக செலவளித்துள்ளனர். அத்துடன் காணிக்காக பல வருடங்களாக காத்திருந்து பல முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளனர். ஆகவே இதற்குத் துரோகம் விளைவிக்காது பிரதேச செயலர் ஏற்கனவே வாக்குறுதி அளித்ததுபோல காணியை தேவன்பிட்டி மக்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்பதே எங்களது வேண்டுகோளாக இருக்கின்றது - என்றார். (க-60)




## மாகாண விருது வழங்கும் நிகழ்வு

வவுனியா.ஜன.8
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாகாண விருதுவழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மதியம் 3 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் மன்றத்தின் பணிப்பாளர் என்.எம்.நௌபர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா மாவட்டச் செயலர் எம்.கனீபா கலந்துகொண்டிருந்தார்.
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வன்னி மாகாணத்தில் நடத்தப்பட்ட இயல், இசை, நாடகம், பாட்டு, அறிவிப்பு ஆகிய கலைகளில் பங்குபற்றி போட்டிகளில் வெற்றிபெற்ற 177 இளைஞர்களுக்கான விருதுகள் நிகழ்வில் கலந்துகொண்டிருந்த விருந்தினரால் வழங்கிவைக்கப்பட்டன.
நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றிருந்தன.
நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் விநோனோகதாரலிங்கம், மாகாணசபை முன்னாள் உறுப்பினர். எஸ்.மயூரன், நகரசபை உறுப்பினர்களான சு. காண்டீபன், க.சந்திரகுலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (க-110)

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

முல்லைத்தீவு.ஜன.8
மாங்குளம் மத்திய மகா வித்தியாலயத்தினுடைய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.
மாங்குளம் மகாவித்தியாலயத்தின் பழையமாணவர்களின் தைப்பொங்கல் நிகழ்வு மற்றும் பாடசாலையின் 2019 ஆம் ஆண்டின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்கிழமை மாங்குளம் மத்திய மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.
எனவே அனைத்துப் பழைய மாணவர்களும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். (க-222)

### விடுதலைக்காக போராளிகள் போராடிய நேரம்

# பொருளாதாரத் தடைக்கு எதிராகவும் போராடினோம்

*நெடுங்கேணி பண்ணையாளர் சங்கத் தலைவர் வை.பூபாலசிங்கம் தெரிவிப்பு*

முல்லைத்தீவு,ஜன.8

**எமது மண்ணில் விடுதலைக்காக போராளிகள் போராடிய நேரம் எமக்கான பொருளாதாரத் தடைக்கு எதிராகப் போராடியவர்களும் கொல்லப்பட்டனர் என நெடுங்கேணிப் பண்ணையாளர் சங்கத் தலைவர் வை.பூபாலசிங்கம் தெரிவித்தார்.**

2007ஆம் ஆண்டு இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையினரின் கிளைமோர்த் தாக்குதலில் உயிரிழந்த இரு விவசாயத் திணைக்கள ஊழியர்களின் நினைவு தினம் நேற்று முன் தினம் நெடுங்கேணி கமநல சேவைத் திணைக்கள அலுவலகத்தில், நெடுங்கேணி பண்ணையாளர் சங்கத் தலைவர் வை. பூபாலசிங்கம் தலமையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி நெடுங்கேணி ஐயன்கோவில் ஏற்றப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் இரு அரச அலுவலர்கள் அநியாயமாக உயிரிழந்தனர். குறிப்பாக விவசாய மக்களின் வாழ்வியலோடு தொடர்புபட்டு உழைத்த இந்த விவசாயப் போதனாசிரியர்களை நாம் அன்றைய தினத்தில் இழந்தோம்.

இந்தச் சம்பவத்தின்போது கனகலிங்கம் மற்றும் மகேந்திரன் ஆகிய இரு அலுவலர்கள் அன்றைய தினம் உயிரிழந்தனர்.

எமது மண்ணில் அன்று போராட்டம் இடல்பெற்ற காலத்தில் பொருளாதாரத் தடை மிக இறுக்கமாக இருந்தது. இந்த நேரத்திலேயே அந்த பொருளாதாரத் தடைக்கு எதிராகவும் போராட வேண்டிய தேவை இருந்தது. அந்தப் போராட்டத்தில் இந்த போதனாசிரியர்களின் பங்கு மிக முக்கியமாக இருந்த நேரத்திலேயே இவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறு உயிரிழந்த இருவரையும் ஆண்டுதோறும் நினைவு கூறவேண்டியது விவசாயிகளான எமது கடமையாகும். என்றார்.

குறித்த நிகழ்வில் நெடுங்கேணிப் போதனாசிரியர் சி.சிவலாம், சிவதாஸ் உட்பட விவசாயிகள் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (க-105)



## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

கொடிகாமம், ஜன. 8

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள ஒளிரும் வாழ்வு அமைப்பினரால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஒளிரும் வாழ்வு அமைப்பின் தலைவர் ப. இராசகுமார் தலைமையில் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தின் கலையரங்கத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பிரபாகர்,மதிப்புறு விருந்தினராக புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அதிகாரி சி.சுப்பிரமணியேஸ்வரன்,

சிறுவர் நிதியத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் சுதர்சன், பாடசாலை அதிபர்கள், ஒளிரும் வாழ்வு அமைப்பின் செயலர் இ.அம்பிகைபாலன், நிதி அன்பளிப்பு செய்த நிறுவனத்தின் பிரதி நிதிகள், ஈ.ரி.சி கனடா அமைப்பின் இணைப்பாளர், தெரண்டிப் சிறுவர் இல்ல இணைப்பாளர், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்

ஒளிரும் வாழ்வு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள கோட்டக்கல்விப் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட ஒளிரும் வாழ்வு நிலையத்தின் அறிவுச்சோலை கல்விப் பிரிவில் அங்கத்துவம் பெற்ற 250 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

புலம்பெயர் உறவுகளின் நிதியுதவியுடன் 10 இலட்சம் பெறுமதியான புத்தகப்பை, கொப்பி. சப்பாத்து, சீருடைகள், எழுதுகருவிகள் உள்ளிட்ட கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (க-159)

## ஒரு இலட்சம் பணப்பரிசினை வென்றது வவுனியா ஜங்ஸ்ரார்

வவுனியா.ஜன.8

ஒப்பந்த நிறுவனம் ஒன்று நடத்திய அணிக்கு ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் வவுனியா ஜங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வென்று ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசினை பெற்றுள்ளது.

கடந்த ச்னிக்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பித்த இந்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி சனி.ஞாயிறு என இரு தினங்களும் முழுநேரமாக இடம் பெற்றது.

இறுதிப்போட்டிக்கு தெரிவாகிய மருதநிலா மற்றும் ஜங்ஸ்ரார் விளையாட்டுக் கழகங்கள் மோதியதில், ஜங்ஸ்ரார் கழகம் இரண்டு கோல்களை போட்டு 2:0 என்ற ரீதியில் வெற்றி பெற்று ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசுடன் வெற்றிக்கேடயத்தையும், இரண்டாம் இடத்தை பெற்ற மருதநிலா அணி 50 ஆயிரம் ரூபா பணப்பரிசையும் இரண்டாவது வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டன.

நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், விளையாட்டு வீரர்கள், விளையாட்டு அலுவலர்கள்."எ குழுமம்" நிறுவனத்தின் பணிப்பாளர் பத்மநாதன் தயாபரன் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.(க110)





## நூலகத்துக்கான புத்தகங்கள் வழங்கல்

கொடிகாமம்.ஜன.8

வரணி நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் , மற்றும் நூலகத்துக்கான ஒருதொகுதி புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வு கடந்த புதன்கிழமை காலை 11 மணிக்கு வித்தியாலயத்தின் மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திருமதி. வ.கபிரியேல்பிள்ளை தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பழைய மாணவரான இ.ஜெயச்சந்திரன் பல்லூடக எறியியும் (மல்ரி மீடியா புரொஜெக்ட்) பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளால் விளையாட்டு உபகரணங்கள் , மற்றும் நூலகத்துக்கான ஒரு தொகுதி புத்தகங்கள் என்பனவும் வித்தியாலய அதிபர் திருமதி. வ.கபிரியேல்பிள்ளையிடம் கையளிக்கப்பட்டன.

75 ஆயிரம் ரூபா பெறுமதியான பல்லூடக எறியியும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும் நூலகத்துக்கான ஒரு தொகுதி புத்தகங்களும் வித்தியாலயத்திற்கு பழைய மாணவர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகளால் அன்பளிப்பு செய்யப்பட்டன. (க159)

## பல்கலை மாணவர்களால் கற்றல் உதவி

சாவகச்சேரி, ஜன.8

மீசாலையில் இயங்கும் தஞ்சாவூர் பல்கலைக்கழக தொலைக்கல்விப் பிரிவினர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

முகமாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்கும் 32 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை 1 ஆம் திகதி வழங்கி வைத்தனர் .

இந்த நிகழ்வில் மூத்த விரிவுரையாளர், மாணவர் ஒன்றியத்தின் தலைவர், செயலர் உட்பட பல்கலைக்கழக மாணவர்கள்பலர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினர். (க-9)





## கல்விக்கு கரம் கொடுப்போம் தொனிப்பொருளில் உதவி

வவுனியா.ஜன.8

பரந்தன் இரசாயனக் கூட்டுஸ்தாபனத்தின் முன்னாள் உதவிப்பணிப்பாளரான அமரர் கிருஷ்ணமூர்த்தி கனகலட்சுமியின் 10 ஆவது ஆண்டு நினைவு தினத்தினை முன்னிட்டு கல்வி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரான்சின் எம்.ஏ.மொழிபெயர்ப்பகத்தின் குடும்ப உறவினர்களின் அனுசரணையுடன் வேப்பங்குளம் வின்சன் கோட்டத்தைச் சேர்ந்த மிகவும் வறிய நிலையில் உள்ள மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நகரசபை உறுப்பினர் எம். லரீப், றிஸ்மின் எம்.லாரீஸ் எஸ்.றியாஸ்தீன், க.அமுதன் கிராம மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (க-110)



## நகரசபை உறுப்பினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்

வவுனியா.ஜன.8

கல்விக்கு கரம் கொடுப்போம் என்ற தொனிப்பொருளில் சமுர்த்தி அலுவலர் துர்க்கா ஜெயராமனின் தகவலுக்கமைய மஹாரம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த மிகவும் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நகரசபை உறுப்பினர் ஆர்.எம்.லரீப் குறித்த உதவியை கடந்த சனிக்கிழமை வழங்கியிருந்ததுடன், இதற்கான நிதி உதவியை பிரதேசசபை உறுப்பினர் அருளானந்தம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-110)



# சபரிமலைவிவகாரத்தால் கேரளாவில் வன்முறை

கேரளா.ஜன.8
சபரிமலைக்குப் பெண்கள் அனுமதிப்பு விவகாரத்தில் கேரளாவில் வன்முறைச் சம்பவங்கள் நீடிப்பதால் கேரளாவின் பல பகுதிகளில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது. கேரளாவில் புகழ்பெற்ற சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குள் பெண்களை அனுமதிக்குமாறு இந்தியா உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து அதற்குப் பலத்த எதிர்ப்பு மற்றும் போராட்டங்கள் நடந்து வருகின்றன.
இவற்றுக்கு மத்தியில் கேரளாவைச் சேர்ந்த 2 பெண்கள் கடந்த 2 ஆம் திகதி பொலிஸ் பாதுகாப்புடன் சபரிமலை ஐயப்பனைத் தரிசனம் செய்தனர். இதைத்தொடர்ந்துகேரளா நிலம் முழுவதும் போராட்டமும், வன்முறைச் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன. அரசியல் தலைவர்களின் வீடு மற்றும் கட்சி அலுவலகங்கள் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன. குறிப்பாக, கண்ணூர்மாவட்டத்தின் தலசேரி உள்ளிட்ட பகுதிகளில் மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட மற்றும் பா.ஜ.க.தலைவர்களின்வீடுகள்மாறி மாறித் தாக்கப்படுவதால் பதற்றம் நீடித்து வருகிறது. தலசேரி மண்டல பா.ஜ.க. இளைஞரணி தலைவர் ரிதிலின்வீட்டில்நேற்றுமுன்தினம்இரவு மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் தொண்டர்களால் வெடிகுண்டு வீசப்பட்டது. இதில்அவரதுவீட்டிலுள்ளசிலபொருள்கள் சேதமடைந்தன. தலசேரில் பா.ஜ.காவின் கொடிக்கம்பம் சேதப்படுத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் தொண்டர்களின்ஆர்ப்பாட்டத்தில்பா.ஜ.காவினர் கல்வீச்சு நடத்தினர். இதில் 2 பெண்கள்காயமடைந்தனர்.
கேரளாமுழுவதும்வன்முறைச்சம்பவங்கள் நடந்து வருகின்றன. இதனால் தலசேரி உள்ளிட்ட பகுதிகளில் '144'தடைஉத்தரவுபிறப்பிக்கப்பட்டது. மாநிலத்தின் பல பகுதிகளிலும் வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வருவதாகாவும், அதனால் அந்த பகுதிகளில்பதற்றம்நிலவுவதாகவும்கேரளாவில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நினைவிழந்திருந்த பெண் வன்புணரப்பட்ட சம்பவம்



நியூயோர்க்.ஜன.8
அமெரிக்காவில்கடந்த 10 வருடங்களாக நினைவிழந்திருக்கின்ற பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் உள்ள பீனிக்ஸ் நகரில் தனியார் மருத்துவமனை ஒன்றில் ஒரு பெண் கடந்த 10 வருடங்களாக 'கோமா' நிலையில்சிகிச்சைபெற்றுவருகிறார். கடந்த டிசம்பர் 29ஆம் திகதி அந்தப் பெண் திடீரென வேதனை கலந்த குரலில் முனகினார். அதைக் கவனித்த தாதி அந்தப் பெண்ணுக்குப் பிரசவத்துக்கான அறிகுறிகள் தெரிவதை உணர்ந்துள்ளார். பின்னர் அந்தப் பெண் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தார்.
இந்தச் சம்பவம் அந்தப் பெண்ணுக்குச்சிகிச்சையளித்துவந்தமருத்துவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவர்கர்ப்பமாகஇருந்தவிவரம் அவருக்குச் சிகிச்சையளித்து வந்த எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. நோயாளியாகவே சிகிச்சை அளித்து வந்தனர். இந்த நிலையில் அந்தப் பெண்தற்போது குழந்தைபெற்றிருக்கிறார். இதனால், குறித்த பெண் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் மருத்துவர்கள் மத்தியில் எழுந்துள்ளது.
இந்தச் சம்பவம் குறித்து அரிசோனா மாகாண சுகாதாரத்துறை விசாரணைநடத்திவருவதுடன்மருத்துவமனைகளில்பாதுகாப்பைப்பலப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

# பிரான்சில் எழுச்சி மஞ்சள் அங்கிப்

## பல இடங்களில் வன்முறை




பாரிஸ்.ஜன.8
**பெற்றோல் மற்றும் டீசல் விலை உயர்வுக்கு எதிராகப் பல வாரங்களாகப் பிரான்ஸ் மக்கள் முன்னெடுத்து வருகின்ற மஞ்சள் அங்கிப் போராட்டம் மீண்டும் வலுப்பெற்றது. இதனால் பல இடங்களில்வன்முறைச்சம்பவங்கள்பதிவாகின.**



பிரான்ஸ்நாட்டில், சுற்றுச்சூழலைக்காரணம்காட்டி(பாரீஸ் பருவநிலை ஒப்பந்தம் உட்படப் பல காரணங்களைக் குறிப்பிட்டு) பெட்றோல் மற்றும் டீசல் மீதான வரியைப் பிரான்ஸ் அரசு உயர்த்தியது. இதை எதிர்த்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். வாரக்கணக்கில் தொடர்ந்த இந்தப் போராட்டம் விரிவடைந்தது. மஞ்சள் அங்கியை அணிந்தவாறு போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தமது ஒற்றுமையை, ஒருமித்த உணர்வை வெளிப்படுத்தினர். மக்களின் போராட்டத்துக்குப் பணிந்த பிரான்ஸ் அரசு பெற்றோல்மற்றும்டீசல்மீதானவிலையைத்தளர்த்துவதாக அறிவித்தது. ஆனால், பெட்றோல் மற்றும் டீசல் மீதான வரி உயர்வை கண்டித்து தொடங்கிய போராட்டம், அரசின் பல்வேறு கொள்கைகளுக்கு எதிராகத் திரும்பியது. மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தி அனுமதி பெற்றபின்னரே அரசு இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்பதாகப்பலகோரிக்கைகளைமுன்வைத்துப்போராட்டம் திசை திரும்பியது. பெருந்திரளான மக்கள் இதில் பங்கேற்றனர். இந்தப்போராட்டம்பிரான்ஸின்தலைநகர்பாரீஸைத்ஸ்தம்பிக்க வைத்தது. பாரீஸ் உட்படப் பிற நகரங்களி போராட்டங்களில் குறைந்த அளவிலான மக்க பங்கேற்றனர். அமைதியான முறையில்ஆர்ப்பாட்ட

# இந்தோனேசியாவில் நிலநடுக்கம்




ஜகார்த்தா.ஜன.8
இந்தோனேசியாவின் டெர்னட்டே நகரின் அருகே நேற்று அதிகாலை 6.6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. பசுபிக் பெருங்கடல் பகுதியில், நிலநடுக்கங்கள் அடிக்கடி ஏற்படும் நெருப்பு வளையம் பகுதியில் அமைந்துள்ளது இந்தோனேசியா. அதன் வடபகுதியில், மலுக்கு மாகாணத்தில் நேற்று அதிகாலை சக்திவாய்ந்தநிலநடுக்கம்ஏற்பட்டது. டெர்னட்டே நகரில் வடமேற்கே 175 கிலோமீற்றர் தூரத்தில்தரையில் 60 கிலோமீற்றர்ஆழத்தில்ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.6அலகுகளாகப்பதிவானது. அந்தப்பகுதியில் உள்ள வீடுகள் இந்த நிலநடுக்கத்தால் குலுங்கின. இதனால் உண்டான சேதம் மற்றும் இழப்புகள் தொடர்பான தகவல்ஏதும்வெளியாகவில்லை. சுனாமிஎச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை. இந்தோனேசியாவின் சுமத்ரா மற்றும் ஜாவாத் தீவுகளுக்கு இடையில் கடந்த மாதம் எரிமலைவெடிப்பைத்தொடர்ந்துஏற்பட்டசுனாமியால் 400க்கும் அதிகமானவர்கள் சாவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாக். முன்னாள் அதிபரின் சொத்துக்கள் முடக்கம்

இஸ்லாமாபாத்.ஜன.8
பாகிஸ்தானின்முன்னாள்அதிபர்ஆசிப்அலிசர்தாரிஊழல்வழக்கில்கைதுசெய்யப்பட்டதையடுத்து அவரது சொத்துக்களை முடக்குவதற்குப் பாகிஸ்தான் உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது. இவர் பாகிஸ்தானின் அதிபராகப் பதவி வகித்த போது ரூ.66 ஆயிரம் கோடி அளவுக்கு ஊழல் செய்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. அது தொடர்பாக விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் நடந்து வந்தன. அந்த விசாரணைக் குழுவின் அறிக்கை நேற்றுமுன்தினம் பாகிஸ்தானின் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. அதன்படி சர்தாரி, அவரது தங்கை பர்யால்தர்பூர் மற்றும் 'சர்தாரி குரூப்' ஆகிய சொத்துக்களை முடக்குவதற்குப் பரிந்துரை செய்தது உயர்நீதிமன்றம்.



# ...சியடைந்தது
# ...ப் போராட்டம்
## ...றைகள்





...நகரங்களில் நடந்த ...லான மக்கள் மட்டும் ...ஆர்ப்பாட்டங்கள்நடை

பெற்றதால் வன்முறைச் சம்பவங்கள் நிகழவில்லை. இந்த நிலையில் 8ஆவது வாரமாகக் கடந்த சனிக்கிழமை நடந்த போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் திரண்டனர். போராட்டம் வலுப்பெற்றது. பல இடங்களில் வன்முறையும் வெடித்தது. பாரீசில் செயின்ட் ஜெர்மைன் என்கிற இடத்தில் ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள் தங்கள் கண்ணில் பட்ட பொருள்களுக்குத்தீவைத்தனர். இதனால்அங்குபதற்றமான சூழல் உருவானது.

அதேபோல்,செயின்ஆற்றங்கரையைஒட்டியுள்ளபகுதிகளில் குவிந்த போராட்டக்காரர்கள் படகுகள், வீதியில்நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மகிழுந்துகளுக்குத் தீ வைத்தனர். இந்தவன்முறைகளுக்குக்கண்டனம்தெரிவித்த பிரான்ஸ் அதிபர் மக்ரோன் "பிரான்ஸ் மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டு உள்ளது.

வன்முறைக்குக் காரணமான அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள். போராட்டத்தில்ஈடுபடும்ஒவ்வொருவரும் போராட்டத்தைக்கைவிட்டுப்பேச்சுவார்த்தைக்குவரவேண்டும்" என்றுள்ளார்.

...கம்

EST PA

...மத்ரா ...மாதம் ...யால் ...தமை

...ம்



# டைனோசரை உருவாக்கியவர் பிரம்மா! இந்திய அறிவியலாளரின் புதிய தகவல்

குஜராத்.ஜன.8

உலகைப் படைத்த கடவுள் பிரம்மனுக்கு டைனோசர் பற்றித் தெரியும், வேதத்திலே டைனோசர் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார் என இந்திய அறிவியல் மாநாட்டில் தனது ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்துள்ள பஞ்சாப் பல்கலைகழகத்தின் புவியியல் துறை துணைப் பேராசிரியர் கோஸ்லா தெரிவித்துள்ளார். இந்தியாவில் டைனோசர்கள் இருந்துள்ளன. ராஜசுரஸ் எனும் டைனோசர்இந்தியாவைச்சேர்ந்ததுஎன்றும்குறிப்பிட்டுள்ளார்.

வேதத்தில் இருந்து தான் அமெரிக்கர்களும், பிரிட்டிஷ்காரர்களும்டைனோசர்எனும்விடயத்தைத் தெரிந்துகொண்டுள்ளார். 6.5 கோடி வருடத்துக்கு முன்னரே டைனோசர்கள் இருந்திருந்தாலும், கடவுள் பிரம்மனுக்கு உள்ள அளவற்ற ஆன்மீக சக்தி மூலம் டைனோசர்கள் பற்றி அறிந்திருந்தார். வேதத்தில் டைனோசர்பற்றிஅவர்குறிப்பிட்டுள்ளார். டைனோசர் எனும்வார்த்தையேசமஸ்கிருதத்தில்இருந்துவந்தது. டைனோஎன்றால்'கோரமான' எனப்பொருள்சமஸ்கிருதத்தில் டாயன் என்றால் சூனியநிபுணர் மற்றும் சர் என்பதுபல்லியைக்குறிக்கிறது. சமஸ்கிருதத்தில்அசுர் என்றால்அசுரன். ஆகவேபூமியில்இருந்தஅனைத்து உயிரினங்களும் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன" எனக்கூறுகிறார் கோஸ்லா. தனது குழுவுடன் இணைந்து குஜராத்தின் கெடா மாவட்டத்தில் இந்திய டைனோசரின் எச்சங்களைக் கண்டுபிடித்ததாகக் கூறும் கோஸ்லா, அதற்கு ராஜசுரஸ் எனப் பெயரிட்டதாகவும் விவரித்துள்ளார்.

# இஸ்லாமியர்களைச் சீனாவின் கலாச்சாரத்துக்கு மாற்றச் சட்டம்

## சீன அரசு அதிரடி

பீஜிங்.ஜன.8

சீனாவில் வாழும் முஸ்லிம்களைச் சீனக் கலாச்சாரத்துக்கு மாற்றும் வகையில் புதிய சட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. சீனாவின் மேற்குப் பிராந்தியத்தில் உள்ள ஜின் ஜியாங் மாகாணத்தில் உய்குர் இன முஸ்லிம் மக்கள் அதிகமாக வசிக்கின்றனர். அவர்கள் உரிமைகள் கோரிப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதையடுத்து 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட உய்குர் முஸ்லிம்கள்தடுப்புக்காவல்முகாம்களில்தங்கவைக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. தகவல் வெளியிட்டது. இதைச் சீன அரசு மறுத்தது. இதற்கிடையில், சீனாவில் சில பகுதிகளில் முஸ்லிம்கள்தமது மதப் பழக்கவழக்கங்களைப்பின்பற்றுவது சட்டவிரோதமாகக் கருதப்படுகிறது. உண்ணாநோன்பு இருப்பது, தொழுகை நடத்துவது, நீளமாகத் தாடி வளர்ப்பது, முகத்தை மறைத்து செல்லும் 'ஹிஜாப்' அணிவது எல்லாமே சீனாவின் சில பகுதிகளில்தடைசெய்யப்பட்டுள்ளன. அதைமீறினால் கைது செய்யப்படுகின்றனர்.

இந்த நிலையில், சீனாவில் வாழும் முஸ்லிம்களை, சீனப் பழக்க வழக்கங்களுக்கும் கலாச்சாரத்துக்கும் மாற்றும் வகையில் புதிய சட்டம் ஒன்றைச் சீன அரசு அறிவித்துள்ளது. சீன மயமாக்கல் என்பது, சீனாவில் வாழும் சீனர்கள் அல்லாத மற்றச் சமூக மக்களைச் சீன கலாச்சாரத்துக்கு படிப்படியாக மாற்றுவதாகும்.

அதன்படி, சீனர்களின் உணவுப்பழக்கவழக்கம், எழுதுவது, தொழில், கல்வி, மொழி, சட்டம், வாழ்க்கை முறை, அரசியல், சித்தாந்தம், மதம், அறிவியல் தொழில்நுட்பம், கலாச்சாரம் என அனைத்து விடயங்களையும் மற்ற சமூகத்து மக்களும் பின்பற்றச் செய்வது. இதற்கான புதுச் சட்டத்தைத்தான் சீன அரசு அறிவித்துள்ளது.

அடுத்த 5 ஆண்டுகளுக்குள் சீனாவில் வாழும் முஸ்லிம்களைப்படிப்படியாகச்சீனமயமாக்கலுக்குமாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், இந்தச் சட்டத்தை எப்படிச்சீனாநடைமுறைப்படுத்தப்போகிறது என்றவிவரம் வெளியிடப்படவில்லை.



# காதல் கிசு கிசுவுக்கு மத்தியில் மலேசியா மன்னர் முடிதுறந்தார்



கோலாலம்பூர்.ஜன.8

ரஷ்யாவைச்பெண்ணைக்காதலித்துத்திருமணம்செய்துகொண்டதாகத்தகவல் வெளியானதைத்தொடர்ந்து, மலேசியாவின்மன்னர்ஐந்தாம்முஹம்மதுநேற்றுத் தனது பதவியைத் தானாக முன்வந்து துறந்தார். மலேசியாவில் மன்னரின் முடியாட்சியின் கீழ் கூட்டாட்சி முறையிலான அரசமைப்புச் சட்டம் நடைமுறையில் உள்ளது. அந்தநாட்டின் பதினைந்தாம் மன்னராகப் பொறுப்பு வகிப்பவர் சுல்தான் முஹம்மது(வயது49). அவரது தலைமையில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைமைஅமைச்சர், துணைத்தலைமைஅமைச்சர்களால்அந்தநாட்டின்ஆட்சி நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், உடல்நலக்குறைவுக்குச் சிகிச்சை மேற்கொள்வதாகக்கூறி2018ஆம்ஆண்டுமன்னர்விடுப்புஎடுத்திருந்தார். அதன் பின்னர், ரஷ்யாவைச் சேர்ந்த முன்னாள் 'மொஸ்கோ அழகி' பட்டம் பெற்ற பெண்ணை அவர்காதலித்துத்திருமணம்செய்துகொண்டதாகச்செய்திகள்வெளியாகின.

**இது தொடர்பில் மன்னரின் அரண்மனை வட்டாரங்கள் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. இந்தநிலையில், மன்னர்ஐந்தாம்முஹம்மதுஇன்றுதனதுபதவியைத் துறந்துள்ளதாகமலேசியாவின்மன்னர்அரண்மனைஅதிகாரபூர்வமாகஅறிவித்துள்ளது. அவரது பதவி விலகலுக்கான காரணம் தொடர்பாக அந்த அறிவிப்பில் குறிப்பிடப்படவில்லை. 'மொஸ்கோஅழகி' தொடர்பாகமுன்னர்வெளியானதகவல்களைஉறுதிப்படுத்தும்வகையில்இந்தப்பதவிவிலகல்அமைந்துள்ளதாகஅரசியலவதானிகள் கருதுகின்றனர்.**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## குண்டுச் சட்டிக்குள் ஓடும் அரசியல் குதிரைகள்

அண்மையில் நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்றஉறுப்பினருமானஏப்ரகாம்சுமந்திரன், பிரிக்கப்படாத நாட்டுக்குள் தீர்வு காண்பதற்கான தற்போதைய இறுதிச் சந்தர்ப்பத்தைச் சிங்கள மக்கள் தவறவிட்டுவிடக்கூடாது என்று தெரிவித்திருந்தார்.

அரசுக்கும் தெற்கு அரசியல்வாதிகளுக்குமான ஓர் எச்சரிக்கையாகவே அவர் இந்தக்கருத்தைத் தெரிவித்தார். அவரே கூறும் மென்போக்கு அரசியல் பாணியில் அவர் இந்த எச்சரிக்கையை தெற்கு அரசியல்வாதிகளுக்கு வெளிப்படுத்தினார் என்றும் சொல்லலாம்.

நேரடியாகச்சொன்னால் புதிய அரசமைப்பை உருவாக்கத் தவறுவீர்களாக இருந்தால் நாங்கள் மீண்டும் தனிநாட்டுக் கோரிக்கையைக் கையிலெடுப்போம் என்பதே அதன் பொருள் என்று கொள்ளவேண்டும். ஆனால், சுற்றிவளைத்து மூக்கைத் தொட்ட சுமந்திரன், இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் – என்றார்.

மீண்டும் தனிநாட்டுக் கோரிக்கையைக் கையில் எடுப்போம் என்று அவர் நேரடியாகச் சொல்லாமல்விட்டதற்கான காரணம், இனிமேல் அப்படிச் சொன்னால் மக்கள் ஏற்றுக்கொள்வார்களோ என்கிற அச்சம் காரணமாகவும் இருக்கலாம். 30 வருடகால ஆயுதப் போராட்ட காலத்தின் பின்னரான சூழலில் தனிக் குடும்ப வாழ்க்கை மேம்பாட்டை நோக்கி ஓடத் தொடங்கிவிட்ட, அபிவிருத்தி அபிவிருத்தி என்று அரசியல்வாதிகளும் ஆலாய் பறக்கத் தொடங்கிவிட்ட நிலையில் மீண்டும் தனிநாட்டுக் கோரிக்கையைத்தூக்கிப்பிடிப்பது சாத்தியம்தானா என்கிற அச்சம் காரணமாகவும் அவர் அதனை நேரடியாகச் சொல்லாமல் விட்டிருக்கலாம். அந்த அச்சம் அவருக்கு மட்டுமல்ல இங்கிருக்கும் எல்லாத் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் உண்டென்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதனால்தான் மூச்சுக்கு முந்நூறு தடவைகள் கூட்டாட்சி கூட்டாட்சி என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். தனியாட்சி என்பதை உச்சரிக்கவே அஞ்சுகிறார்கள்.

சுமந்திரனின் எச்சரிக்கை நேரடியாக இருந்தாலும் மறைமுகமானதாக இருந்தாலும் அது எதிர்பார்க்கப்பட்ட பாதிப்பை ஏற்படுத்தியதா தெற்கில் என்றால், மகிந்த தரபினரிடம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இது இறுதிவாய்ப்பெல்லாம் இல்லை, தமிழ் மக்கள் பொறுமை காத்தால் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய "அர்த்தமுள்ள" அதிகாரப் பகிர்வை நாமே வழங்குவோம் என்று தனது வழக்கமான திமிரோடு சுமந்திரனின் எச்சரிக்கையை தூக்கிப் போட்டுவிட்டார் மகிந்த.

ஜே.வி.பியினரிடம் இருந்து இதுவரையில் அதற்கு எதிர்வினை ஏதுமில்லை. ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் இருந்தும் குறிப்பிடத்தகுந்த எதிர்வினை இல்லை. புதிய அரசமைப்பை எப்படியும் கொண்டு வந்தே தீருவோம் என்கிற வழக்கமான புராணத்துக்கு மேலாக எந்தக்கருத்தும் வெளிவரவில்லை.

புதியஅரசமைப்புதொடர்பானமுயற்சிகளில்முழுமூச்சோடு ஈடுபட்டவர்சுமந்திரன். ரணில் மற்றும் மைத்திரி ஆகியோர் ஏதாவது செய்வார்கள் என்கிற நம்பிக்கையோடு அதில் ஈடுபட்டவர். அவரே எச்சரிக்கை விடும் அளவிற்கு தெற்கின் அரசியல்வாதிகள்இனவாதச்சகதியில்ஊறிக்கிடக்கிறார்கள் என்பதை சுமந்திரனின் உரையும் அதற்கான தெற்கின் எதிர்வினைகளும் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

அடுத்த தேர்தலில் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் வாக்குகளைக் கவர்வதுதான் தெற்கு அரசியல் கட்சிகள் அனைத்தினதும் ஒரே நோக்கம். எனவே அடுத்தடுத்து வரப்போகும் தேர்தல்களுக்கு மத்தியில் இந்த அரசியல்வாதிகள் முற்போக்காக எதையும் பேசப்போவதோ செய்யப்போவதோ இல்லை என்பதை வரலாறு தெளிவுபடுத்தி வைத்திருக்கிறது. தேர்தல் முடிந்த பிற்பாடு மீண்டும் இது குறித்து அடுத்த தேர்தல் வரை முற்போக்கான கருத்துக்களை அவர்கள் நிச்சயம் பேசுவார்கள். இதுதான் இலங்கை அரசியலின் பாலபாடம்.

தமிழ்த் தலைவர்களுக்கும் இது தெரியாத ஒன்றல்ல. ஆனால், புதிய வழியைக் கண்டறிய முடியாததால் அவர்களும் மாறி மாறி குண்டுச் சட்டிக்குள் குதிரையோடிக் கொண்டிருக்கிறார்கள்.

# சட்டம் ஒழுங்கு சீராவதற்கு மனம் வைப்பாரா மைத்திரி

இந்துமதி

யாழ்ப்பாணக் குடாநாடு போதைப் பொருள்களை விநியோகம் செய்கின்ற மத்திய நிலையமாக மாறிவருகின்றது. பிறவுண் ஐஸ் என அழைக்கப்படும் கொடிய போதைப் பொருள் பொலிஸாரால் அண்மையில் கைப்பற்றப்பட்டமை இதை உறுதிசெய்கின்றது.

போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்கள் தமது சுய நிலையை இழந்து விடுகின்றனர். இதன்பின்னர் தாம் செய்வதை உணராத நிலையில் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இவர்களைக் கட்டுக்குள் வைத்திருப்பது இலகுவான காரியமல்ல.

ஏற்கனவே குடாநாட்டின் குறிப்பிட்ட சில கடற்கரைப் பகுதிகளில் கஞ்சா வியாபாரம் கொடிகட்டிப் பறக்கின்றது. மீனவர்கள் போன்று கடலுக்குச் செல்கின்ற சிலர் கஞ்சாவைக் கடத்திச் சென்று விற்பனை செய்வதில் ஈடுபடுகின்றனர். இத்தகையவர்களில் பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலும் கஞ்சா வியாபாரம் ஓய்ந்ததாகத் தெரியவில்லை.

**போதையால் அழிகிறது இளையோர் எதிர்காலம்**

இளவயதினர் போதைப்பொருள்களைப் பாவிப்பதன் மூலமாக எதற்குமே பயனற்றவர்களாக மாறிவிடுகின்றனர். இதனால் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது அச்சமாகவுள்ளது. போதைப் பொருள்களைப் பயன்படுத்துபவர்கள் தம்மை அறியாமலேயே குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர். குடாநாடு உட்பட வடக்கின் ஏனைய பிரதேசங்களில் சட்டத்துக்கு அஞ்சாது இளவயதினர் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்குப் போதைப் பொருள் பாவனையே காரணமெனக் கூறப்படுகின்றது.

சில தீய சக்திகள் சாதாரண இளைஞர்களை விட பாடசாலை மாணவர்களிடேயேயும் போதைப் பொருள்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் செயற்படுகின்றன. மாணவர்களின் ஒழுக்கத்தையும் பாழடிக்கின்றன. தமிழர்கள் எத்தகைய இன்னல்கள் நேர்ந்தாலும் தமது கல்விக்குரிய முக்கியத்துவத்தை ஒருபோதும் குறைத்து விடுவதில்லை. இதைச் சீரழித்து விடுவதுதான் அந்தத் தீயசக்திகளின் நோக்கமாகவுள்ளது. அவர்களின் நோக்கம் நிறைவேறுமானால் தமிழர்களின் நிலை படுமோசமாக மாறிவிடும்.

அரச தலைவர் பொலிஸ்துறையை ஏற்றுக்கொண்ட பின்னர் போதைப் பொருள்களின் விற்பனை திடீரெனக் குறைந்து விட்டது என்று கூறப்படுகின்றது. இதில் எந்த அளவுக்கு உண்மை உள்ளது என்பதைக்கூற முடியவில்லை. ஆனால் இதில் உண்மையிருக்குமானால் தெற்கைப் போன்று வடக்கிலும் போதைப்பொருள்களின் விற்பனையும் பாவனையும் கட்டுக்கள் கொண்டுவரப்படல் வேண்டும். வடக்கு தமிழர்களின் பகுதிதானேயென்ற பாகுபாடு இருக்கவே கூடாது.

குடாநட்டில் திருட்டுச் சம்வங்கள் அதிகரித்துள்ளதால் மக்கள் அச்சத்துடன் பொழுதைக் கழிக்கின்றனர். எவராலுமே தம்மைக் காப்பாற்ற முடியாதென அவர்கள் நினைக்கின்றனர்.

இந்தநிலை மாற்றப்படவேண்டுமானால் மக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பான பொலிஸ் துறை தூய்மையாக்கப்படல் வேண்டும். குற்றவாளிகளுக்கும் பொலிஸுக்குமிடையே தொடர்புகள் இருப்பதன் காரணமாகவே குற்றவாளிகள் தண்டனைகளிலிருந்து தப்பித்து விடுகின்றனர் என்று பொதுமக்கள் குற்றம்சாட்டுவதில் உண்மை இருக்குமானால் அரச தலைவர் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்துதல் அவசியம். ஊழல் புரிகின்ற பொலிஸாரைப் பணியிலிருந்து நீக்கி விடுவதற்கான நடவடிக்கையிலும் அவர் ஈடுபடவேண்டும்.

> அரச தலைவர் பொலிஸ்துறையை ஏற்றுக்கொண்ட பின்னர் போதைப் பொருள்களின் விற்பனை திடீரெனக் குறைந்து விட்டது என்று கூறப்படுகின்றது. இதில் எந்த அளவுக்கு உண்மை உள்ளது என்பதைக்கூற முடியவில்லை. ஆனால் இதில் உண்மையிருக்குமானால் தெற்கைப்போன்று வடக்கிலும் போதைப்பொருள்களின் விற்பனையும் பாவனையும் கட்டுக்கள் கொண்டுவரப்படல் வேண்டும். வடக்கு தமிழர்களின் பகுதிதானேயென்ற பாகுபாடு இருக்கவே கூடாது.

**தென்பகுதியில் அதிகரித்துள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்**

தென்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்



சாதாரணமாக இடம்பெறுவதைக் காண முடிகின்றது. முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்சவின் சொந்த மாவட்டத்திலுள்ள தங்காலையில் நான்குபேர் சுட்டுக்கொல்லப்பட்ட அதே வளை கொழும்பிலும் ஒருவர் துப்பாக்கிச் சூடு காரணமாக இறந்துள்ளார்.

தெற்கைப் பொறுத்தவரையில் பாதாள உலகக் குழுக்களிடையே மோதல்கள் ஏற்படுவது சாதாரண விடயமாகவிட்டது. இந்தக் குழுக்கள் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு பணத்தைச் சம்பாதிப்பதில் ஈடுபட்டுள்ளன. இவர்களுடன் செல்வாக்குமிக்க அரசியல்வாதிகள் தொடர்புகளைப் பேணி வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது. இதன் காரணமாகவே இந்தக் குழுக்கள் சட்டத்துக்கு அஞ்சாமல் செயற்படுவதுடன் தண்டனைகளிலிருந்தும் தப்பிக்க முடிகின்றது. இதே நிலை நீடிக்குமானால் நாட்டை எவராலும் காப்பாற்றிவிட முடியாது.

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சைத் தம்வசம் கொண்டிருக்கும் அரச தலைவர் மனம்வைத்துச் செயற்பட்டால் வடக்கில் மட்டுமல்லாது அனைத்துப் பிரதேசங்களிலும் இடம்பெறுகின்ற குற்றச் செயல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். மக்களும் இதைத்தான் அவரிடமிருந்து எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

# போரைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள வறுமை வடக்கு – கிழக்கை கட்டிப் போட்டுள்ளது

ந.லோகதயாளன்

ஒஸ்லோ பிரதி முதல்வர் குணரட்ணம் கம்சி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். குணரட்ணம் கம்சியின் தாயார் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தையும் தந்தை கைதடியையும் பூர்வீகமாக கொண்டவர்கள். இவர் தனது நான்கு வயதில் நோர்வேக்குப் புலம்பெயர்ந்தார். 2007ஆம் ஆண்டு தனது 19ஆவது வயதில் முதன் முதலாக மாநகர உறுப்பினராகத் தெரிவானார். இன்று வரை அந்த மாநகரத்தின் உறுப்பினராகத் தொடர்கின்றார். 2015ஆம் ஆண்டு முதல் ஒஸ்லோ பிரதி முதல்வராகவும் செயற்பட்டு வருகின்றார். இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர் அண்மையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தார். தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ளார். அவருடனான செவ்வி.

**கேள்வி:** இலங்கையின் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் பிறந்து நோர்வே நாட்டில் தஞ்சமடைந்த நிலையில், இளம் வயதில் பிரதி முதல்வராக வந்தமை தொடர்பில் என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்:** சமூகம் அமைத்த கட்டமைப்பை சமூகத்தால் மாற்ற முடியும். பெண்களால் முயன்றால் முடியாதது என எதுவுமே இல்லை. அந்த நிலையில் நோர்வே நாட்டில் நான் செய்த முயற்சி மட்டுமல்ல அந்த நாட்டின் அமைப்பு முறைகளும் இதற்கு வழிசமைத்தன. இதனால்தான் 19 வயதில் ஒஸ்லோ மாநகரத்தின் உறுப்பினராகத் தேர்வாகினேன். அதைத் தொடர்ந்து தற்போது பிரதி முதல்வரானேன்.



### ஈழத்துப் பெண்களுக்காக குரல் கொடுக்க வேண்டும்

**கேள்வி:** தங்கள் பயணத்தின் முக்கிய நோக்கம் என்ன?

**பதில்:** குரல்களுக்குக் குரல் கொடுப்பதே எனது பயணத்தின் முக்கிய நோக்கம். இங்குள்ள பெண்கள் தமக்கான குரலை தாங்களே உயர்த்த வேண்டும். அதில் எந்த விடயத்துக்கு? எவ்வாறு?. எங்கே?. எப்போது? என்பதனை மட்டுமே நாம் வழிகாட்ட வேண்டும். அதன் பிரகாரம் முதலில் குரலை உயர்த்தி அவர்களுக்கான பாதையைத் திறக்க வேண்டும்.

**கேள்வி:** நோர்வே நாட்டின் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது.?

**பதில்:** ஒஸ்லோ மாநகர சபையில் 40 வீதமானோர் பெண்கள். நேர்வேயின் உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனுக்களில் ஆண்கள் 50 வீதமும் பெண்கள் 50 வீதமும் இருத்தல் வேண்டும். அதிலும் இளையோருக்கே சகல கட்சிகளும் முன்னுரிமை வழங்குகின்றன. இதன் காரணமாகவே முதன் முதலாக 2007ஆம் ஆண்டு தேர்வாகி இன்று 30 வயதுவரை ஒஸ்லா மாநகரின் உறுப்பினராக அங்கம் வகிக்கின்றேன்.

**கேள்வி:** இலங்கையில் அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் பெண்களுக்கும் நோர்வேயில் வசிக்கும் பெண்களுக்கும் உள்ள வசதி வாய்ப்புக்கள் நிறையவே வேறுபடும் நிலையில் எமது நாட்டுப் பெண்களின் திறமைகளை வெளிக்கொணர என்ன நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் எனக் கருதுகின்றீர்கள்?

**பதில்:** நோர்வே ஓர் அழகான நாடுதான் அதில் சந்தேகம் இல்லை. ஆனால் நோர்வேயில் வறுமை இல்லை எனக் கூறிவிட முடியாது. ஆனால் வறுமையை நோர்வே திறம்படக் கையாளுகின்றது. இங்குள்ள பெண்கள் சாதிப்பதற்கு பெரும் தடை வறுமையே.

**கேள்வி:** வடக்கு கிழக்கில் தற்போது போருக்குப் பின்னர் உள்ள சூழலில் பெண்கள் எதிர்நோக்கும் பல சவால்கள். பிரச்சினைகளை அறிந்திருப்பீர்கள். அந்த பிரச்சினைகளுக்கு என்ன காரணம் எனக் கருதுகின்றீர்கள்?

**பதில்:** தற்போது வடக்கு கிழக்கில் போருக்குப் பின்னர் உள்ள முக்கிய பிரச்சினை வறுமை. இந்த வறுமையை இல்லாது செய்ய உரிய வழிவகைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். இல்லாதுவிடில் இது உருப்பெற்று குற்றமா கக்கூடிய வாய்ப்பைப் பெறும்.

**கேள்வி:** இலங்கையில் இடம்பெற்ற போரின் காரணமாக அனைத்தும் சிதைவடைந்த நிலையில் தமிழ் மக்கள் அதிக நெருக்கடியையும் குறிப்பாக பெண்கள் அதிக அழுத்தத்தையும் எதிர்நோக்கும் நிலையில் இவர்களுக்கு என்ன செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றீர்கள்? என்ன உதவி செய்ய எண்ணுகின்றீர்கள் ?

**பதில்:** உடனடியாக என்னால் எதுவும் செய்ய முடியாது. அதே நேரம் இங்குள்ள பெண்களின் மனோதிடத்திலும் சந்தேகம் கிடையாது. ஏனெனில் போரில் ஆண்களுக்கு நிகராக ஆயுதம் தூக்கிப் போர் புரிந்த பெண்கள் இவர்கள். அதனால் எதனையும் சாதிக்கும் மனோபலம் உண்டு. இவை அனைத்தையும் செய்து சாதித்த பெண்களின் தற்போதைய அரசியல் பலம்போதாது. அதாவது தனியே பங்களிப்பு அன்றி தலைமைத்துவத்திற்கும் வர வேண்டும். அதற்கு உடனடியாகவே எனது அனுபவப் பகிர்வையும் வழிகாட்டலையும் வழங்க முடியும்.

### இலங்கைப் பெண்களும் நோர்வேப் பெண்களும்

**கேள்வி:** பெண்கள் குறித்தான அணுகுமுறை இலங்கையிலும் நோர்வேயிலும் வேறுபடுகின்றனவா?

**பதில்:** நிச்சயமாக வேறுபடுகின்றன. நோர்வேயில் இளையோர் என்றே பார்ப்பார்கள். ஆனால் இங்கு ஆண்கள், பெண்கள் எனப் பார்க்கின்றனர். இலங்கையில் ஒரு குழந்தை பிறந்தால் அதனை வளர்ப்பது முதல் கல்வி. உணவு வரையில் தாயின் கடமை என்றே பாரப்படுத்தப்பட்டும். ஆனால் நோர்வேயில் அவ்வாறு கிடையாது. அதற்கு அந்த நாட்டின் சட்டமும் இடமளிக்காது. உதாரணமாக ஒரு பெண் குழந்தையைப் பிரசவித்தால் பெண்ணுக்கு 7 மாத விடுமுறை உண்டு. அதன் பின்பு ஆணுக்கு 4 மாத விடுமுறை உண்டு. அதாவது இதுத்தான் சம உரிமையாகவும் இருக்கும். ஆணுக்கு உள்ள உரிமையை பெண்ணுக்கு வழங்க வேண்டும். அதேபோல் பெண்ணுக்கு உள்ள உரிமையை ஆணுக்கும் வழங்க வேண்டும். அதனால் அங்கே சமத்துவம் அதிகமாகக் காணப்படும்.

**கேள்வி** : எமது பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் பெண்களின் அபிவிருத்திக்கு உங்கள் அனுபவப் பகிர்வு மூலம் எதனை மேற்கொள்ள வேண்டும் எனக் கருதுகின்றீர்கள்?

**பதில்:** அரசியல் முதல் உள்ளூராட்சி வரையில் இளையோர் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். அதே நேரம் மக்களுக்கும் ஆளும் அரசுக்குமான நெருக்கம் மிகக் குறுகியதாக இருத்தல் வேண்டும். மக்களால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் உடனுக்குடன் செவி சாய்க்கப்பட வேண்டும். இவை நோர்வேயில் அதிகமாக உள்ளன என என்னால் திடமாகக் கூற முடியும். இவை அனைத்தும் இலங்கையில் இருக்கின்றதா?



## ஆசிரியருக்கான கடிதம்

### பொன்னாலைப் பாலத்தில் விபத்துக்களைத் தவிர்க்க வழிகாண்போம்

அண்மைக் காலமாக பொன்னாலைப் பாலத்தினூடாக மேற்கொள்ளப்படும் பல பயணங்கள் விபத்துக்களில் போய் முடிந்துள்ளன. அவற்றில் பலத்த காயங்களும் உயிர் இழப்புக்களும் இடம்பெற்றுள்ளமை கவலை தரும் விடயமாகும். அவ்வாறு ஏற்படுகின்ற விபத்துக்களில் பெரும்பாலானவை இரவு நேரங்களில் இடம்பெற்றுள்ளமை அவதானிக்கத்தக்கது.


பாலத்தில் இரவு வேளைகளில் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடும் உபகரணங்களுடன் பாதையின் இரு புறமும் பயணிப்பதாலும், ஊர்காவற்றுறை மீன்பிடித் துறைமுகத்தை நோக்கி பிற பிரதேச மீனவர்கள் நாளாந்தம் பயணிப்பதாலும் குறித்த பாலத்தினூடான இரவுப்பயணங்கள் அண்மைக்காலங்களாக அதிகரித்துள்ளன. இதனால் கும்மிருட்டுக் காரணமாக பல்வேறு விபத்துக்கள் தொடர்ச்சியாக ஏற்பட்ட வண்ணமுள்ளன.

ஆகவே இவற்றைத் தவிர்ப்பதற்கு பாலம் முழுவதும் வலுக்கூடிய தெரு விளக்குகளைப் பொருத்துதல். வேகக் கட்டுப்பாடுகளை குறைக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளல், போக்குவரத்து பொலிசாரின் கண்காணிப்பை அதிகரித்தல் போன்ற விடயங்களை உரிய அதிகாரிகள் முன்னெடுப்பது அவசியம். மக்கள் பிரதிநிதிகளும் உரிய அதிகாரிகளும் இந்தக் கோரிக்கையைக் கவனத்தில் எடுத்து விபத்துக்களைக் குறைக்க வழிவகைகளை ஏற்படுத்தித் தருவார்களா?

*நலன்விரும்பி*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



## மகளைக் கொன்று புதைத்த சந்தேகத்தில் தாய் கைது!

பதுளை.ஜன.8
தான் பெற்ற மகளைக் கொன்று புதைத்த சந்தேகத்தில் பதுளை ஹாலிஎல - கன்தேகெதர சார்ணியாத் தோட்டம் மஹதென்னப்பிரிவில்வசித்தபெண்ஒருவரையும்அவருடன் தொடர்பிலிருந்த ஆண் ஒருவரையும் நேற்றுமுன்தினம்கைதுசெய்துள்ளதாகப்பதுளைப்பொலிஸார்தெரிவித்தனர். சிறுமியைக்கொலைசெய்து, வீட்டுக்கு அருகிலுள்ள தோட்டத்தில்புதைத்திருப்பதாகவும்,
கடந்த வருடம் ஜனவரி மாதம் குறித்த கொலைச் சம்பவம் இடம்பெற்றதாகவும் பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாகவே குறித்த இருவரையும் கைதுசெய்ததாகப்பொலிஸார்மேலும்தெரிவித்தனர். வவுனியா - செட்டிக்குளத்தைச் சேர்ந்த குறித்த பெண் அவரது கணவனைப் பிரிந்து தற்போது கைது செய்யப்பட்டுள்ள நபருடன்ஹாலிஎலபகுதியில்வசித்துவந்துள்ளார். 9வயது நிரம்பிய தனது மகள், தன்னுடைய தங்கையின் பராமரிப்பில் வளர்வதாகவும், 5 வருடங்களுக்கு முன்பு மகளைத் தங்கையிடம் ஒப்படைத்து விட்டதாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்திருப்பதால் இது பற்றிய மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகப் பதுளைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மருந்தகங்கள் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அவசியம்

### கிழக்குப் பல்கலை விரிவுரையாளர் தெரிவிப்பு



மட்டக்களப்பு.ஜன.8

**மருந்தகங்கள் சமூகப் பொறுப்புடன் செயற்படவேண்டியதுகாலத்தின்அவசியம்என்று கிழக்குப் பல்கலைக் கழக மருந்தியல் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவர் ரொஷானி பிரகாஷ் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையும், மட்டக்களப்பு மாவட்ட தனியார்மருந்தகஉரிமையாளர்சங்கமும் இணைந்து நடாத்திய, மருந்தகங்களின் செயற்பாடுகள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமைநடந்தது. இந்தநிகழ்வில்கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயேஅவர்இவ்வாறுதெரிவித்தார். அங்குஇவர்மேலும்தெரிவித்ததாவது; மருத்துவரால்எழுதிக்கொடுக்கப்படாத மாத்திரைகளைமருந்தகங்கள்நோயாளிகளுக்கு வழங்குவது மிகப் பெரிய தவறு. காலாவதியான மாத்திரைகளைத் தெரியாமல் கொடுத்தாலும் அதுவும் தவறானது. நோயாளர் ஒருவர் தாதியர், மருத்துவர் உள்ளிட்ட அனைவரையும் கடந்து இறுதியில் மருந்து வழங்குநரிடம் தான் வருகின்றார். அந்த நோயாளிக்கு மருத்துவரின் கையால், மருந்து கொடுக்கப்படுவதில்லை. மருந்தாளரே வழங்குகின்றார். ஆகையால் பொறுப்புமிக்க பணி மருந்தகத்துக்கும், மருந்தாளருக்குமே உரியது. சில மருந்தகங்களில் மருத்துவர் எழுதிய மருந்துக்குப் பதிலாக அதே பெயரிலுள்ள வேறு நிறுவனத்தின், வேறுதரமுடைய மருந்தைவழங்கும் நிலை உள்ளது. இவ்வாறான தவறுகள், பிழைகள், நடைமுறைப் பிரச்சினைகள் குறித்து மேற்கொண்ட ஆய்வில், மருந்துவழங்கும்போதுபலநூறு நோயாளர்கள்வரிசையில்நிற்பார்கள். அதில் சில நோயாளர்களுக்குத்தான் விளக்கமாகச் சொல்லி மருந்தை வழங்க முடிகிறது. நாங்கள் குறிப்பிட்ட அளவில் வியாபாரம் காட்ட வேண்டும் குறித்த இலக்கை அடையவில்லையானால் சம்பளம் கிடையாது, அல்லது வேலையில் இருந்து நிறுத்திவிடுவார்கள் எனத் தனியார், அரச மருந்தகங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் தெரிவித்தார்கள். ஏனவே மருந்தகஉரிமையாளர்களும்மருந்துவழங்குநர்களும் சமூகப் பொறுப்புள்ளவர்களாகச் செயற்படவேண்டியது மிக அவசியம். - என்றார்.

## அக்கரப்பத்தனவில் பரவுகிறது காட்டுத் தீ

பதுளை.ஜன.8
அக்கரப்பத்தனப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப் பகுதிக்கு நேற்றுமுன்தினம்இனந்தெரியாதவர்களால்தீவைக்கப்பட்டதாகஅக்கரப்பத்தனப்பொலிஸார்தெரிவித்தனர். இதனால், அக்கரப்பத்தனக்காட்டுப்பகுதியின்ஒருதொகுதிஎரிந்துகருகி உள்ளது. அங்குதொடர்ந்துபரவிவருகின்ற தீயைக்காட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குப் பொதுமக்களுடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் தீ வைத்தவர்கள் குறித்தவிசாரனைகளை ஆரம்பித்துள்ளதாகவும்அக்கரபத்தனப் பொலிஸார் தெரிவித்தனர்.



நன்றி - சஜித் பண்டார



## கமராவைப் பறித்தது யானை பெரும்பாடுபட்டு மீட்டது பொலிஸ்

### கதிர்காமத்தில் சம்பவம்

யானைக்கு உணவு கொடுக்க முயற்சித்த ஆஸ்திரேலியாப் பெண்ணின்கையிலிருந்தகமராவை, அந்தயானைபறித்துச் சென்றசம்பவம்புத்தலை-கதிர்காமம்வீதியில்இடம்பெற்றது. கமராவைக் கைப்பற்றிய யானை, அந்தக் கமராவை கீழே கைவிடும்வகையிலான உத்திகளில் ஈடுபட்டு, பெரும்பிரயத்தனப்பட்டுக் குறித்த கமராவை யானையிடமிருந்து திரும்பப் பெற்றனர்பொலிஸார். இதுபற்றிமேலும்தெரியவருவதாவது: புத்தலை - கதிர்காமம் வீதியில் அந்த வழியாகச் செல்லும் மக்களிடமும், வாகனங்களில்செல்வோரிடமும் குறித்த யானை உணவு வகைகளைப் பெற்று வந்தது. இந்த நிலையில், ஆஸ்திரேலியாநாட்டு உல்லாசப்பயணியான குறித்த பெண்ணும் அவரது காதலனும் அந்த வழியாக வாகனத்தில் போகும் போது குறித்த யானைக்கு உணவளித்தனர்.
உணவை ஒரு கையால் வழங்கிக்கொண்டு, மற்றைய கையில் வைத்திருந்த கமாராவில் அதைப் பதிவு செய்தார் அந்தப் பெண். அவரிடம் உணவைப் பெற்ற யானை துதிக்கையால் கமராவையும் வலிந்து பெற்றது. கமரா பறிக்கப்பட்டமை குறித்து,
அந்தப்பெண்பொலிஸாருக்குத்தகவல்வழங்கினார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டு, யானையிடமிருந்து கீழே விழுந்த கமராவைத்திரும்பப்பெற்றுப்பறிகொடுத்தபெண்ணிடம்ஒப்படைத்தனர்.



## பொங்கலை முன்னிட்டு சிறப்புத் தேவையுடையோருக்கு புத்தாடைகள் வழங்கி வைப்பு

மட்டக்களப்பு.ஜன.8
தைப்பொங்கல்தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு - போரதீவுப்பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த கதிரவனால் சிறப்புத் தேவை யுடையோர் அமைப்பின் உறுப்பினர்களுக்குப் புத்தாடைகள்வழங்கப்பட்டன. இந்தநிகழ்வுகடந்தஞாயிற்றுக்கிழமை வெல்லாவெளியிலுள்ள அந்த அமைப்பின் அலுவலகத்தில், அதன் தலைவர் ப.கோணேஸ்வரன் தலைமையில்இடம்பெற்றது. ஆர்.டி.பிவங்கி, மக்கள்வங்கி ஆகியவற்றின் களுவாஞ்சிக் குடி கிளைகள், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மா.நடராச்சா, மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் மே.வினோராஜ் ஆகிய பலதரப்பினரின் நிதி அனுசரணையில் இந்தப் புத்தாடைகள் வழங்கப்பட்டன.

## பெண் பிள்ளைகளைப் பராமரிக்கும் செயல் முஸ்லிம் சமூகத்தில் அதிகரிக்க வேண்டும்

### முஸ்லிம் சமயம் மற்றும் கலாசார அமைச்சர் தெரிவிப்பு

பெண் பிள்ளைகளைப் பராமரிக்கின்ற நிலையங்கள் மிக அரிதாகக் காணப்படுகின்றன. இது பற்றி முஸ்லிம் சமூகம் பொறுப்புணர்வுடன்சிந்தித்துச்செயற்படவேண்டும்என்று முஸ்லிம்சமயம்கலாசாரம்மற்றும்தபால்துறைஅமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் தெரிவித்தார். குருந்து கொல்ல ரவ்ஸுல் இஸ்லாம்பராமரிப்புநிலையத்தின்திறப்புவிழாவில்கலந்துகொண்டபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
இந்தஇஸ்லாம்அமைப்புச்சட்டத்தரணிமர்ஹூம்ஸவாஹிர் தலைமையில்ஆரம்பிக்கப்பட்டது. இங்குபராமரிக்கப்படும் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக நிர்வாகத்தினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.
இந்த நிலையம் இலங்கையிலுள்ள அனைத்து மாணவர்களையும் உள்வாங்கிச் செயற்பட வேண்டும். அநாதரவான சிறார்களின் வாழ்க்கையில் மாற்றத்தை உண்டு பண்ணுவதற்காக நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. அவைசேவைகளைத்தொடர்ந்துசெய்வதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் துணை புரிய வேண்டும் - என்றார்.

## பதவியைப் பொறுப்பேற்றார் கிழக்கு ஆளுநர்



திருகோணமலை.ஜன.8
கிழக்குமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். கிழக்கு மாகாண ஆளுநராக இவர் கடந்த 4ஆம் திகதி அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டார். இன்றைய தினம் உத்தியோகபூர்வமாகப்பதவியைப்பொறுப்பேற்றுக்கையெழுத்திட்டார். இந்தநிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# நிலாவை சாப்பிடுவது யார்?

அடர்ந்த காடு. காட்டு விலங்குகளின் தலைவனாக இருந்தது ஓநாய். அன்று மாலை சூரியன் மறைந்தது. வானத்தைப் பார்த்து ஊளையிட்டு, விலங்குகளை அழைத்தது. ஓநாயின் குரலைக் கேட்டுப் பதறிப்போன விலங்குகள், அதன் இருப்பிடம் நோக்கி ஓடிவந்தன.

யானை, முயல், மான், நரி, சிறுத்தை, வரிக்குதிரை, புலி, காட்டெருது, குரங்கு, முள்ளம்பன்றி, ஒட்டகச்சிவிங்கி என்று அனைத்தும் ஒன்று திரண்டிருந்தன. நீண்ட நாள்களாகவே ஓநாய்க்கு ஒரு சந்தேகம். அதைத் தீர்த்துக்கொள்வதற்கே இந்தக் கூட்டம்.

“நண்பர்களே, வானத்திலிருந்து யாரோ ஒருவர் இரவு நேரத்தில் ஒரு நிலாவை வீசி எறிகிறார். உங்களில் ஒருவர்தான் அதைத் தினமும் கொஞ்சம் கொஞ்சமாகப் பிய்த்துச் சாப்பிடுகிறீர்கள். அது யார் என்ற உண்மை எனக்குத் தெரிந்தாக வேண்டும்” என்றது ஓநாய்.

எதிரிலிருந்த விலங்குகள் எல்லாம் நானில்லை நீயில்லை என்று வேகமாக மறுத்தன. உண்மையை ஒப்புக்கொள்ள எந்த விலங்கும் தயாராக இல்லை. தனக்குப் பயந்தும், கடுமையான தண்டனைக்கு அஞ்சியும் மற்ற விலங்குகள் வாயைத் திறக்காமல் அமைதி காக்கின்றன என்று நினைத்தது ஓநாய். ஆனாலும் தனது சந்தேகத்துக்கு விடை கிடைக்காமல் விடுவதாக இல்லை.

முதலில் யானையிடம் கேள்வியை ஆரம்பித்தது.

“உன்னிடம் மட்டுமே நீளமான தும்பிக்கை உள்ளது. நீதான் நிலாவைப் பிய்த்திருப்பாய்” என்றது ஓநாய்.

“ஐயோ, தும்பிக்கையைப் பாருங்கள். விளாம்பழ மரத்தின் உச்சிக் கிளையைக்கூட என்னால் தொட முடியாது. நான் எப்படி வானத்திலுள்ள நிலாவைப் பிடிக்க முடியும்?” என்று பதில் சொன்னது யானை.

யானை சொல்வதிலும் உண்மை இருக்கிறது என்று நினைத்தது ஓநாய். சட்டென்று கூட்டத்திலிருந்த ஒட்டகச் சிவிங்கியின் பக்கம் பார்வையைத் திருப்பியது.

அதைக் கவனித்துவிட்ட ஒட்டகச் சிவிங்கி, “உண்மையில் நான் இரண்டு நாள்களாகக் கழுத்து வலியோடு இருக்கிறேன். என் நீளமான கழுத்தைக்கொண்டு பனை மரத்தின் பச்சை இலைகளைக்கூடப் பறிக்க முடியாது” என்றது.

ஓநாய்க்கு ஒட்டகச்சிவிங்கியின் மேல் இருந்த சந்தேகம் தீர்ந்தது. ஆனாலும் நிலாவைப் பிய்ப்பவர் யாரென்று தெரியாமல் குழம்பியது.

வானில் வட்டமடித்துக்கொண்டிருந்த பருந்தை, கீழிறங்கி வரச்சொல்லி விசாரித்தது ஓநாய்.

“தலைவரே, மேகங்களைக் கிழித்துக்கொண்டு மேல் அடுக்குவரை என்னால் பறக்கவே முடியாது. நீங்கள் என்னைச் சந்தேகிப்பது தவறு. தயவுசெய்து என் மீது வீண்பழி சுமத்த வேண்டாம்” என்ற பருந்து இறக்கைகளை மடித்து ஓநாயைப் பார்த்தது. யானை, ஒட்டகச்சிவிங்கி, பருந்து இவர்களில் யாரும் நிலாவைப் பிய்த்துச் சாப்பிடுவதில்லை. பிறகு யார் இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள் என்று யோசனையில் ஆழ்ந்த ஓநாய்க்கு, எதிரில் வந்து நின்றது ஒரு குருவிக் குஞ்சு.

“வாருங்கள், யாரோ ஒருவர் நம்மையெல்லாம் ஏமாற்றிவிட்டு, நிலாவைக் கண்காணாத இடத்துக்கு இழுத்துச் செல்கிறார். உடனடியாக நாம் நிலாவைப் பின்தொடர்ந்து சென்றால், அது யாரென்று கண்டுபிடித்துவிடலாம்” என்று சொன்ன குருவிக் குஞ்சின் கருத்தை ஏற்று, விலங்குகள் எல்லாம் நிலா பயணித்த பாதையில் சென்றன.

ஓநாய் தலைமையில் காட்டு விலங்குகள் அனைத்தும் வெளிச்சம் வந்த வழியில் முன்னேறிச் சென்றன. குருவிக் குஞ்சு யானையின் முதுகில் ஏறிக்கொண்டது. காட்டில், இருள் அதிகரித்தது.

காட்டின் மறுபக்கம் இருந்த ஆற்றங்கரைக்கு அனைத்தும் வந்துசேர்ந்தன. நிலா கீழே இறங்கியதைப் பார்த்தன. நடக்கப்போவது என்ன என்று அறிந்துகொள்ளும் ஆவலுடன் காத்திருந்தன. நிலா ஆற்று நீரில் விழுந்துவிடுமோ என்ற பயம் எல்லோருக்கும் இருந்தது.

அப்போது ஓர் அதிசயக் காட்சியைக் கண்டன. தண்ணீருக்குள் இருந்தபடி தலையை வெளியே நீட்டி, ஒரு முதலை எட்டிப் பார்த்தது. ஓநாயோடு விலங்குகள் முன்னேறிச் சென்றன.

முதலை சட்டென்று வாயை அகலமாகத் திறந்தபடி வானத்தை நோக்கித் தலையை உயர்த்தியது. சரியான நேரத்தில் வானிலிருந்த நிலா, வாய்க்குள் நழுவி விழுந்தவுடன் முதலை தண்ணீரில் மூழ்கியது.

காட்டு விலங்குகள் ஆத்திரமடைந்தன. ஒவ்வொரு நாளும் வானிலிருந்து விழும் நிலாவை விழுங்குவது முதலைதான் என்பதைக் கண்டுகொண்டன. முதலையுடன் சண்டையிட்டன. தோற்றுப் போயின. நிலாவை யாரும் பிய்த்துச் சாப்பிட முடியாது என்பதை அறியாத விலங்குகள் இன்றுவரை முதலைகளுடன் சண்டையிட்டுக்கொண்டிருக்கின்றன.





# கோகிலம்

கோகிலம் என்று அழைக்கப்படும் குயில் காகத்தை விட சற்றுச் சிறியது. ஆனால் உருண்டு திரண்டு பார்ப்பதற்கு அழகாக இருக்கும். வால் நீண்டிருக்கும். ஆண் குயில் கறுப்பாக இருக்கும். பெண் குயிலின் அடிப்படை நிறம் வெள்ளை. ஆனால் உடல் முழுவதும் கறுப்புத் திட்டுகள் (வரிகள்) முத்து முத்தாகக் காணப்படும்.

பொதுவாகக் குயில்கள் தனியாகப் பறந்து செல்லும். கிளிகள் போன்று கூட்டமாகப் பறந்து செல்லாது. ஆண் குயிலை எளிதில் பார்க்கலாம். பெண் குயிலை அரிதாகவே பார்க்க முடியும். குயில் மரக்கிளைகளின் ஊடே மறைந்திருக்கும். குயில் ஒரு சோம்பேறிப் பறவை. மரங்களில் மறைந்திருந்து தூங்கிக் கொண்டிருக்கும். பெண் குயிலுக்கு அடை காக்கத் தெரியாது. அதனால் காகத்தின் கூட்டில் முட்டையிடும். குயில் அழகாகக் கூவும் பறவை. இது வசந்தகாலத்தில்தான் அதிகமாகக் கூவும். குயிலிசையை கேட்டுக் கொண்டே இருக்கலாம். அவ்வளவு இனிமையானது அந்த இசை.



# வர்ணம் தீட்டுவோம்





# செய்தித்தாள்

அழகான காகிதத்தில்
அச்சிட்ட செய்தித்தாள்
நாள்தோறும் வருகுது
நல்ல செய்தி தருகுது

அனல் பறக்கும் செய்திகளை
அற்புதமாய்த் தருகுது
அயல்நாட்டு நடப்பெல்லாம்
அழகழகாய்த் தருகுது

நாட்டு நடப்பை எல்லாம்
நாம் படிக்கத் தருகுது
நல்ல பல விடயங்களை
நாள்தோறும் வழங்குது

நாளும் வரும் நாளிதழ்கள்
நல்ல செய்தி தருகுது
நாளும் செய்தி பார்ப்பதால்
நமது அறிவு வளருது

## சிந்தனைக்கு....

- நீ எப்படி வாழ்ந்தாய் என்பது முக்கியம்தான். ஆனால் அதைவிட முக்கியமானது இப்பொழுது எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறாய் என்பதாகும்.
- கற்றுக் கொள்ள வேண்டுமே என்று கவலைப்படுவதைவிடக் கற்றுக் கொண்டதைக் கடைப்பிடிப்பதே மேல்.
- குப்பையைத் தூக்கி எறியும்போது அது உன்னிடம் திரும்பி வராத இடத்தில் தூக்கிஎறி.

# குதிரைகள் சில தகவல்கள்



★ குதிரைகள் 335 -340 நாள்கள் கடுமையான சுமைகள் சுமக்கும்.

★ குதிரைக் குட்டிகள் பிறந்த சில நிமிடங்களிலேயே எழுந்து நடக்க ஆரம்பித்து விடுகின்றன.

★ குதிரைகள் சராசரியாக 25-30 ஆண்டுகள் உயிர் வாழும்.

★ குதிரைகள் சராசரியாக 60-62 அங்குலம் உயரம் கொண்டவை

★ குதிரையின் உயரத்தை அளக்கும்போது கழுத்தும் உடலும் சேரும் பகுதியே அளக்கப்படுகின்றது.

★ குதிரையின் உடலில் சராசரியாக 205 எலும்புகள் உள்ளன

★ குதிரையால் நின்று கொண்டே தூங்கமுடியும். அதற்கு காரணம் கால் முட்டியே அதன் கீழ் அவற்றுக்கு தசைகள் இல்லை.

★ குதிரையின் வயதின் அடிப்படையில் போல், யார்லிங் கோல்ட், பில்லி, மேர் பொலிக்குதிரை என அழைப்பர்.


★ குதிரைகளின் வயதை அவற்றின் பற்களின் எண்ணிக்கையை வைத்துக் கணக்கிட முடியும். அவற்றின் வாழ்நாள் முழுவதும் பற்கள் வளர்ந்து கொண்டே இருக்கும்.

★ நன்கு வளர்ந்த குதிரை தினமும் 7-11 கிலோ உணவை உண்கின்றன. அத்துடன் 38-45 லீற்றர் நீரை அருந்துகின்றன.

★ குதிரைகளின் குடலுக்கு முன்பாக ‘சீக்கம்’ என்ற சிறப்பான பொருள் உள்ளது. இதனால் அவற்றால் வாந்தி எடுக்க முடியாது சில வேளைகளில் நச்சுப் பொருளை உண்டால் அவை இறந்துவிடும்.

★ கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதனால் பழக்கப்பட்ட விலங்கு இருபதாம் நூற்றாண்டு வரை போக்குவரத்துக்கு உதவியது குதிரைகளே.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் இராசையா திருநாவுக்கரசு (அரசன்)

கடந்த 11.12.2018 அன்று இறையடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் பல வழிகளிலும் பங்குபற்றியோருக்கும். அனுதாபச் செய்திகளை எம்முடன் பகிர்ந்து எமக்கு ஆறுதலளித்தோருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் எங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (08.01.2019) செவ்வாய்க்கிழமை அதிகாலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை மறுதினம் (10.01.2018) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.232, சில்வா வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

சீ.கிரிதாசன்(கிரி), மருமகன்.

(CS 22324) (14.17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி குணநாயகி நாகலிங்கம்

*(இல 111, D.10 உருத்திரபுரம், கிளிநொச்சி)*

02.12.2018 அன்று கனடாவில் சிவபதம் எய்திய எமது குடும்பத்தலைவியின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் 12.01.2019 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லமான இல.111, D10, உருத்திரபுரத்தில் நடைபெறும்.

எமது தாயார் எம்மைவிட்டுப் பிரிந்த துயரச் செய்திகேட்டு எமது இல்லம் வந்து துயர் பகிர்ந்தும், பலவழிகளில் உதவிகள் புரிந்தும் உதவிய உறவுகள், நண்பர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறும் அன்றைய தினம் நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
கண்ணன்(மகன்) - 077 610 2331
திரு.கா.நாகலிங்கம் (கனடா)
001 416 650 0079

(AKN 631) (14.17)

திரு.கா.நாகலிங்கம்
(ஓய்வு நிலை அதிபர்)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வெற்றிவேலு இராஜ்குமார்

(ஓய்வுபெற்ற அதிபர்- சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை, அகில இலங்கை சமாதான நீதவான்)

நெல்லியானை பிறப்பிடமாகவும், சுழிபுரம் மத்தி, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு இராஜ்குமார் (ஓய்வுபெற்ற அதிபர்- சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை, அகில இலங்கை சமாதான நீதவான்) 06.01.2019 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு-பொற்கொடி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - அரியநாயகி தம்பதியரின் பாசமிகு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், மகாலட்சுமி, காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் சூரியகுமார் (ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்) விஜயலட்சுமி, தனலட்சுமி, செல்வலக்சுமி, சிறிக்குமார், நந்தகுமார் (பொலிஸ் சார்ஜன் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற ஆனந்தன் மற்றும் பாலரட்ணம், தனபாலசிங்கம், சிவசுப்பிரமணியம், வேல்விழி (உதவி கல்விப் பணிப்பாளர் - வவுனியா தெற்கு), சுகந்தி, வாசுகி, இராசநாயகம் (பலசரக்கு வாணிபம் - பறாளாய்), காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் மகேஸ்வரி (சிங்கப்பூர்), காலஞ்சென்ற அழகர் சுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிந்து, நிரூபன், சொரூபன், கிருபன், சைலரூபன் ஆகியோரின் பெரிய தந்தையும், செல்வராணி, புஷ்பராணி, இந்திராணி, கிருபானந்தன், கிருபாகரன், நந்தகுமார், நந்தினி ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், குமாரரூபன், ரூபராஜ், ராஜராம், ஜீவறஜினி, குகராஜ், விஜிதா, சுமித்தா, பிருந்தாவன், விதுலன், விதுசன், மிதுசா, கபிலன், சிவபாலன், சிவசங்கர், சிவகரன், குகதாசன், விஜிதா, சிவதாஸன், ஜெகதாஸன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2019) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### தியாகராசா செட்டியார் கதிர்காமத்தம்பி செட்டியார்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், செட்டித்தெரு பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா செட்டியார் கதிர்காமத்தம்பி செட்டியார் 06.01.2019 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா செட்டியார் - தங்கம்மா தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சதாசிவம்பிள்ளை - செல்லப்பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற பொன்மணி அம்மாளின் அன்புக் கணவரும், கௌரி,சிவராசா, அனுசியா, குகபாலன், சுகந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலேந்திரா, தேவசிகாமணி, உதயதர்சினி ஆகியோரின் மாமனாரும், பாரிஜா, பவித்திரா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, சச்சிதானந்தம், பாலசுப்பிரமணியம் மற்றும் இராஜசூரியர், திருமதி இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

325, பிரதான வீதி,
பருத்தித்துறை.

(CS/22369)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

021 226 4920, 077 129 8201

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com



# VIJAENTHIRAN MATHEMATICS CENTER

## The Academy of Accounting Professionals

கணக்கீடு

N.Lavan
BBA (Spl.in Accounting)

**A/L - வர்த்தகப் பிரிவு - கணக்கீடு**
(Tamil & English Medium)

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் - 10.01.2019

- A/L 2021 - 3.00PM } 10.01.2019
- A/L 2020 - 4.00 PM } 10.01.2019
- A/L 2019 - துரித மீட்டல் வகுப்புக்கள் 11.01.2019 - 4.00 PM
- A/L 2019 - Day Class - 12.01.2019 - 7.00AM

**O/L - வணிகக் கல்வியும் கணக்கீடும்**
11.01.2019 - 4.00 PM
(Free Two Weeks trial classes for all new batches)

076 280 6667
(KKS Road, Nachimar Kovilady, Jaffna)



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்:3132 திகதி: 2019.01.07 திங்கட்கிழமை
நீலம்
SATURDAY FORTUNE

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 53 57 70 74 K
போனஸ் இலக்கம்: 75
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்: 58,191,770/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 488
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.01.07
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,923,115/-

வெற்றி இலக்கங்கள்: 03 31 66 69
ஆங்கில எழுத்து: R

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 1533
சீட்டிழுப்பு திகதி: 07.01.2019

வெற்றி இலக்கங்கள்: 02 24 30 47
ஆங்கில எழுத்து: S

அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட் ரூ 24 , 226, 216/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## கொடிபதி ஷனிதா / கோடிபதி சனிதா / KOTIPATHI SHANIDA

சீட்டிழுப்பு வாரம்: 390
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.01.06
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 108,635,963/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்: P 04 26 65 76

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## Galaxy Star

வெற்றி வாரம் 285 / திகதி 06.01.2019

வெற்றி இலக்கங்கள்: 01 17 49 55 59

அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 3,078,164/-

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS எனை டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்



தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும்
சமூக வலுவூட்டல் அமைச்சு
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

## 2017 வருடாந்த அங்கத்துவ நிதிக் கூற்றுக்கள்

### அங்கத்தவர்களின் விசேட கவனத்திற்கு

1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 8(ஐ) பிரிவின் பிரகாரம் 2017.12.31 ஆம் திகதிக்கு தனது தனிப்பட்ட கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ள மீதிகள் குறிப்பிடப்பட்ட நிதிக் கூற்றுக்கள் ஏற்புடைய அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக தொழில் வழங்குநர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தனது தொழில் வழங்குநர்களிடமிருந்து அந்த நிதிக் கூற்றுக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் அங்கத்தவர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

கவனத்திற்கொள்க

**இந்த வருடாந்த நிதிக் கூற்றுக்களில் ஏதேனும் முரண்பாடு / முரண்பாடுகள் இருப்பின் அது தொடர்பான முழுமையான தகவல்களை தனது தொழில் வழங்குநர் ஊடாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு அறிவிக்குமாறு தயவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.**

மேலதிக தகவல்களுக்கு

தொலைபேசி : 011-2369636 / 011-2369596 / 011-236-9635
தொலை நகல் : 2369056 / 011-2369779 / 011-2369056
மின்னஞ்சல் : mgrmalc@etfb.lk

மஹிந்த மடிஹஹேவா
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
முதலாம் மாடி, தொழில் செயலகம்,
த.பெ. 807, நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05.



HOME LOAN வீட்டுக் கடன்



## பாசமும், நேசமும் நிறைந்த கனவு இல்லத்தை நனவாக்கிடுங்கள்

பீப்பள்ஸ் லீசிங் "செனகம் பியச" வீட்டுக்கடன் திட்டம் மூலம் உங்கள் வீட்டுக் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள். வீடொன்றைக் கட்டுவதற்கு, வீடொன்றை கொள்வனவு செய்வதற்கு, வீடொன்றை புதுப்பித்துக்கொள்வதற்கு, வீட்டின் ஒரு பகுதியை கட்டியெழுப்புவதற்கு, மாடி வீடுகளை கொள்வனவு செய்வதற்கு, (முழுமையான அல்லது நிர்மாணிக்கப்படும்) அல்லது காணியொன்றை கொள்வனவு செய்வதற்கு இப்போது பல இலகுவான கடன் திட்டங்களை பீப்பள்ஸ் லீசிங் நிறுவனம் உங்களுக்கு வழங்குகிறது.

- மாறாத வட்டி வீதங்கள்
- உங்கள் வருமானத்திற்கு ஏற்றவகையில் மாதந்த தவணையை திட்டமிடுதல்
- இலவச காப்புறுதி
- காணியை விடுவித்துக்கொள்வதற்கு வேறொரு காணியை இழப்பீடாக சமர்ப்பிக்கும் ஆற்றல்
- எந்தவொரு தருணத்திலும் பணத்தைச் செலுத்தி கடன் தவணையை அல்லது காலத்தை குறைத்துக்கொள்ள முடியும்
- கடன் தொகையை வேறு ஒருவருக்கு மாற்றும் வசதி
- கடனை மீள் செலுத்துவதற்கு 5 வருடங்கள் வரையான கால அவகாசம்

HOTLINE 0112 206 300

PEOPLE'S LEASING



# பா.ரஞ்சித் தயாரிப்பில் ரித்விகா!

பா. ரஞ்சித் தயாரிக்கும் 'இரண்டாம் உலகப் போரின் கடைசி குண்டு' படத்தில் தீனேஷ் நாயகனாக நடிக்கிறார். இந்தப் படத்தில் 'பிக்பாஸ்' புகழ் ரித்விகா கதாநாயகியாக நடிக்கிறார். இதுகுறித்து அவர் தனது கீச்சகப் பக்கத்தில் தெரிவித்துள்ளார். அவருக்குப் பல்வேறு பிரபலங்களும் வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர்.






**ஆல்தோட்டபூபதி@thoatta**



கடன் கேட்கிறப்பவும், கடன் சொல்றப்பவும் நம்ம குரலே கொஞ்சம் தழுதழுக்குமே, அதை மனசாட்சியின் குரல்னும் சொல்லலாம்!

**சுப்பாணி@manipmp**



இறக்கும்வரை பொய் பேசவேயில்லை 'ஊமை'




**மேடம்:** பணி தாமதம் ஆவதால் மனதில் சஞ்சலம் கொள்வீர்கள். நண்பரின் உதவி ஊக்கம் தரும். தொழிலில் அளவான உற்பத்தி விற்பனை உண்டு.

**இடபம்:** அவசியமற்ற வகையில் கிடைக்கின்ற உதவியை தவிர்ப்பது நல்லது. தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும். குடும்பச்செலவு கூடும்.

**மிதுனம்:** வெகுநாள் திட்டமிட்ட பணி ஒன்று எளிதாக நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். நிலுவைப்பணம் வசூலாகும்.

**கடகம்:** கவனக்குறைவால் நன்மை பெறுவதில் தாமதம் இருக்கும். பிறர் பார்வையில் தெரியும்படி அதிக செலவு செய்ய வேண்டாம். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும்.

**கன்னி:** பகைமை குணத்துடன் பேசுபவரிடம் சமயோசிதமாக விலகுவது நல்லது. தொழில் வளர்ச்சி சீராக அக்கறையுடன் பணிபுரிவீர்கள். அளவான பணவரவுகிடைக்கும்.

**துலாம்:** செயல்களில் கூடுதல் நேர்த்தி உருவாகும். தொழிலில் உற்பத்தி விற்பனை வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும்.

**விருச்சிகம்:** குடும்ப சிரமம் குறித்து பிறரிடம் பேச வேண்டாம். பணிகளில் மனதில் உறுதியுடன் செயல்பட வேண்டும். செலவு அதிகரிக்கும்.

**தனுசு:** நற்குணங்களால் முக்கியஸ்தர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். தொழிலில் திட்டமிட்ட பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**மகரம்:** நண்பரின் அலட்சியமான பேச்சு வருத்தம் தரும். பொறுமை குணத்தால் சிந்தனையில் நல்ல மாற்றம் உருவாக்குவீர்கள்.

**கும்பம்:** உத்வேக மனமுடன் பணிபுரிவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். கூடுதல் லாப விகிதம் கிடைக்கும்.

**மீனம்:** உயர்வு தாழ்வு கருதாமல் எவரிடமும் இனிய வார்த்தை பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை பூர்த்தி செய்வீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.


## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர்
செல்வராசா சுரேஸ் அவர்களின் மாமனார்
**சிவராசசிங்கம் பரராசசேகரம்**
அவர்கள் 05.01.2019 சனிக்கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,**
**ஆசிரியர் வட்டம்**

(CS/14501)(11,17)


## சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | 5 | | | 9 | |
| 4 | 8 | | 7 | | | 1 | | |
| | | 1 | | | | | 7 | |
| | | 4 | 5 | 1 | | | | |
| 7 | | | | | | | | 1 |
| | | | | 9 | 8 | 6 | | |
| | 6 | | | | | 4 | | |
| | | 2 | | | 6 | | 3 | 8 |
| | 1 | | | 4 | 2 | | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 9 | 2 | 3 | 5 | 7 | 4 | 8 |
| 7 | 5 | 3 | 1 | 4 | 8 | 9 | 2 | 6 |
| 2 | 8 | 4 | 6 | 7 | 9 | 5 | 3 | 1 |
| 1 | 9 | 5 | 8 | 6 | 3 | 4 | 7 | 2 |
| 8 | 4 | 6 | 7 | 9 | 2 | 1 | 5 | 3 |
| 3 | 2 | 7 | 5 | 1 | 4 | 8 | 6 | 9 |
| 5 | 3 | 2 | 4 | 8 | 1 | 6 | 9 | 7 |
| 9 | 6 | 8 | 3 | 5 | 7 | 2 | 1 | 4 |
| 4 | 7 | 1 | 9 | 2 | 6 | 3 | 8 | 5 |



தீபாவளிக்கு பட்டாசு மாதிரி, பொங்கலுக்கு என் மனைவி செய்யற பொங்கல்..."
"என்ன சொல்றீங்க..?"
"ஆபத்து நிறைஞ்சதுன்னு சொல்றேன்..."


## காரைநகர் சைவ மகாசபையின் நூற்றாண்டு மலருக்கான வரலாற்று விபரணம் கோரல்

காரைநகர் சைவமகா சபை நூற்றாண்டு மலரை விரைவில் வெளியிடவுள்ளது. இம் மலரில் நூற்றாண்டு வரலாற்று பதிவுக்கான விபரணம் பொதுமக்களிடம் கோரப்படுகின்றது. ஆதார பூர்வ வரலாற்று விபரணங்கள் உள்ளவர்கள் 21.01.2019 இற்கு முன்னர் சபையில் நேரடியாக ஒப்படைக்குமாறு வேண்டுகின்றேன்.

**தொடர்புகளுக்கு -**
**மலர்குழு சார்பாக**
**திரு. கா. குமாரவேலு (ஓய்வுநிலை அதிபர்)**
**தொ.பே. இல. - 0212211716**


**செயலாளர்,**
**சைவ மகா சபை, காரைநகர்.**
**08.01.2019**

(CS 25383/15/18)

## மரண அறிவித்தல்

# தம்பிஐயா குணரத்தினம்(நவக்கிரி)

*(ஓய்வுபெற்ற பொருத்துநர் - காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை)*



பிறப்பு 30.03.1941 இறப்பு 05.01.2019

யாழ். நவக்கிரி நிலாவரையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா குணரத்தினம் 05.01.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - செல்லம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும் புலோலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சீவரத்தினத்தின் அன்புக் கணவரும் சீவறஞ்ஜினி, பாஸ்கரன், தயானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குலசேகரம், காலஞ்சென்றவர்களான அழகம்மா, தருமசேகரம், சந்திரசேகரம், நாகரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் குகநேசன், நிவேதினி, உஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் தனராஜ் - தீபவானி, கஜன் - சுஜந்தினி, ரஜீவன், சுரீயா, ஸ்ருதிகா, விரூஜன், கவினாவ், சிவாணி, ஷிறீவன் ஆகியோரின் பாசமிகு பேரனும், சுவேன், ஜிகானா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2019) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் நிலாவரை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 223394) (14,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**ரஜீவன் - +94762399032/ +94773937015**

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
### நடுக்கட்டல் சேவை பெறுவதற்கான விண்ணப்பம் கோரல்-2019

வலிகிழக்கு பிரதேசசபையின் எல்லைக்குள் சோலைவரி நிலுவைகளை அறவிடுவதற்காக நடுக்கட்டல் சேவைபெறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல | விபரம் | வெற்றிடஎண்ணிக்கை |
|---|---|---|
| 01 | நடுக்கட்டல் சேவை | 05 |

**அடிப்படைத் தகைமைகள்**

1. இலங்கை பிரஜையாக இருப்பதுடன்,18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரி வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினைக் கொண்டவராகவும் 5 வருடங்கள் பிரதேசத்தில் வசிப்பதனை வதிவிடசான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
3. நன்னடத்தைமற்றும் சிறந்ததேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. பிறப்புச்சான்றிதழ்,கல்விச்சான்றிதழ்,கிராமசேவையாளரின் நற்சான்றிதழ் உட்பட இரு நற்சான்றிதழ்களின் சான்றுதிப்படுத்தப்பட்டபிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

**கல்வித்தகைமை**

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**ஏனைய நிபந்தனைகள்**

1. முற்றிலும் தற்காலிகமானதும் எக்காலத்திலும் நிரந்தரநியமனம் கோரமுடியாததுமான பதவியொன்றாகும்.
2. நடுக்கட்டல் உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்படுபவர் முற்றிலும் தரகு அடிப்படையிலான கொடுப்பனவை மட்டும் பெறும் வகையில் நியமிக்கப்படுவர். தங்களினால் வசூலிக்கப்படும் ஆதனவரித் தொகையின் 20% தரகுப்பணமாக வழங்கப்படும்.
3. நியமனம் பெறும் நடுக்கட்டல் உத்தியோகத்தர் ரொக்கப்பணமாக ரூபா5000/= இனை அலுவலகத்தில் மீளளிக்கக்கூடிய பிணைப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
4. விண்ணப்பப்படிவம் தனது சொந்தக்கையெழுத்திலேயே பூரணப்படுத்தப்பட வேண்டும்.
5. வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் எந்த உபஅலுவலகத்திலும் கடமையாற்ற தயாராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. வலிகிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் வரிநீங்கலாக ரூபா 50/= இனை செலுத்தி விண்ணப்பப்படிவத்தை பெற்று பூரணப்படுத்தி தகைமை சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
2. கடிதஉறையின் இடதுபக்கமேல் மூலையில் "நடுக்கட்டல் சேவைவழங்குவதற்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு 22.01.2019 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடியதாக "செயலாளர், வலிகாமம் கிழக்குபிரதேசசபை, புத்தூர்" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

குறித்த சேவையினைப் பெறுவது தொடர்பான இறுதித்தீர்மானம் சபையினால் மேற்கொள்ளப்படும்.

**யுகராஜா ஜெலீபன்**
**செயலாளர்**
**வலிகிழக்குபிரதேச சபை**
**புத்தூர்.**
**2019.01.08**

(14.17)


## British College of Higher Studies

**2019 இற்கான புதிய பாடநெறிகள்**

**2019 January முதல் புதிய தொழில்நுட்ப வசதிகளுடன்...**
**வெளிநாடு செல்பவர்க்கான கற்கை நெறிகளான**

**IELTS Academic/General**
**IELTS Life skills**

**6000 இற்கு மேற்பட்டவர்களை சித்தி பெறச்செய்த ஒரே கல்வி நிறுவனம்**

**பாடநெறிகள் தனித்துவமான சேவையோடு வழங்குகிறது.**
**Exam registration**
**Extra paper activities**
**Speaking practice with international upholders**

**யாழ் நகரில் 15 வருட காலத்திற்கும் மேலாக தரமான பாடநெறிகளை ஆரம்பித்து வெற்றியாளர்களை உருவாக்கியவர்**

**சான்றிதழுடன் கூடிய பயிற்சி நெறிகள்**

**Business English**
**Diploma in English**
**Spoken English**
**Diploma in Sinhala**
**Spoken Sinhala**

2018 இல் O/L பரீட்சை எழுதியோர்
2018 இல் A/L பரீட்சை எழுதியோர்
தொழில் தேடுபவர்கள்
தொழில் புரிவோர் என அனைத்து வயதினருக்குமான பிரத்தியேக வகுப்புக்களும் ஆரம்பம்!!!
வார நாட்கள் மற்றும் வார இறுதி நாள் வகுப்புகள்

**O/L , A /L முடித்து விட்டு அடுத்து** என்ன படிக்கலாம் என யோசிக்கின்றீர்களா?
வெளிநாடு ஒன்றில் தொழிற்பயிற்சி பெற ஆசைப்படுகின்றீர்களா?
அப்படியாயின் இந்த சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்
Professional Certificate in Hotel Management
Professional Certificate in Retail Operation
**மலேசியாவில்**

மலேசியா அரச பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறிகள்
கற்றலுடன் தொழிற்பயிற்சிகள்
பயிற்சி காலத்தில் தங்குமிடம்
மற்றும் தொழிற்பயிற்சி பெறும் வேளைகளில் உணவு
மேலும் தொழிற்பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகள்
பயிற்சி காலம் ஒரு வருடம்
உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
பயிற்சி பெறும் நட்சத்திர தரம் வாய்ந்த **Hotel** லின் அனுபவ சான்றிதழ் மற்றுமொரு சிறப்பு

**SIP ABACUS**

**உங்கள் பிள்ளைகளின் எதிர்கால கல்விப் பெறுபேறுகளுக்கு தரமான அடித்தளம்**
5-12 வயது சிறுவர்களின் வேகமான கணித்தல், சிறந்த மனக்கணித, நுண்ணறிவு திறன் விருத்திக் கான மிகச்சிறந்த வழிகாட்டி.
level 1 முடிவில் பரீட்சை level 2 முடிவில் பரீட்சை level 3 முடிவில் பரீட்சை என 8 level வரை பயிற்சி களும் பரீட்சைகளும்
**உங்கள் பிள்ளைகளின் வளர்ச்சியை நீங்களே உணர்வீர்கள்**
இடையிடையே மாணவர்களின் தரத்தினை மேம்படுத்த மாவட்ட மட்ட நாடு, தழுவிய போட்டிகள் பரிசில்கள் சான்றிதழ்கள்.

**15, Sirampiyady lane, Jaffna. (லங்கா சதொச மேல் மாடி)**
(SUP 1866)(14.17) **021 222 4550, 0761380212**



# இப்போது விற்பனையில்...!

**புதிய தோற்றம்...**
**புதிய விடயங்கள்...**
**அதே 20 ரூபாவில்...**

- **கப்டன் லோலோ ஈர நினைவாய்...!**
- **அரசனை நம்பி கைவிடப்படும் புருசன்**
- **ஓடு... ஓடு.... ஓடிக்கொண்டே இரு...**
- **ஓய்ந்தது தமிழருக்காக ஒலித்த அமெரிக்கக் குரல்**

*மற்றும்*

**மருத்துவம், முதுசொம், இயற்கை விவசாயம், புகைப்படவியல், பொருளாதாரம், ஆன்மீகம் ஜனரஞ்சக அம்சங்களுடன்...**




**உங்கள் பிரதிக்கு அருகிலுள்ள முகவரை நாடுங்கள்**

உ

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் - இலங்கை
### புதிய மகா சபைத் தெரிவு

**மேற்படி நிர்வாகசபை தெரிவானது 06.01.2019 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.**

தலைவர் - சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்
உப தலைவர் - சி.பிரபாகர குருக்கள்
உப தலைவர் - மு.பாஸ்கரக் குருக்கள்

செயலாளர் - சிவஸ்ரீ சி.குகேந்திரக் குருக்கள்
உப செயலாளர் - சி.சிவபாலக் குருக்கள்
பொருளாளர் - இ.ரமணிதரக் குருக்கள்

அங்கத்தவர்கள் 11 பேரும் தெரிவு செய்யப்பட்டது.

தலைமைச் செயலகம்
குருகுலம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

கௌரவ செயலாளர்
சி.குகேந்திரக் குருக்கள்

(CS/22379)(11,17)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சிவபாக்கியம்
கணபதிப்பிள்ளை



தோற்றம்
13.05.1935

மறைவு
21.12.2017

திதி:- 08.01.2019

ஆண்டொன்று கடந்தாலும் உங்கள்
அன்புக்காய் ஏங்கி வாடுகின்றோம் அம்மாவே!
உங்கள் நினைவுகள் என்றும்
வாழ்ந்து கொண்டிருக்கின்றது
எம் இதயங்களில் நிலையாக!
மீண்டும் ஒரு பிறப்பிருந்தால் உம் வயிற்றில்
பிறந்திட வேண்டுகின்றோம் இறைவனை!

கண்டி வீதி, மடத்தடி,
கொடிகாமம்.

(CS/22349)(11,17)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## ஆறாத வலிகளுடன் ஆண்டுகள் பதின்மூன்று

மண்ணில்
23
02
1951



விண்ணில்
02
01
2006

### திருமதி ஜெகதாம்பிகை தெட்சணாமூர்த்தி

திதி:- வளர்பிறை திருதியை (08.01.2019)

அன்பான அம்மாவே! இன்று நேற்றுப் போல் உம் பிரிவு
ஆனால் ஆண்டுகள் பதின்மூன்றாகிவிட்டதம்மா
தாங்கமுடியவில்லை உங்கள் இழப்பின் தவிப்பு
தந்தை இழந்து தாய் இழந்து நாம்
தாத்தா பாட்டி தெரியாத நம் குழந்தைகள்
மாமா, மாமி இழந்த உம் மருமக்கள்
இப்பிறவியில் எப்போ இனி....?
அன்போடு அரவணைப்பை அள்ளி எமக்களித்துவிட்டு
அமைதியாய் உறங்கி பதின்மூன்றாண்டு ஆகிவிட்டதம்மா
அம்மா நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் ஆசி எங்களுக்குண்டு
இந்தாண்டிலும் எம்மன உருகலை மலர் சாந்தியாகச் செலுத்துகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தெ.நிஷாகரன்
(ஜெகதா மொபைல் உலகம்)
இல.110, சீனிவாசகம் வீதி,
யாழ்ப்பாணம். 021 221 5037

(CS/22376)(11,17)

உம் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்



வடமாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)
Nothern Province M.P.C.S.s' Federation (Ltd)
Registered No : N.E.P/02 of 29/05/2006
No. 08 Mullai Road, Paranthan 07, January, 2019

**கடந்த 21.12.2018 உதயன் பத்திரிகையில் பக்கம் 19 இல் பிரசுரமாகி யிருந்த எமது வடமாகாண பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமா சத்தில் வெற்றிடமாக உள்ள பொதுமுகாமையாளர் (101/6) பதவிக்கு** தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன எனும் விளம்பரத்தின் **முடிவு திகதி 01.10.2019** என பிரசுரமாகி யிருந்தது. **இதனை 14.01.2019 எனத் திருத்தி வாசிக்கவும்**

- தலைவர் -



## வாடிக்கையாளர்களுக்கு இனிய செய்தி

எங்களிடம் 5 பாகங்களும் ஒரு புத்தகமாகப் பொன்னியின் செல்வன் 1025/- ஆகவும், ஏட்டு வடிவில் உள்ள திருக்குறள் 390/-, தமிழ், ஆங்கில உரைகளுடன் உள்ள திருக்குறள் 600/- ஆகவும், கழக தமிழ் அகராதி 1050/- ஆகவும், Oxford English - English - Tamil Dictionary 1935/= ஆகவும், செஸ்போட் சிறிது 70/- ஆகவும், பெரிது 95/- ஆகவும் வழங்கப்படுகிறது. அத்துடன் ஐயாயிரத்துக்கு மேல் கொள்வனவு செய்வோருக்குத் திருக்குறள் மாணவர் துணைவன் டிக்சனறி, செஸ்போட் அதன் கட்டையும் ஆல்சிலோன் பாக்கும் வழங்கப்படும் என்பதனை மிகவும் மகிழ்ச்சியுடன அறியத் தருகின்றோம். (TN/9816)(11,17)

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
**212,216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**



மக்களின் நன்மதிப்பை பெற்ற
## றோயல் சுத்தமான தேன்

தேனின் தரம் ITI இல் பரிசோதிக்கப்பட்டு நல்லது என உறுதிப்படுத்தப்பட்டது.

றோயல் தேன் என கேட்டு வாங்குங்கள்

PACKED BY: ROYAL Industries Jaffna. ®




சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.021 222 2567



மக்களின் நன்மதிப்பை பெற்ற
## றோயல் சுத்தமான நெய்

நெய்யின் தரம் BAMBER & BRUIE இல் பரிசோதிக்கப்பட்டு நல்லது என உறுதிப்படுத்தப்பட்டது.

றோயல் நெய் என கேட்டு வாங்குங்கள்


PACKED BY: ROYAL Industries Jaffna. ®



சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.021 222 2567



## கண்ணீர் அஞ்சலி



**Dr. Eddie de zylva**
டாக்டர் எடி, டீ சில்வா
நிர்மாண உத்தரவாத நிதியத்தின் (சீ. ஜீ. எவ்.) ஸ்தாபகரும்
ஆலோசகருமாகிய டாக்டர் எடி. டீசில்வா 06.01.2019 காலமானார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் 09.01.2019
இல.04, லேக் றோட், மகரகமவில் நடைபெறும். (CS 22363/15/17)

Our eternal gratitude for you gave shall never fade away.
CONSTRUCTION GUARANTEE FUND (CGF)



## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)
### கூத்தன்சீமாச்சந்தை மாட்டிறைச்சிக்கடை குத்தகைக்கு / வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2019

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித்திகதி : 08.01.2019 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் 14.01.2019 (திங்கட்கிழமை) ந.ப. 12.00 மணி வரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 08.01.2019 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் 14.01.2019 (திங்கட்கிழமை) பிற்பகல் 01.00 மணிவரை

கேள்விகள் திறக்கப்படும் திகதி : 14.01.2019 திங்கட்கிழமை பி.ப 3.00 மணி

| இல | குத்தகை விபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| தெல்லிப்பளை உப அலுவலகம் | | | | | |
| 01 | கூத்தன் சீமாச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 30,000.00 | 1.000.00 | 1,000.00 |

குறிப்பு : மேலதிக விபரங்களை 19.10.2018 ம் திகதி (வெள்ளிக்கிழமை) பிரசுரமான வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் பொ-துச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பன குத்தகைக்கு/ வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பார்வையிடவும்.

திரு.சோமசுந்தரம் சுகிர்தன்.
தலைவர்
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை
வலிகாமம் வடக்கு பிரதேச சபை

(C 9023)(14,17)

07.01.2019


# நாமலின் மீதான விசாரணை சந்தேகத்தை ஏற்படுத்துகிறது

## வாசுதேவ கூறுகின்றார்

கொழும்பு, ஜன.8

நாமல் குமாரவுக்கு எதிரான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவரால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பான விசாரணையைமுடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாமல் குமாரவின் சில விடயங்களை பெற்றுக்கொண்டு பொலிஸார் அது தொடர்பில் அவரை விசாரணைசெய்யத் திட்டமிட்டு வருகின்றனர். நாமல் குமாரவை விசாரணைசெய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கையானது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சதித் திட்டமாகவும் இருக்கலாம். கொலை சதித்திட்டம் தொடர்பான முக்கியமான ஆதாரங்களை அவர் வெளிப்படுத்தியிருந்தார். அவர் தொடர்பான வேறு விடயங்களுக்கு எதிராக விசாரணை நடத்துவது, அவரால் வெளியிடப்பட்ட தகவல்கள் தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

நாமல் குமாரவினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் பொலிஸார் முறையான விசாரணைகளை நடத்தி முடியும்வரைக்கும் அவர்தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வது சாட்சிகளை வலுவிழக்கச்செய்யும் செயலாகும் - என்றார். (எ-31)


## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் வீட்டு வேலை
செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
வந்து போக. (CS/22377)(11,17)

**077 187 7754**



## தேவை

முதன்முதலில் யாழ்நகரில் சிறந்த இந்திய சமையல் வல்லுனர்களால் ஆரம்பிக்கப்படவுள்ள **புரியாணி** இஸ்டோலுக்கு சிறுமுதலீடு செய்து நடத்துவதற்கு திறமையான முகாமையாளர் தேவை. ஆண், பெண் இருபாலாரும்.

**077 998 1896/075 098 3921**



## தவறிவிட்டது

யாழ்.மின்சார நிலைய வீதியில் எனது
மோட்டார் வாகன உரிமைப்பத்திரம்,
காப்புறுதிப்பத்திரம், வரி ஆகிய
ஆவணங்களுடன் சிறிய கைப்பை ஒன்று
சனிக்கிழமை தவறிவிட்டது. இதனைக்
கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழுள்ள
தொலைபேசி இலக்கத்துக்குத்
தொடர்பு கொள்ளவும்.
உரிய சன்மானம் வழங்கப்படும். (CS/22371)(11,17)


**077 945 6117, 077 382 1456**



## பணியாளர்கள் தேவை

நெல்லியடியிலுள்ள வர்த்தக
நிலையம் ஒன்றுக்கு
சிட்டை எழுதுநர் மற்றும்
பணியாளர் உடன் தேவை.
**(25 - 45 வயதுக்குட்பட்ட
ஆண்கள் மட்டும்).** (ACO/897)(11,17)

**077 742 2604**




# ஆஹா... அருகம்புல்!

உடலுக்கு போதிய ஊட்டச்சத்து கிடைக்கவில்லை என்று சத்துப்பானங்களைத் தேடி தேடி குடிக்கிறோம். இதில் விட்டமின் ஏ இருக்கிறது. இதில் விட்டமின் இ இருக்கிறது என்று ஒவ்வொன்றையும் எடுத்து கொள்ளும் பலருக்கும் அற்புதமான வகையில் அத்தனை சத்துக்களும் அருகம்புல்லில் இருக்கிறது என்பது தெரிவதில்லை. அருகம்புல் வாத, பித்த, சிலேத்துமம் என்கிற மூன்று தோஷங்களையும் போக்கும் குணமுடையது. உடலில் பற்றிகொண்டு நகராமல் இருக்கும் சளியைக் கரைத்து வெளியேற்றும் தன்மை கொண்டது.

இயற்கையாக கிடைக்கும் அருகம்புல் செயல் இழந்த உடல் உறுப்புகளை சிறுக சிறுக எல்லா சுரப்பிகளையும் இயற்கையாக செயல்பட வைத்து இன்சுலின் அளவை கட்டுக்குள் வைக்கிறது. காலையில் அருகம்புல் ஒரு கட்டு எடுத்து, விரல் நீள இஞ்சியைத் தோல் சீவி சுத்தம் செய்த அருகம்புல்லுடன் வேண்டிய நீர் விட்டு சாறுபிழிந்து தேன் சேர்த்து கலந்து சிறிது சிறிதாக ருசித்து பருகலாம். இது காரமானது கசப்பு தன்மையுடையது என்பதால் தேன் சேர்க்கலாம்.

நல்ல தளிர் அருகம்புல்லை பறித்து சுத்தமான நீரில் அலசி மைய அரைத்து, பசும்பாலில் அரைத்த விழுதை சேர்த்து சுண்டக்காய்ச்சி தினமும் படுக்கும் முன் குடித்துவந்தால் உடல் பலவீனமுள்ளவர்கள் விரைவில் நல்ல பலன் அடைவர். சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்கு கொடுத்துவந்தால் குழந்தைகள் வளரும்போதே போதிய ஊட்டசத்துடன் ஆரோக்கியமாக வளர்வார்கள். விழுதாக அரைக்கவில்லையென்றாலும் சுத்தம் செய்த அருகம் புல்லை நீரில் காய்ச்சி வடிகட்டி மிதமான சூட்டில் அச்சாறை பருகி வந்தால் இதயம் வலுப் பெறும். உடல் ஆரோக்கியமும் அதிகரிக்கும். குழந்தைகளுக்கு நெஞ்சு சளியை போக்கும். உடலில் உள்ள அனைத்து உறுப்புகளையும் பாதுகாக்கும். உடலில் வரக்கூடிய 80% நோய்களைத் தவிர்க்கும் ஆற்றல் அருகம்புல்லுக்கு உண்டு.

# சிறுதானியமும் அதன் நன்மைகளும்



ஆறுமாதக் குழந்தை முதல் அறுபது வயது பெரியவர் வரை அனைவருக்கும் ஏற்ற சத்தான உணவு சிறுதானியம். சிறுதானியம் என்பது வரகு, சாமை தினை, குதிரைவாலி, கம்பு, கேழ்வரகு, சோளம் ஆகிய உருவில் உள்ள சிறிய அளவிலான தானியங்கள் ஆகும். எந்தெந்த சிறுதானியத்தில் என்னென்ன சிறப்புகள் என்பதைத் தெரிந்துகொண்டால், அவற்றைப் பயன்படுத்தி உடலை வலுப்படுத்திக்கொள்ள உதவியாக இருக்கும்.

**கம்பு:** ஆரோக்கியமான சருமத்தைத்தரும். பார்வைத்திறன் மேம்படும். உடல் வெப்பம் தணியும். வயிற்றுப் புண்களைக் குணப்படுத்தும். பாலூட்டும் தாய்மார்களுக்கு, பால் சுரக்க உதவும்.

**தினை:** இதயத்தைப் பலப்படுத்தும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். குருதி உள்ள சர்க்கரை மற்றும் கொழுப்பின் அளவைக் கட்டுப்படுத்தும். மகிழ்ச்சியான மனநிலையைத் தரும்.

**சோளம்:** உணவுக்குழாய் தொடர்பான நோய்கள் வருவது தடுக்கப்படும். குருதி ஓட்டத்தைச் சீர்செய்யும். செரிமான சக்தி மேம்படும். வாயுத் தொல்லை நீங்கும். உடலுக்கு ஆற்றலைத் தரக்கூடியது.

**கேழ்வரகு:** எலும்புகளை உறுதிசெய்யும். இரும்புச்சத்து நிறைந்துள்ளது. சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும். உடல் வெப்பத்தைக் குறைக்கும். மூப்படைதலைத் தாமதப்படுத்தும். சருமத்தில் பளபளப்பு உண்டாகும்.


**வரகு:** உடல் எடையைக் குறைக்கும். மாதவிடாய்க் கோளாறுகளைச் சரிசெய்யும். மூட்டுவலி இருப்போர் அவசியம் சாப்பிட வேண்டும். சர்க்கரை, நரம்பு தொடர்பான பிரச்னைகளுக்கு நல்லது.

**குதிரைவாலி:** சர்க்கரை நோய் வராமல் தடுக்கும். இதய நோய்கள் வராமல் பாதுகாக்கும். நார்ச்சத்து நிறைவாக உள்ளதால், செரிமான மண்டலத்தை சீராக்கும், மலச்சிக்கலைத் தடுக்கும்.



## இது புதுசு

பல வடிவங்களில் முட்டைப் பொரியல் தயாரிப்பதற்கான உபகரணம் அறிமுகமாகியுள்ளன. இவை 450 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன



# நீண்ட நேரம் உட்கார்ந்தால் மூளைக்கு ஆபத்து!

நீண்டநேரம் அசைவில்லாமல் அமர்ந்திருந்தால் மூளைக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் உள்ளதாக மருத்துவக் குழு எச்சரித்துள்ளது.

நீண்ட நேரம் அசைவின்றி அமர்ந்திருப்பதையே பழக்கமாகக் கொண்டிருந்தால், எடை அதிகரிப்பு, முதுகு வலி, மறதி உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படும் என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இங்கிலாந்தை சேர்ந்த லிவர்பூல் ஜான் மூர்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், ஆரோக்கியமான இளைஞர்கள் 15 பேரை கொண்டு ஆய்வு செய்தனர். ஒவ்வொருவரும் எவ்வளவு நேரம் வேலை செய்கிறார்கள்.

எவ்வளவு நேரம் உட்கார்ந்தே இருக்கிறார்கள் என்று கண்டறியப்பட்டது. நீண்ட நேரம் ஒரே இடத்தில் அமர்ந்தே இருப்பதால் மூளையின் இரத்தவோட்டம் குறைவது ஆய்வில் கண்டறியப்பட்டது. அரைமணி நேரத்துக்கு ஒரு முறை எழுந்திருந்து சிறிது நேரம் உலவினால்கூட இந்த பாதிப்பைத் தவிர்க்கலாம். அதற்கு வெறும் 2 நிமிடம் எழுந்து பின்பு உட்கார்ந்தால், இரத்தவோட்டம் அதிகரிக்கும் என்கின்றனர் மருத்துவர்கள்.

நாள் ஒன்றுக்கு தொடர்ந்து 15 மணி நேரம் அல்லது அதற்கு மேல் உட்கார்ந்திருக்கும் இளைஞர்களுக்கு அல்சைமர் என்ற பாதிப்பு ஏற்படும் என்றும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. நீண்ட நேரம் அமர்ந்தே இருப்பதால் மூளை உயிரணுக்களுக்குத் தேவையான உயிர் வாயு, ஊட்டச் சத்து ஆகியவை மூளைக்குசங சென்றடையாத சூழ்நிலை ஏற்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.



# முருங்கை கீரையின் 5 மகத்துவங்கள்

முருங்கைமரத்தின் இலைகள், பூக்கள், காய்கள் என எல்லாமே மருத்துவக்குணங்கள் கொண்டவை. சர்க்கரை நோயாளிகளுக்கு முருங்கையைப்போன்ற மாமருந்து இந்த உலகில் வேறு இல்லை. முருங்கையை புரதச் சத்துக் குறைபாடுகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

- மனிதர்களுக்குத் தேவையான 20 அமினோ அமிலங்களில் 18 இந்தக் கீரையில் உள்ளது. மனித உடலால் தயாரிக்கப்பட இயலாத எட்டுவகை அத்தியாவசிய அமினோ அமிலங்கள் அசைவ உணவுகளில் மட்டுமே கிடைக்கும். அந்த 8 அமிலங்களையும் கொண்ட ஒரே சைவ உணவு முருங்கைக்கீரை.
- ஒரு கைப்பிடி முருங் கைக் கீரையை 1 கரண்டி நெய்யில் வதக்கி, மிளகு மற்றும் சீரகம் பொடித்துப் போட்டு, தினமும் காலையில் சூடான சாதத்தில் பிசைந்து சாப்பிட, ஹீமோகுளோபின் அளவு பல மடங்கு அதிகரிக்கும்.
- குழந்தையின்மைப் பிரச்னைக்கு முருங்கைக்கீரை மட்டுமின்றி, முருங்கைப் பூவும் மருந்தாகப் பரிந்துரைக்கப்படுகிறது.
- முருங்கைக்கீரையில் தயிரில் இருப்பதைவிட 2 மடங்கு அதிக புரதமும், ஆரஞ்சுப் பழத்தில் உள்ளதைப்போல 7 மடங்கு அதிக வைட்டமின் 'சி' கிடைக்கிறது.
- முருங்கைக்கீரையின் சாறு குருதி அழுத்தத்தை சரியான அளவில் வைத்திருக்கவும், மனப்பதற்றத்தைத் தணிக்கவும் வல்லது.



# உடல் எடை குறைய நுங்கு

1. உடல்எடையைக்குறைக்கநினைப்பவர்கள்நுங்கைஅதிகம்சேர்த்துக்கொள்ளலாம். தேவையற்ற கொழுப்புகளை கரைக்கும் தன்மை நுங்குக்கு உண்டு.
2. மலச்சிக்கல் மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டவர்கள் நுங்கைச் சாப்பிட்டால் உடனடியாக நிவாரணம் கிடைக்கும்.
3. சிலருக்கு உடல் உஷ்ணம் காரணமாக, எவ்வளவுதான் தண்ணீர் குடித்தாலும் தாகம் அடங்காது. அவர்கள் நுங்கைச் சாப்பிட்டால், தாகம் அடங்கிவிடும்.
4. நுங்கில் 'ஆந்த்யூசைன்' என்னும் ரசாயனம் இருப்பதால், பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் கட்டிகள் வருவதைத் தடுக்கும்.
5. நுங்கை இளநீருடன் ஜூஸாக அரைத்து அருந்தலாம். தலைக்கு தேய்த்தும் குளிக்கலாம். சருமமும் உடலும் பொலிவடையும்.

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 8

**நவஜீவன்ஸின் கால்பந்தாட்டம்**

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி, பருத்தித்துறை கால்பந்தாட்டலீக்குகளில்பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான தொடரின் ஆட்டங்கள் உடுப்பிட்டி நவஜீவன்ஸ்விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விண்மீன் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்குஇடம்பெறும்ஆட்டத்தில் கலைமதி அணியை எதிர்த்து திக்கம் அணி மோதவுள்ளது.

**யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின்75ஆவதுஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் தொடரின்ஆட்டங்கள்அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மகாத்மாஜி அணியை எதிர்த்து ஒலிம்பிக் அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியைஎதிர்த்துயாழ்ப்பாணப் பல்கலைக்கழகஅணிமோதவுள்ளது. (ம-23)

# இமையூர் புளூஸ் அணி துடுப்பாட்டத்தில் மகுடம்



கரணவாய், ஜன. 8

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் தனது வீரர்களுக்கு இடையில் முன்னெடுத்த துடுப்பாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் இமையூர் புளூஸ் அணி கிண்ணம் வென்றது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. இமையூர்புளூஸ்அணியைஎதிர்த்து இமையூர் ரெட் ரைடர்ஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற புளூஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளைஇழந்து 57 ஓட்டங்களைப்பெற்றது. அதிகபட்சமாக மாதுளன் 20 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சுகந்தன் 3 இலக்குகளையும், அமல், கீர்த்தன் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ரெட் ரைடர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக சுசீலன் 22 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் முரளி 3 இலக்குகளையும், பிறேம் 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள். (ம-108)

# லேடி கில்லர்ஸ் அணி கரப்பந்தில்சாதித்தது

கரணவாய், ஜன. 8

இமையாணன்மத்தியின்கரப்பந்தாட்டத்தொடரில் பெண்கள்பிரிவில்லேடிகில்லர்ஸ் அணிகிண்ணம் வென்றது. இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தால் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவந்த கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம்கழகமைதானத்தில்நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இமையூர்லேடிகில்லர்ஸ்அணியைஎதிர்த்துஇமையூர்பிளைக்ஈகிள்ஸ்அணிமோதியது. 3செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 28:25, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கிண்ணம் வென்றது லேடிகில்லர்ஸ் அணி. (ம-108)



# ரியல் சொசைற்றெட்டிடம் ரியல்மட்ரிட் படுதோல்வி!



ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி படுதோல்வியடைந்தது.

மட்ரிட்டை எதிர்த்து ரியல் சொசைற்றெட் மோதியது. ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத்தில்சொசைற்றெட்டின்முதலாவதுகோலைப் பதிவுசெய்தார் ஜோஸ். மேலதிக கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி.

இரண்டாவதுபாதியின்83ஆவதுநிமிடத்தில் பர்டோ சொசைற்றெட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். முடிவில் ரியல் சொசைற்றெட் அணி 2:0 என்றகோல்கணக்கில் வெற்றிபெற்றது. (ம)

# பீற்றர்ஸ், அராலி அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஜன. 8

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர்விழாவைமுன்னிட்டுநடத்தும்கால்பந்தாட்டத்தொடரில்நேற்றுமுன்தினம்இடம்பெற்றஆட்டங்களில்சென். பீற்றர்ஸ், அராலி அணிகள் வெற்றிபெற்றன.

அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம்பிற்பகல்3.30மணிக்குஇடம் பெற்ற ஆட்டத்தில் சென். ஸ்ரார் அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும்கோல்கள்எதையும்பதிவுசெய்யாததால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத்தீர்மானிக்கவேண்டியநிலை ஏற்பட்டது. 6:4என்றகோல்கணக்கில்சென். பீற்றர்ஸ் அணி வெற்றிபெற்றது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்டநிமிடங்களில்இரண்டுஅணிகளும் கோல்கள் எதையும் பதிவு செய்யாததால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத்தீர்மானிக்கவேண்டியநிலை ஏற்பட்டது. 5:3 என்ற கோல் கணக்கில் அராலிஅணிவெற்றிபெற்றது. (ம-23)

# மட்ரிட்டில் இருந்து இஸ்கோ விலகல்!

ஸ்பானியக் கழகமான ரியல் மட்ரிட்டில் இருந்து நட்சத்திர வீரரான இஸ்கோ விலகவுள்ளார் என்று செய்திகள் வெளிவந்துள்ளன.

ரொனால்டோ ரியல் மட்ரிட்டில்இருந்துவெளியேறியதன் பின்னர் அவரின் இடத்தை இஸ்கோ நிரப்புவார் என்று மட்ரிட் தெரிவித்திருந்தது. இதன்படி இஸ்கோவும் மட்ரிட்டுக்காக சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்த நிலையில் தற்போது அவர் மட்ரிட்டில் இருந்து விலகவுள்ளார் என்று செய்திகள் வெளிவந்துள்ளன. (ம)




# சென். தோமஸ் ஐக்கியம் இலகுவாக வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஜன. 8

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர்விழாவைமுன்னிட்டுநடத்தும்கால்பந்தாட்டத்தொடரில்நேற்றுமுன்தினம்இடம் பெற்ற ஆட்டத்தில் சென். தோமஸ் ஐக்கிய அணி வெற்றிபெற்றது.

அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இந்த ஆட்டம் இடம்பெற்றது. மாதகல் சென். தோமஸ் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியைஎதிர்த்துஅராலிபாரதிவிளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் சென். தோமஸின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் நிரோசன். 32ஆவது நிமிடத்தில் ஜெனிஸ்ரன் தோமஸின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். இரண்டாவது பாதியின் 12ஆவது நிமிடத்தில் சென். தோமஸின் மூன்றாவது கோலைநிரோசன்பதிவுசெய்தார். 33ஆவது நிமிடத்தில் ஜான்சன் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 4:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது சென். தோமஸ் ஐக்கிய அணி. (ம-23)

# வரலாறு படைத்தது இந்தியா






ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிந்ததை அடுத்து 2:1 என்ற அடிப்படையில் கிண்ணம் வென்று வரலாறு படைத்தது இந்திய அணி. இந்திய அணி இதுவரை ஆஸ்திரேலியாவில் வைத்து டெஸ்ட் தொடரைதையும் வென்றதில்லை. ஆனால் இம்முறை சுற்றுப் பயணத்தின் போது இது சாத்தியம் என்று பலரும் கருதினார்கள். மூன்று ஆட்டங்கள் முடிவடைந்திருந்த நிலையில் அவற்றில் இரண்டில் இந்திய அணி வெற்றிபெற்று கிண்ணத்தை இழக்கும் நிலையை ஏற்கனவே தவிர்த்திருந்தது. நான்காவது ஆட்டம் சிட்னியில் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி 7 இலக்குகளை இழந்து 622 ஓட்டங்களைக் குவித்திருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக புஜாரா 193 ஓட்டங்களையும், பன்ட் ஆட்டமிழக்காமல் 159 ஓட்டங்களையும், ஜடேயா 81 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லயன் 4 இலக்குகளையும், ஹசில்வூட் 2 இலக்குகளையும், ஸ்ராக் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 300 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஹரிஸ் 79 ஓட்டங்களையும், டபுஸ்பேஞ் 38 ஓட்டங்களையும், ஹான்ட்ஸ்கொம் 37 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 5 இலக்குகளையும், சமி, ஜடேயா இருவரும் தலா 2 இலக்குகளையும், பும்ரா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

ஆஸ்திரேலியா அணி 'பொலோ ஒன்' முறையில் இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்டது. நேற்றுமுன்தின நாள் முடிவில் அந்த அணி இலக்குச் சரிவில்லாமல் 6 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கவாயா 4 ஓட்டங்களுடனும், ஹரிஸ் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். மழை நேற்றுக் குறுக்கிட்ட நிலையில் மேலதிகமாக ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் ஆட்டம் சமநிலையானது. தொடர் இந்தியாவிடம் சென்றது. (ம)

## இந்திய அணிக்கு அரச தலைவர் வாழ்த்து



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்ற விராட் கோக்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணிக்கு இந்திய அரசதலைவர் ராம்நாத் கோவிந்த் வாழ்த்து தெரிவித்துள்ளார்.


இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான இறுதி டெஸ்ட் போட்டி மழை காரணமாக சமநிலையில் முடிந்ததையடுத்து, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2:1 என்ற கணக்கில் இந்திய அணி வென்று சாதனை படைத்தது.

இந்த நிலையில் இந்தியாவின் அரச தலைவர் ராம்நாத் கோவிந்த் தனது கீச்சகத்தில் தெரிவித்ததாவது;

விராட் கோக்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கிரிக்கெட் தொடரை வென்று வரலாற்று சாதனை படைத்தமைக்கு வாழ்த்துக்கள். துடுப்பாட்டம், பந்துவீச்சு என இந்திய அணியின் ஒட்டுமொத்த சிறப்பான பங்களிப்பைக் கண்டு பெருமை கொள்கிறோம் என தனது வாழ்த்துச் செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எதிரணியை களைப்படையச் செய்யும் உலகின் ஒரே வீரர் புஜாரா மட்டும்தான்

### இயன் சப்பல் அரிய புகழாரம்





டெஸ்ட் ஆட்டங்களுக்கு உரிய இலக்கணத்தின்படி விளையாடி எதிரணியைக் களைப்படையச் செய்யவல்ல உலகின் ஒரே வீரர் புஜாரா மட்டும்தான் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் த்லைவர் இயன் சப்பல்.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நடைபெற்ற தொடரில் புஜாராவின் ஆட்டம் அபாரம். தொடர்ச்சியாகச் சதங்கள், அரைச்சதம் என்று அவர் அமர்க்களப்படுத்தினார். இந்த நிலையில் புஜாராவை வெகுவாகப் புகழ்ந்துள்ளார் இயன் சப்பல்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒட்டுமொத்த ஆஸ்திரேலிய அணியின் கவனமும் விராட் கோக்லிமேல் இருக்க அரங்கின் பின்னணியிலிருந்து வெளிப்பட்டு அத்தனை பேரின் கவனத்தையும் களவாடிச் சென்றுள்ளார் புஜாரா. இந்திய அணிக்கு ஆஸ்திரேலியாவில் முதல் தொடர் வெற்றியைச் சாதிக்க உதவியதுடன் முதல் தரமான பந்துவீச்சு வரிசையை வெறுப்பேற்றி தன்னிடம் சரணடையச் செய்தார். சிட்னியில் கடைசியில் ஆஸ்திரேலியப் பந்துவீச்சு அறுந்து நொந்து நூலாகிப்போனதற்குக் காரணம் புஜாரா.

தனிநபராக புஜாரா ஆஸ்திரேலியப் பந்து வீச்சாளர்களை மண்டியிட வைத்ததோடு, தன் அணியின் சக வீரர்கள் இந்தப் பந்துவீச்சை அடித்து நொறுக்கவும் வகை செய்தார். பன்ட் தனது திறமையை இந்தத் தொடரின் ஆரம்பத்தில் காட்டினார். எனினும் கட்டுக்கோப்பு ஆரம்பத்தில் இருக்கவில்லை. மெல்பேர்ணில் அவரது அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டது. சிட்னியில் கோக்லி ஆட்டத்தை இடைநிறுத்தும் போது இந்த சக்திமிக்க இலக்குக் காப்பாளர் தனது திட்டத்தை நிறைவு செய்திருந்தார்.

புஜாராவின் ஆட்டம் நாம் இந்திய ரசிகராக இல்லாத பட்சத்தில் பார்ப்பதற்கு அவ்வளவு அழகானதாக இருக்காது.

அடித்து நொறுக்கி எதிரணியின் பந்துவீச்சை சரணடைய வைக்கும் இன்றைய உலகில் எதிரணியின் பந்துவீச்சை முனை மழுங்கச் செய்து களைப்படையச் செய்யும் உலகின் ஒரே வீரர் புஜாராதான்- என்றார். (ம)

## சாதனை குறித்து கோக்லி பெருமிதம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக டெஸ்ட் தொடரை எனது அணித் தலைமையின் கீழ் வென்றது என்னுடைய மிகப்பெரிய சாதனை என்று அணித் தலைவர் விராட் கோக்லி பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவுடனான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:1 என்ற கணக்கில் இந்திய அணி வென்று புதிய வரலாறு படைத்துள்ளது. இது தொடர்பில் அணித் தலைவர் கோக்லி தெரிவிக்கையில்;

ஆஸ்திரேலிய மண்ணில் 72 ஆண்டுகளுக்குப் பின்னர் டெஸ்ட் தொடரை வென்ற என்னுடைய மிகப்பெரியசாதனை. இந்திய அணிக்கு பன்னாட்டு அளவில் வித்தியாசமான தோற்றத்தை ஏற்படுத்தியிருப்பதோடு, எங்களாலும் சாதிக்க முடியும் என்பதை வெளிக்காட்டி இருக்கின்றது. எங்களுடைய மாற்றம் இங்கிருந்து ஆரம்பமாக போகின்றது.

நான் அணித் தலைவராக பொறுப்பேற்று 4 ஆண்டுகளுக்குப் பின் ஆஸ்திரேலிய மண்ணில் இப்படி ஒரு தொடரை வெல்வேன் என்று நம்முடியவில்லை.

அணியின் துடுப்பாட்ட வீரர்கள், பந்து வீச்சாளர்கள் மிகச் சிறப்பாக செயற்பட்டிருந்தனர். குறிப்பாக துடுப்பாட்டத்தில் புஜாரா, அகர்வால், பன்ட் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடியிருந்தனர். ஒட்டுமொத்தமாக அனைத்துத் துடுப்பாட்ட வீரர்களும் பங்களிப்பு செய்திருந்தனர்.

பந்துவீச்சாளர்கள் பணி அளப்பரியது. கடந்த தொடர்களைப் போல் அல்லாமல் பந்துவீச்சாளர்கள் ஒருவொருக்கு ஒருவர் கலந்து பேசி ஆலோசித்துப் பந்துவீசினார்கள். அதிலும் எங்களுடைய வேகப்பந்துவீச்சாளர்கள் மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர்களின் சாதனையையும் முறியடித்து விட்டார்கள்.

ஒரே வார்த்தையில் சொல்வதானால் இந்திய அணியை நான் வழிநடத்திச் செல்வதில் நான் பெருமைப்படுவதோடு, எனக்குக் கிடைத்த மிகப்பெரிய கௌரவம், சிறப்புரிமையாகக் கருதுகிறேன். என்னை மிகச்சிறந்த அணித் தலைவராக அணி வீரர்கள் மாற்றி இருக்கிறார்கள். இந்த வெற்றியை மிகச்சிறப்பாக கொண்டாடப் போகிறோம் - என்றார்.

# பாகிஸ்தானை வீழ்த்தியது தெ.ஆபிரிக்கா கிண்ணம் வெல்வதையும் உறுதி செய்தது!



பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 9 இலக்குகளால் வெற்றிபெற்று 3 ஆட்டங்களைக் கொண்ட தொடரில் 2:0 என்ற அடிப்படையில் முன்னிலையில்உள்ளதுதென்னாபிரிக்கஅணி. பாகிஸ்தான் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 177 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அகமட் 56 ஓட்டங்களையும், மசூட் 44 ஓட்டங்களையும், அமீர் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஒலிவர் 4 இலக்குகளையும், ஸ்ரெய்ன் 3 இலக்குகளையும், ரபாடா 2 இலக்குகளையும், பிளன்டர் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 431 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அணித் தலைவர் டு பிளாசிஸ் 103 ஓட்டங்களையும், மார்க்ரம் 78 ஓட்டங்களையும், பவுமா 75 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அமீர், சாஜ் அப்ரிடி இருவரும் தலா 4 இலக்குகளையும், அப்பாஸ், மசூட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள். இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 294 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. சபிக் 88 ஓட்டங்களையும், அசாம் 72 ஓட்டங்களையும், மசூட் 61 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரெய்ன், ரபாடா இருவரும் தலா 4 இலக்குகளையும், பிளன்டர், ஒலிவர் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றதால் தென்னாபிரிக்க அணிக்கு வெறும் 41 ஓட்டங்கள் மட்டுமே இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணி ஓர் இலக்கை மட்டும் இழந்து வெற்றிபெற்றது. முன்னதாக முடிவடைந்த முதலாவது ஆட்டத்திலும் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றிருந்ததால் அந்த அணி கிண்ணம் வெல்வதை உறுதி செய்தது. தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் ஜொகன்ஸ்பேர்க் மைதானத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (ம)


## காணி தேவை

இராச வீதியில் 20 - 30 பரப்பளவைக் கொண்ட காணி தேவை.
குறைந்த விலையில் எதிர் பார்க்கின்றோம்.
-075 744 4401

## வேலை ஆள் தேவை

யாழ்.மருதனார்மடச் சந்தி மற்றும் சுன்னாகத்தில் இயங்கும் தையல்கடை ஒன்றுக்கு தையல் தெரிந்தவர்கள் / பழகுனர்(ஆண், பெண்) இருபாலாரும் தேவை.
077 074 0017

## தேவை

- 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு குறிப்பிட்ட சில பாடநெறிகளை கற்பிக்க ஆசிரியர் / பெண்கள் 35 வயதுக்குட்பட்டவர்கள்தேவை.
- மலேசியாவில் யாழ். குடும்பத்தில் பணிபுரிய 35 வயதுக்குட்பட்ட பெண்கள் தேவை.
- சிறுவர்களுக்கான மேசை வாங்குகள் தேவை.

BCHS Sirampiyady lane, Jaffna.
076 138 0212, 021 222 4550

## வேலைவாய்ப்பு

- புத்தகம் கட்டக்கூடியவர்கள் பழக விரும்புபவர்கள் தேவை (பெண்கள்)
- பொது இடங்களில் புத்தக வியாபாரம் செய்யக் கூடியவர்கள் தேவை (ஆண்கள்)

*வேலை இடம்:* - நல்லூர், யாழ்ப்பாணம்.
-077 21 74 741

✣ வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
11kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்
UK - 600/= France - 700/= Swiss - 800/=
✣ சகல நாடுகளுக்குமான Online Visa விண்ணப்பங்கள் பூர்த்திசெய்துதரப்படும்
Thirumurugan Com Net (Pvt) Ltd
321, K.K.S Road, Jaffna.
கிளைகள்: திருநெல்வேலி, நெல்லியடி, கொழும்பு.
077 755 4528

## Graphic Designer தேவை



தனியார் நிறுவனம் ஒன்றுக்கு
பகுதி நேர (இரவு)
Graphic Designer
தேவை
தொடர்பு:
Mob: 077 9592 628




வாய்ப்பைத்தவற விட வேண்டாம்.
மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான கண்காட்சிக்கூடங்களே உள்ளன.
DON'T MISS OUT, LIMITED STALLS AVAILABLE
More information: RIZWAN +773 959 835
rizwan@saexhibitions.com
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
10th EDITION
JITF 2019
25 26 27
ஜனவரி / January
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Ground - Jaffna
PLATINUM SPONSOR INSEE CEMENT
GOLD SPONSOR Browns A Heritage of Trust
ORGANIZED BY LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH CCIY UNITY IS STRENGTH
OFFICIAL PARTNERS
SUPPORTED BY
ENDORSED BY

தொழினுட்பப் பிரிவு
விஸ்டம்
A/L 2021
2019 DAY

பொறியியற் தொழினுட்பவியல்
K.ரவிக்குமார்
P.சண்முகதாசன்
R.சிவரூபன்
R.நிரூஜன்
P.கிருபாகரன்
P.கணேஸ்

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
A.அரவிந்தன்
P.விமலநாதன்
S.மயூரதாசன்
R.நிரூஜன்
R.S மயூரன்
T.ஆதவன்

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
M.விஸ்ணுதேவன்
P.நிரோஜனன்
P.S ஷாணஸ்

தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்
S.மயூரதாசன்
T.ஆதவன்

விவசாய விஞ்ஞானம்
M.விஸ்ணுதேவன்
P.S ஷாணஸ்

புவியியல்
S.ஶ்ரீகிருஸ்ணா
T.ஹென்றிறீகன்

கணிதம்
S.தஜீதரன்

ஊடகக்கல்வி
S.கோணேசலிங்கம்

சித்திரம்
S.கருணாகரன்

☎ 077 248 7774

## SPOKEN ENGLISH

WITH DIPLOMA CERTIFICATE

O/L, A/L எழுதியோர், இளைஞர் யுவதிகள், மாணவர்களுக்கான 3 மாத உரையாடல் மூலமான ஆங்கிலப்பயிற்சிநெறி.

ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்களும் தமிழ்போல மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 19.01.2019 சனி

1. காலை : 08-10
2. காலை : 10-12
3. மதியம் : 01-03
4. மாலை : 03-05

11.01.2019 வரை பதிவுசெய்வோருக்கு ரூபா 1800 பெறுமதியான *Study pack* மற்றும் சான்றிதழ் முற்றிலும் இலவசம்.

வாரநாள் வகுப்புகள் : செவ்வாய் மற்றும் வியாழன் காலை 08.30 - 10.30

SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர்.
077 621 4567 222 4282


## மரண அறிவித்தல்

### திருமதி குணவதி தேவதாசன்

*(HNB ஓய்வூதியரின் மனைவி)*



காங்கேசன்துறை வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணவதி தேவதாசன் நேற்று (07.01.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா - தில்லையம்பலம் தம்பதிகளின் அன்பு மருமகளும் தேவதாசனின் அன்பு மனைவியும் கோணேஸ்வரன் (HNB, நெல்லியடி), நிரஞ்சனா ஆகியோரின் அன்புத் தாயாரும் மாவதி, ஜெயராஜா (ஆசிரியர், யா/ கொழும்புத்துறை இந்து ம.வி.) ஆகியோரின் அன்பு மாமியாரும் தனுசன், ஆர்த்திகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் குணரட்ணம், காலஞ்சென்ற குலமணி, குணேஸ்பரன், குணபாலச்சந்திரன் (இத்தாலி), குணபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சத்தியேஸ்வரி, சரஸ்வதி, அற்புதராணி, வைத்தீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2019) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**(இலங்கை வங்கி அருகில்)**
K.K.S. Road, **சுன்னாகம்.**

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.